கனடாவின் மூத்த தமிழ் இதழ் 19 வது வருடத்தில்

# விளம்பரம்
VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338
416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

**Dr. Iru Vijayanathan**
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351 Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 19 பாலம் 24 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் DECEMBER 15, 2009

# அமைதிக்காக நத்தார் வேண்டுதல்!

## ஹனுக்கா தினம் - டிசம்பர் 20

ஹனுக்கா தினம் யூத மக்களின் சிறந்த கொண்டாட்ட நாளாகும். இற்றைக்கு 2150 வருடங்களுக்கு முன்னே ஜெருசலேமில் உள்ள பெரிய கோவிலானது சீரியர்களால் கைப்பற்றப்பட்டு மக்கள் சீரியக் கடவுளை வணங்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டனர். உயிரையும் திரணமாக மதித்த ஒரு யூதவீரன் மிகத் தீரத்துடன் போராடி மீண்டும் கோவிலைக் கைப்பற்றிக் கொண்டான். அப்போது ஒரு நாளுக்கு மட்டும் போதுமான எண்ணையுடன் இருந்த அத்தேவாலாய விளக்கு, திரும்பவும் எண்ணெய் வரும்வரை எட்டு நாட்களாக எரிந்து கொண்டே இருந்தது. அந்த அற்புதமான ஐதீகத்தை கரணமாகச் செய்வதற்காக 8 தகழி கொண்ட விளக்கொன்று தயாரிக்கப்பட்டு திரியிட்டு நாளுக்கு ஒவ்வொன்றாக விளக்கு ஏற்றப்பட்டு இறுதி நாள் எட்டு விளக்குகளும் ஒன்று சேர ஒளி வீசும். அந்த விளக்கை மெனோரா (menora) என அழைப்பர்.

அந்த விழா நாட்களில் “ரெய்டின்” எனும் பம்பரம் சுற்றும் விளையாட்டு மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாக விளங்குகின்றது. யூதர்களுக்கு இந்த எட்டு நாட்களும் மிகக் கோலாகலமான நாட்கள் ஆகும்.

## கிறிஸ்மஸ் தினம் - டிசம்பர் 25

இது ஒரு விடுமுறைதினம். தமிழில் நத்தார் தினம் என அழைக்கப்படும். இத்தினம் உலகின் மூலை முடுக்கெல்லாம் கொண்டாடப்படும் விழாவாகி விட்டது. மேல் நாட்டினர் தமது பேரரசினை எல்லாக் கண்டங்களிலும் விரித்துக்கொண்டே செல்லும்போது கூடவே தமது மொழி, தமது மதம், தமது கலாசாரம் என அவற்றையும் பரப்பிக் கொண்டே சென்றனர்.

கிறிஸ்து சமயத்தின் தலையானவர் யேசு கிறிஸ்து நாதர். பிதா சுதன் ஆவி ஆனும் திரித்துவத்தின் சுதனாகியவர் யேசுவாக அவதாரம் செய்தார் என்பது மத தத்துவம்.



அவர் பிறந்தநாள் பற்றிய வாதங்களும் சர்ச்சைகள் எழுந்து கொண்டே இருந்தாலும் எல்லோரும் ஏகமனதாக இந்த நாளையே தெரிவு செய்தருக்கின்றார்கள். பழங்காலத்தில் இருள் மண்டியிருக்கும் இந்நாட்களில் முற்றத்தில் மரம் நட்டு விளக்குக் கூடுகள் கொழுத்தி கெட்ட சக்திகள் அணுகாத வண்ணம் வைத்து விடுவார்களாம். அதுவே நாளடைவில் கிறிஸ்மஸ் மரம் ஆனது. அவதார புருஷர் பிறந்த நாளன்று நடுநிசி 12 மணிக்கு ஆலய மணிகள் ஒலித்து குழந்தை யேசுவை வரவேற்று பூசைகள் நடைபெறும்.

***உலகமக்கள் யாவருக்கும் இந்நாளில் அமைதியும் மகிழ்வும் சேர வாழ்த்துக்கள்.***

# சரணடையச் சென்ற புலிகள் கொலை!

சரணடைந்த புலி உறுப்பினர்களை கொல்லுமாறு கோத்தபாய உத்தரவிட்டார் என தாம் கூறவில்லை.

சரணடைந்த புலி உறுப்பினர்களை கொலை செய்யுமாறு பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார் என தாம் கூறவில்லை என எதிர்க்கட்சிப் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். கோத்தபாயவே சரணடைந்த புலிகளை கொல்லுமாறு உத்தரவிட்டதாக ஞாயிறு ஆங்கில இதழ் ஒன்றுக்கு கூறியிருக்கின்றமை குறித்து எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் வழங்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

உண்மையில் குறித்த செய்தித்தாள் தமது கருத்தை திரிபுபடுத்தி கூறியிருப்பதாக, சரத் பொன்சேகா இதன் போது சுட்டிக்காட்டினார். செய்திதாளுடனான செவ்வியின் போது, நோர்வேயின் ஊடாக கோத்தாபய மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு அறிவித்து, அதன் பின்னர் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் வெள்ளைக் கொடியுடன் சரணடைய முற்பட்டவர்கள் குறித்து, கோத்தாபயவும், பசிலும் என்ன செய்தார்கள் என தம்மிடம் கேள்வி கேட்கப்பட்டது.

இதற்கு, இது தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை எனவும், பின்னர் ஊடகங்களில் வெளியான செய்திகளிலேயே தாம் தெரிந்துக் கொண்டதாகவும் செய்தித்தாளுக்கு பதிலளித்ததாக சரத் தெரிவித்துள்ளார். அத்துடன், இந்த ஊடகங்களுக்கு கோத்தாபய மற்றும் பசில் ஆகியோரில் ஒருவர் வழங்கிய செவ்வியிலேயே நோர்வேயின் முனைப்புக்குறித்து

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

**துரித பணமாற்றுச் சேவை**
• 51 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 18 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

**VASANTHAM HOME SERVICES**
வசந்தம் வீடு சேவைகள்
• Cleaning: Carpet, Duct, Sofa, Car, Window, Home & Office
• Painting & Home Renovation
• Moving to any town
• Airport Services
வீடு, ஜன்னல், சோபா, காரியாலயம் சுத்தம் செய்தல். வர்ணம் பூசுதல். விமானநிலைய சேவை. வீட்டு பொருட்கள் நகர்த்தல்.
Call: 647.296.9374/ 416.836.6791

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

**SATHYA SAIRAM DRIVING SCHOOL**
• உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
• பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
• உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?
அழையுங்கள் - 416-831-5217

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விசேடத்துவம் பெற்றவர் (Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# கனேடிய தொலைத்தொடர்பு சேவையில் ஒரு புது முகம்

கனடாவில் கம்பியில்லா (Wireless) தொலைத்தொடர்பு சந்தை வேகமாக வளர்ந்து வருகின்றது. கடந்த வருடம் மட்டுமே இச்சேவையில் கிடைத்த வருமானம் (Revenue) ஆயிரத்திஅறுநூறு கோடி கனேடிய டொலர் ஆகும். ($16 Billion)

இச்சந்தையின் 95% வருமானத்தை இதுவரை மூன்று பெரிய நிறுவனங்களான Rogers, Bell மற்றும் Telus மட்டுமே தமக்குள் பங்கு போட்டு எடுத்துக்கொண்டிருந்தன.

மார்கழி 11, 2009 இல் கனேடிய மத்திய அரசு எடுத்த முடிவால் இக்கம்பியில்லா தொலை தொடர்பு சேவையின் வருமானத்தை பங்கு போட இன்னொரு நிறுவனமான Globalive என்னும் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ் Globalive நிறுவனத்தின் அதிபரான Anthony Lacavera கூறுகையில் தாங்கள் உடனடியாகவே தங்களது Brand Name ஆன "Wind Mobile" இன் பொருட்களான தொலைபேசி, கைத்தொலைபேசி (Cell Phone) மற்றும் Black Berry போன்றவற்றின் விற்பனையை ஆரம்பிக்க உள்ளதாக கூறினார். இப்பொருட்கள் மார்கழி 14, 2009 இல் இருந்து ரொறொன்ரோ மற்றும் கல்கரி நகரில் உள்ள Block Buster எனும் சினிமா படங்களை வாடகைக்கு விடும் நிறுவனத்தில் உள்ள பிரத்தியேக இடத்தில் (Kiosks) வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

WIND

வெகு விரைவில் Wind Mobile சாதனங்கள் வன்கூவர், ஒட்டாவா மற்றும் எட்மன்ரனிலும் விற்பனைக்கு விடப்பட இருக்கின்றன.

Anthony Lacavera தனது Globalive நிறுவனத்தை 1998 ஆம் ஆண்டு ரொறொன்ரோவில் ஆரம்பித்தார். இந்நிறுவனம் தொலைத்தொடர்பு சாதனங்களை விற்பனை செய்யும் நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இதன் தற்போதைய வருடாந்த விற்பனை வருமானம் 12 கோடி கனேடிய டொலர் ஆகும். ($120 Million). இந்நிறுவனம் கடந்த வருடம் கனேடிய அரசிடம் இருந்து கம்பியில்லா தொலைதொடர்பு சேவை வழங்கும் அதிகாரத்தை பெற்றது.

Globalive நிறுவனத்தின் 65% எகிப்திய நிறுவனமான Orascom தொலைத் தொடர்பு நிறுவனத்திற்கு சொந்தமாகும். இந்நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளின் மிகப்பெரிய தெலைத்தொடர்பு சேவை வழங்கும் நிறுவனமாகும். Orascom நிறுவனத்தின் அதிபர் Naguib Sawiris உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரர்களில் (Billionaire) ஒருவரான எகிப்திய நாட்டை சேர்ந்த Onsi Sawiris இன் மூத்த மகனாவர்.

Globalive இற்கு கனடாவில் கம்பியில்லா தொலைத்தொடர்பு சேவையை செய்ய அனுமதி கிடைத்தவுடனேயே மற்றைய மூன்று நிறுவனங்களினதும் (Rogers, Bell, Telus) பங்குகளின் விலை சரியத் தொடங்கிவிட்டது. Globalive தாங்கள் மேற்கூறிய மூன்று நிறுவங்கள் போல் அல்லாமல் குறைந்த விலையில் மக்களுக்கு இச்சேவையை வழங்கப் போவதாக கூறியுள்ளார்கள்.

## வாசகர்களின் எண்ணங்கள்



விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Scarborough, ON M1S 0C2
2. Fax: 416.282.8059
3. email: vlambaram@sympatico.ca

*நவம்பர் 15, 2009 ஆம் திகதி விளம்பரம் இதழில் வெளிவந்த 'கியுபெக் பாலமும் இரும்பு மோதிரமும்' கட்டுரையை படித்துவிட்டு என்னுடன் பணிபுரியும் சக பொறியியலாளர்களைக் கேட்டேன் என்ன காரணத்திற்காக சின்ன விரலில் மோதிரம் அணிந்துள்ளார்கள் என்று. அவர்கள் அதற்கு மறுமொழி சொல்லவில்லை. அதற்கு நான் இந்தக் கட்டுரையில் இருந்த விளக்கத்தை கொடுத்ததும் அவர்கள் திகைத்து விட்டார்கள்.*

*இந்தக் கட்டுரையிலிருந்து தெரியவருவது, மருத்துவத்துறையில் ஒரு பிழை விட்டால் அது ஒரு உயிரைத்தான் காவு செய்யும் பல உயிர்களை காவு செய்துவிடும். எனவே இந்தக் கட்டுரையில் இருந்து தெரியவருவது பொறியியல் துறையி மற்றைய துறைகளை விட ஆபத்தானது (More Risk) இதுபோன்ற பல கடடுரைள் தொடர்ந்து விளம்பரத்தில் பிசுரிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.*

*நன்றி*

*ம. உமாகரன், ஸ்காபரோ*

\- - -

*விளம்பரம்,*

*எமது பாடசாலை பற்றிய ஒரு கட்டுரை எழுதி உங்கள் தரமான பத்திரிகைக்கு அனுப்பி வைத்திருந்தேன். அந்தக் கட்டுரையை பத்திரிகையில் பிரசுரிக்காதது கவலையைத் தந்தது. எதிர்காலத்தில் இதனைத் தவிர்ப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.*

*அன்பர்: ராஜகுரு குமாரவேல், மார்க்கம்*

தங்களது கட்டுரை கிடைத்தது. ஆனால் நீங்கள் அனுப்பிய கட்டுரை என்ன தேவைக்கு அனுப்பி வைத்தது என்று புரியவில்லை. உங்களது தொடர்பு இலக்கமும் இருக்கவில்லை. இதுபோன்ற பல கடிதங்கள், கட்டுரைகள், எங்கள் பத்திரிகைக்கு வந்தவண்ணம் இருக்கின்றன. அனுப்பப்பட்ட செய்தியின் நோக்கத்தை எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## சரணடையச் சென்ற...

தெரிவிக்கப்பட்டிருந்ததாக சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க முடியாவிட்டால் பதவியை இராஜினாமா செய்வேன் என ஜெனரல் சரத் பொன்சேகா சூளுரைத்துள்ளார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றியடைந்தவுடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு முடியாத பட்சத்தில் தமது பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் பதவியிலிருந்து விலகி விடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் வரப்பிரசாதங்களை அனுபவித்துக் கொண்டு நிம்மதியாக இருந்திருக்க முடியும் என்ற போதிலும் மக்களுக்காக சேவையாற்றும் நோக்கில் தாம் அரசியலில் களமிறங்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran**, P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc.** Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga -**905.712.2666**

# கனடாவின் கதை - 10

## வடமேற்கின் உட்பகுதிக் கலாசாரத்தின் இறுதிக்காலம்

இப்பகுதி கிழக்கு மேற்காக அலாஸ்காவிலிருந்து ஹட்சன் வளைகுடா வரைக்கும் தெற்கு வடக்காக ஆட்டிக்குச் சமுத்திரக்கரையிலிருந்து பிரிட்டிஷ் கொலம்பியா முதல் மனிற்றோபா வரைக்குமான மேற்கு மாகாணங்கள் யாவையும் உள்ளடக்கிய பெரும் பகுதியாகும். இப்பகுதியின் வடபகுதியில் இன்யூட் மக்களும், தென்பகுதியில் அல்கொங்கியன் பேசும் மக்களும் வாழ்ந்தனர். இப்பகுதியில் பல்வேறு தாவர வலயங்கள் காணப்பட்டன. இவற்றுள் முக்கியமானவை, வாடைக் காற்று வீசும் காடுகள், இலைக்கன் காடுகள் மரங்களற்ற சதுப்பு நிலங்கள். இவற்றின் எல்லைகள் காலத்துக்கு காலம் மாற்றங்களடைந்தன. இப் பகுதியில் பேயர் வாவி ஸ்லேவ் வாவி, அதபாஸ்கன் வாவி போன்ற பெரும் வாவிகளும், ஆறுகளும் பனிப் பாறைகள் கரையும் போது இழுத்து வரப்பட்ட மண் குவியல்களும் காணப்பட்டன. இப்பகுதியின் மேற்கேயுள்ள கோடிலெறா (Cordillera) பிரதேசத்தில் மலைகள், உயர்நிலங்கள், பள்ளத்தாக்குகள் காணப்படுகின்றன. இதன் மேற்கில் யுகோன் ஆறு, மக்கென்சி ஆற்றின் மேற்குக் கிளைகள் ஆகியன காணப்படுகின்றன. இப்பகுதி பெரும்பாலும் அதபாஸ்கன் மொழிகள் பேசும் மக்களால் நிரம்பியிருந்தது. இவர்களின் முன்னோர் பல்லாயிரம் வருடங்களாக இப்பகுதியில் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.



படம் - 1 படத்தில் காட்டப்பட்டுள்ள மண்திடல்களின் மீது கலை மான்கள் நடந்து செல்லும். இவற்றின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வேட்டைக்காரர் சென்றுவேற்றை வேட்டையாடுவர். இவ்வாறான மண் திடல்கள் மக்கென்சி, கீவற்றின் மாவட்டங்களில் பெருமளவில் காணப்படுகின்றன.

படம் - 1 கலைமான் அடிச்சுவடுகள்

கலைமான்கள் இக்கலாசாரத்தின் முக்கிய உயிரினங்களாக இருந்தன. இறைச்சிக்கு மட்டுமல்லாது தோல், தசைநார்கள், என்பு, கொம்பு ஆகியவற்றுக்கும் இவை பெரிதும் உதவின. இலையுதிர் காலத்திலும் பனிக்காலத்தின் ஆரம்பத்திலும் மீன்கள் பெரிதும் உதவின. எனினும் பனிக்காலச்சேமிப்பு உணவாகவும் நாய்களுக்கு உணவாகவும் கலைமான்களே பெருமளவு உபயோகிக்கப்பட்டன. கலைமான்கள் இல்லையெனின் மக்கள் இல்லாது போயிருப்பார்.இவ்வாறே மீன்களும் மக்களுக்கு பயன்பட்டன. மற்றைய உணவுகள் இவ்விரு உணவுகளுக்கும் குறை நிரப்பும் உணவுகளாகப் பயன்படுத்தப்பட்டன.

**- துறையூரான் -**

பனிக்காலத்தில் உணவுகள் முக்கியமானவையாய் இருந்தன. குறுகிய கோடைகாலத்தில் 24 மணித்தியாலமும் சூரிய வெளிச்சம் இருந்தது. பனிக்காலத்தில் 6 மணித்தியால வெளிச்சமே இருந்ததால் உணவு தேடுவதில் பல சிரமங்கள் இருந்தன. பெரும்பாலான மக்கள் குடியமர்வுகள், கலைமான்களும், மீன்களும் கிடைப்பதைக் கொண்டே அமைந்திருந்தன.

மக்களின் உடலைமைப்புப் பற்றிய தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லை. சவ அடக்கச் சடங்குகள் எதுவும் இக்கலாசார மக்களிடையே காணப்பட்டதாக தெரியவில்லை. இறந்தோரை சாதாரணமாகக் குழி தோண்டிப் புதைத்திருக்கலாம். இம்மக்கள் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்துவதிலும் ஆவிகள் மீது தொடர்பு ஏற்படுத்தும் சமன்கள் (Shamans) மேல் நம்பிக்கை கொள்வதிலும் நாட்டமில்லாது இருந்தனர். மிருகங்களுக்கும் மனிதருக்குமிடையில் உள்ள முக்கிய தொடர்பு பற்றியும் இவர்கள் அக்கறை கொள்ளாது இருந்தனர்.

இம் மக்களுக்கு ஐரோப்பியரோடு ஏற்பட்ட தொடர்பு காரணமாக வடக்கிலிருந்த இன்யூட் மக்களுடன் தென்கிழக்கிலிருந்த கிறீ மக்களுடனும் பகை ஏற்பட்டது. 5 ஆம் காலத்தின் போது தலத்திலே கலாசாரமும் கிழக்கேயுள்ள பகுதி முழுவதிலும் பரவி ஆரம்ப பலேயோ - எஸ்கிமோ கலாசாரத்தை அழித்து நிலைபெற்றது. பலேயே எஸ்கிமோ கலாசாரத்தை இவர்கள் வெளியேற்றினரா அல்லது அவர்கள் விட்டு விலகிய வெற்றிடத்தை நிரப்பினரா? என்பது தெளிவாகவில்லை. இக் கலாசாரங்கள் இரண்டும் இந்த நிலப்பரப்பிலே காணப்பட்டன என்றும் அவை கலை மான்கள் கிடைக்கும் இடமாகவே இருந்தன என்றும் அறிய முடிகின்றது. கி.மு1500 முதல் இந் நிலப்பகுதியில் வாழ்ந்த பலேயே எஸ்கிமோ கலாசார மக்கள் என்ன காரணத்தினால் இப்பகுதியை விட்டு விலகினர் என்பதற்கான காரணங்கள் எதுவும் தென்படவில்லை. காலநிலையும் கலைமான்கள் கிடைத்தலும் மாற்றமடையாத போதும் இவர்கள் ஏன் விலகிச் சென்றனர் என்பது புரியாத புதிராக உள்ளது.

பலேயோ எஸ்கிமோ கலாசாரம் அலாஸ்காவின் வட பகுதிகள் யூகோன் மக்கென்சி மாவட்டத்தின் வடமேற்கு பகுதிகள் ஆகியவற்றிலிருந்து மறைந்து போயிற்று. போர் காரணமாகவோ பகைமை காரணமாகவோ இது மறைந்து போனதற்கான சான்றெதுவும் கிடைக்கவில்லை. இக் கலாசாரத்தின் வெற்றிடத்தை கிழக்கில் தல்த்தேலேய் (Thaltheilai) குழுமமும் மேற்கில் ராயி (Taye) வாவிக் குழுமமும் நிரப்பின. இக் கலாசார சமுதாயங்கள் பல குடும்பங்களை உள்ளடக்கிய உள்ளூர் குழுக்களை கொண்டிருந்தன. இக் குழுக்கள் கட்டுக்கோப்புள்ள ஒரு சமுதாயமாக இருக்கவில்லை. இவர்கள் அடிக்கடி இடம் மாறிய காரணத்தால் பிற கலாசாரங்கள் போன்று சமுதாயப் படிநிலைமைகளைக் கொண்டிருக்கவில்லை. பலதார மணங்கள் பரவலாகக் காணப்பட்டன. இச்சம்பிரதாயம் எவ்வளவு காலத்துக்கு நிலைத்திருந்தது என்பதற்குச் சான்று எதுவும் கிடைக்கவில்லை.

ஆதாரம்: *History of native people canada*


**A1 கொழும்பு**

போட்டோ ஸ்ருடியோ & விடியோ

அனைத்து போட்டோ, விடியோ படப்பிடிப்புகள்

எல்லா வகையான போட்டோ விடியோ வேலைகள்

2 பாஸ்போட் $5.00 2 லான்டட் காட் $5.00

2 சிற்றிசன் $5.00 - 2 அனைத்துவிதமான ஐ. டி.$5.00

3 - 5X7 ஸ்ருடியோ போட்டோ $15.00

From: அல்பத்துடன் போட்டோ PACKAGES

25 - 5X7 பிறந்த நாள் போட்டோக்கள் $75.00

50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $150.00

100 - 5x7 திருமணவிழா $300.00

2296 EGLINTON AVE. EAST @ BIRCHMOUNT ROAD

UNIT 3 LOWER LEVEL, Web: www.tamilsyellowpeages.com

Mobile: 416-752-4444 Tel: 416-755-2333

STATE FARM INSURANCE

DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE

Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800

Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800

தமிழில் உரையாடுவோம்

1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3

Intersection: Markham Road & Ellesmere Road

State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998


435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# ஆன்மீக ஒவ்வாமை

**உள்நிலையில் நீங்கள் எதையாவது செய்தாலே ஒழிய, அமைதியாக இருப்பது என்றால் என்ன? ஆனந்தமாக இருப்பது என்றால் என்ன? என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. வெறுமனே உடல், மனம் ஆகியவையாக மட்டும் இருக்கிற எல்லைகளைக் கடந்து எப்படி போவது என்றும் தெரியாது.**



## சத்குரு வாசுதேவ்

எல்லோருடைய வாழ்க்கைக்குள்ளும் இந்த ஆன்மீக பரிமாணம் வருவது மிக அவசியம். பலரும் ஆன்மீகம் என்றால் ஏன் ஒருவித ஒவ்வாமையோடு இருக்கிறார்கள் என்றால், பலரும் அவர்களிடம் ஆன்மீகமென்பது எல்லாவற்றையும் துறந்து விட்டு மலை முகடுகளுக்குப் போவதென்று சொல்லுகிறார் கள். அங்கே எல்லோரும் போக வேண்டும் என்று விரும்பினால் கூட எல்லோருக்கும் போதிய இடம் கிடையாது. எனவே, உங்கள் அலுவலகத்தில், உங்கள் வீடுகளில், உங்கள் வீதிகளில் எல்லா இடங்களிலும் ஆன்மீகத் தன்மையோடு இருப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வது அவசியம். ஏனென்றால் ஆன்மீகம் என்பதே உள்நிலை செயல்பாடே தவிர வெளியே செய்கிற செயல்கள் அல்ல. ஆன்மீகம் என்பது உள்நிலையில் ஒரு சரியான சூழ்நிலையை உருவாக்கித் தருகிற ஒரு விஞ்ஞானம். ஏனென்றால் உள்நிலையில் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து தான் உங்கள் வாழ்வின் தரம் இருக்கிறது. எவ்வளவு ஆனந்தமாக, எவ்வளவு அமைதியாக இந்த விநாடியில் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்துதான் இந்த தன்மையிருக்கிறது. அதை நீங்கள் முழுமையாக நிராகரித்து விட முடியாது. உள்நிலையில் நீங்கள் ஏதேனும் செய்யாவிட்டால் அன்பாகவும், அமைதியாக வும், ஆனந்தமாகவும் இருப்பது என்றால் என்ன? உங்களுக்குத் தெரியாது. வெறுமனே உடல், மனம் ஆகியவற்றின் எல்லைகளுக்குள் இருப்பதைக் கடந்து எப்படிப்போவது என்று உங்களுக்குத் தெரியாது.

தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www. ishafoundation.org
www. ishayoga.org

உடம்பு என்பது இந்த பூமியில் நீங்கள் சேகரித்தவற்றின் தொகுப்பு. நீங்கள் போகிறபோது உடம்பில் உள்ள ஒரு அணுகூட உங்களுடன் வராது. எனவே, உடல் உங்களுடயது அல்ல. இந்த மனமும் உங்களுடையது அல்ல. இதுவும் சேகரிக்கப்பட்ட ஒன்றுதான். நீங்கள் எந்தச் சூழலில் வளர்ந்தீர்களோ அதிலிருந்து சேகரிக்கப்பட்ட தொகுப்புதான் உங்கள் மனம். எனவே இந்த பரிமாணங்களைக் கடந்து பார்ப்பதற்கு இன்னொரு அம்சம் இருக்கிறது.

உங்கள் நினைவாற்றலை நான் முழுக்க அழித்துவிட்டால் நீங்கள் என்னுடன் இருப்பீர்கள். உங்கள் குடும்பம் உங்களைப் பொறுத்தவரை இருக்காது. உங்களுடைய சமூக அந்தஸ்த்து இருக்காது. உங்கள் தொழில் இருக்காது. இந்த உலகில் உங்களுடயது என்று நினத்திருப்பது எதுவுமே இருக்காது. ஆனால் நீங்கள் இருப்பீர்கள். எனவே, இந்த அடையாளப்படுத்தியிருக்கிற அம்சங்களையும் தாண்டி 'நீங்கள்' என்ற ஒன்று இருக்கிறது. அந்த 'நீங்கள்' என்ற தன்மைக்கும் நீங்கள் வெளியிலிருந்து சேகரித்திருக்கிற இந்த பிம்பங்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. ஆனால் வெளியிலிருந்து சேகரித்த விஷயங்கள் சுமையாக ஒரு மலைபோல குவிந்திருப்பதால் உங்களையே உங்களால் பார்க்க முடியவில்லை. உண்மையிலேயே "நீங்கள் யார்?" என்பதைக் காட்டிலும் உங்கள் அடையாளங்கள் தான் மிக முக்கியமென்று நினைத்திருப்பீர்கள். இப்போது உங்கள் பார்வை மாறுகிறபோது இன்னொரு பரிமாணம் வெளிப்படத் துவங்கும்.

ஆன்மீகத்தின் முழு செயல்முறையே, குறிப்பாக யோகாவின் செயல்முறையே ஐம்புலன்கள் கடந்த அனுபவம் நோக்கி உங்களைக் கொண்டு செலுத்துவதுதான். "நீங்கள்" என்ற குறுகிய எல்லைக்குள் எதை உணர்ந்திருக்கிறீர்களோ, அதைக் கடந்து போகிறபோது வாழ்வின் இன்னொரு பரிமாணத்தை மிக நிச்சயமாக நீங்கள் உணருவீர்கள். அப்போது நீங்கள் உணர்வது ஸ்தூலம் சார்ந்ததாக இருக்காது. ஆன்மீகம் சார்ந்ததாக இருக்கும். உங்கள் தன்மையினுடய தெய்வீகத்தை உணருவீர்கள். வாழ்க்கையை இன்னும் ஆழமாக நீங்கள் உணரத் தயாராகவும், விருப்பத்தோடும் இருப்பீர்களேயானால் அதற்கான வழிகள் என்னிடம் உண்டு. அப்போது உண்மையிலேயே நீங்கள் யார் என்று உணருகிற ஆனந்தத்தையும், மகிழ்ச்சியையும் நீங்கள் அனுபவிக்கத் தொடங்குவீர்கள்.

என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



Interest Rate going up soon
best time to buy Real Estate

ESSO Gas Station with property at HWY exit to Quebec


Scarborough Bankrupt Sale
30,000sq.ft Banquette Hall in 4.5 acre Land with zoning

Buy low, Sell high - 40 years Low Interest
வங்கியின் பணத்தில் முதலீடு - 5 வருடத்தில் Cash out
5 year plan 3.9% interest Power of Sale
Properties with Tenant's Pay the cost
What's your Risk?

வீடும் வியாபாரமும் Business Zoning
Future long term Investment


பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு
அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666
150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

APARTMENTS FOR RENT



$250 Move In Bonus
Best Building in Scarborough!
Clean, family building, FREE parking.
Close to schools, bus stop, Tamil store in building.
Pl. Call: 416.264.2818

# H1N1 ஃபுளூவைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன



- ஃபுளூ காலம் இன்னமும் முடியவில்லை. ஏப்ரல் மாதம்வரை அது தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- H1N1 ஃபுளூவானது புதியதும், வித்தியாசமானதும், வெகுவிரைவில் பரவக்கூடியதுமாகும்.
- H1N1 ஃபுளூ அனைவரையும், ஆரோக்கியமான இளையவர்களைக்கூட பாதிப்பதோடு கடுமையான சுகவீனத்திலும் வைத்தியசாலையில் அனுமதிப்பதிலும் விளைவடையலாம்.
- வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரில், சுமார் பாதிப்பேர் 20 வயதுக்கும் குறைந்தவராவர்.
- H1N1 ஃபுளூ ஊசி பாதுகாப்பனது, உங்களையும் உங்கள் குடும்பத்தையும் உங்கள் சமூகத்தையும் பாதுகாக்க சிறந்த வழி இதுவே, மற்றும் இந்த ஊசி இலவசமானது.

**உங்கள் சுகநல பராமரிப்பாளருடன் பேசுங்கள்.**
**அருகில் உள்ள ஃபுளூ கிளினிக்கை தெரிந்துகொள்ள, செல்லுங்கள்:**

**ontario.ca/flu**

**அல்லது சர்வீஸ் ஒன்டாரியோ இன்ஃபொலைனை அழையுங்கள்: 1-800-476-9708**
**TTY: 1-800-387-5559**

## இந்த வருடம் ஒரு வித்தியாசமான ஃப்ளூக் காலம்

**ஃப்ளூவிலிருந்து உங்களை பாதுகாத்திடுங்கள்**



H1N1 ஃப்ளூ ஊசியைப் போட்டுக்கொள்ளவும் | கைகளை நன்றாக அடிக்கடி கழுவவும் | அல்கஹோல்கொண்ட கைசுத்தமாக்கி மருந்தை அருகில் வைக்கவும் | சட்டைக் கையில் அல்லது புஜத்தில் இருமு அல்லது தும்மவும் | மேற்பரப்பு மற்றும் பொருட்களில் கிருமி நீக்கவும்

Ontario

# காசேதான் கடவுளடா!

# விளையாட்டுத் தகவல்கள் 273

சர்ச்சைக்குரிய பிரான்ஸ் vs அயர்லாந்து ஆட்டத்தில் யாருமே எதிர்பார்க்க முடியாத அளவிற்கு உலக உதைபந்தாட்ட சம்மேளனம் (FIFA) பழியை உதைபாந்தாட்ட நடுவர்மேல் போட்டுவிட்டு ஆட்டத்தை திரும்ப வைக்க முடியாது என அறிவித்து விட்டு தப்பித்துவிட்டது. இதை சற்று உற்று நோக்கினால் கடந்த உதைபந்தாட்ட சரித்திரத்தில் 'காசேதான் கடவுளடா' போல வருமானத்தைக் குவிக்கும் பணக்கார நாடுகளை மட்டுமே FIFA முன் தள்ளுகிறது. பின்தங்கிய நாடுகள் மீண்டும் மீண்டும் உதைபந்தாட்ட உலகில் பின் தங்கியே இருக்கின்றன.

## சர்ச்சைக்குரிய கோல்: பிரான்ஸ் போட்டியை மீண்டும் நடத்த வேண்டும் அயர்லாந்து வலியுறுத்தல்

2010-ம் ஆண்டுக்கான உலக கோப்பை கால்பந்து போட்டி தென்ஆப்பிரிக்காவில் நடக்கிறது. போட்டியை நடத்தும் தென் ஆப்பிரிக்கா நேரடியாக தகுதி பெற்றது. மீதியுள்ள 31 நாடுகள் தகுதி சுற்றில் விளையாடி தகுதி பெற்றுள்ளன. பாரீஸ் நகரில் நடைபெற்ற பிரான்ஸ் - அயர்லாந்து அணிகள் மோதிய தகுதி சுற்றில் ஆட்டம் சர்ச்சையில் முடிந்தது. பிரான்ஸ் வீரர் வில்லியம்ஸ் கல்லாஸ் அடித்த கோலால் சர்ச்சை ஏற்பட்டது. அந்த அணி கேப்டன் ஹென்றி கையால் பந்து பட்டு சென்றதைதான் வில்லியம்ஸ் கோல் அடித்தார். இதை நடுவர் கவனிக்க தவறிவிட்டார். ஹென்றி மோசடி செய்து விட்டதாக அயர்லாந்து ரசிகர்கள் கூச்சலிட்டனர். பந்து கையில் பட்டதை ஹென்றியும் ஒப்புக்கொண்டார். ஆனால் நான் நடுவர் இல்லை என்று அவர் கூறி இருக்கிறார்.

சர்ச்சைக்குரிய இந்த போட்டியின் முடிவால் அயர்லாந்து வாய்ப்பை இழந்தது. இதனால் இந்தப்போட்டியை மீண்டும் நடத்த வேண்டும் என்று அயர்லாந்து வலியுறுத்தி உள்ளது. இது தொடர்பாக அயர்லாந்து நாட்டு நிதி மந்திரி டெர்பனட் கூறும்போது நாங்கள் வெற்றி பெற வேண்டிய போட்டி "buh" ஆனது. எங்களை ஏமாற்றி விட்டனர் என்றார். இந்தப்போட்டியை மீண்டும் நடத்த கோரி அயர்லாந்து கால்பந்து சங்கம் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தை வலியுறுத்தியுள்ளது. அயர்லாந்தின் வேண்டுகோள் கடிதம் வந்துள்ளதாக சர்வதேச கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.

## தற்கொலை செய்து கொண்ட ஜெர்மனி கால்பந்து வீரருக்காக ரசிகர்கள் அஞ்சலி

ஜெர்மனி கால்பந்து அணியின் கோல் கீப்பர் ராபர்ட் என்கே தற்கொலை செய்து கொண்டதையடுத்து அவரது நினைவாக ஹேன்னோவர் விளையாட்டு மைதானத்தில் கால்பந்து ரசிகர்கள் அவருக்கு மலரஞ்சலி செலுத்தினர். சுமார் 45,000த்திற்கும் மேற்பட்ட கால்பந்து ரசிகர்கள் இந்த மலரஞ்சலியில் ஈடுபட்டனர். ஹான்னோவரில் உள்ள தன் வீட்டருகே ரயிலின் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் என்கே. இதனால் ஜெர்மனியே கதி கலங்கியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த 6 வருடங்களாக தனது ஆட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் தோல்வி பயம் பீடித்து வாழ்ந்து வந்த அவர் கடைசியில் தன் வாழ்வை முடித்துக் கொண்டார்.

## மரடோனாவிற்கு 2 மாதம் தடை விதிப்பு

உலகக் கோப்பை கால்பந்திற்கு அர்ஜென்டீனா போராடி தகுதி பெற்றதையடுத்து விமர்சனம் செய்த பத்திரிக்கையாளர்களிடம் அசிங்கமாக நடந்து கொண்டதற்காக அர்ஜென்டீனா கால்பந்து அணியின் பயிற்சியாளர் டீகோ மரடோனாவிற்கு உலகக் கால்பந்து கூட்டமைப்பு 2 மாத காலம் தடை விதித்துள்ளது. இதன் மூலம் மரடோனா கால்பந்து தொடர்பான எந்த நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது. ஜனவரி 15ஆம் தேதி வரை மரடோனா தடை நீடிக்கும். விசாரணையின் போது தவறை ஒப்புக் கொண்ட மரடோனா, உலகக் கால்பந்து ரசிகர்களிடம் தன் வருத்தத்தை தெரிவித்தார்.

## 72 வருட சாதனை முறியடிப்பு: ஜெயவர்த்தனே ஜோடி உலக சாதனை

அகமதாபாத் டெஸ்டில் இலங்கை அணியின் 6-வது விக்கெட்டான ஜெயவர்த்தனே - பிரசன்னா ஜெயவர்த்தனே ஜோடி புதிய உலக சாதனை படைத்தது. இந்த ஜோடி 351 ரன் குவித்தது. இதன்மூலம் 72 ஆண்டுகால சாதனை முறியடிக்கப்பட்டது. இதற்கு முன்பு 1937-ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக அவுஸ்திரேலியாவின் பிங்கின்டன்- பிராட்மேன் ஜோடி 346 ரன் குவித்ததே சாதனையாக இருந்தது. ஜெயவர்த்தனே 275 ரன்களை குவித்து இந்தியாவுக்கு எதிராக சாதனை புரிந்தார். இதற்கு முன்பு 1999-ம் ஆண்டு கொழும்பில் இந்தியாவுக்கு எதிராக 242 ரன் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது. இலங்கை அணி இந்தியாவுக்கு எதிராக 2-வது அதிகபட்ச ஸ்கோரை எடுத்தது. 1997-ம் ஆண்டு அந்த அணி இந்தியாவுக்கு எதிராக 952 ரன் குவித்து இருந்தது.

## 30 ஆயிரம் ரன்கள் குவித்து சச்சின் உலக சாதனை

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் மொத்தம் 30 ஆயிரத்துக்கும் அதிகமான ரன்களைக் குவித்து இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் உலக சாதனை படைத்துள்ளார். 30 ஆயிரம் ரன்களை எடுக்கும் முதலாவது வீரர் சச்சின் என்பது குறிப்பிடத்தக்கது. ஆமதாபாதில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான டெஸ்டின் 2-வது இன்னிங்ஸில் சச்சின் 35 ரன்களை எடுத்தபோது அவர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 30 ஆயிரம் ரன்கள் எடுத்த முதல் வீரர் என்ற சாதனையைப் புரிந்தார். 1989-ம் ஆண்டு டெஸ்ட் போட்டியில் அறிமுகமான சச்சின் தற்போது கிரிக்கெட் வாழ்க்கையில் 21-ம் ஆண்டில் நுழைந்துள்ளார். 20-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் அவர் இந்தப் போட்டியில் சதமடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். டெஸ்ட் போட்டிகள், ஒரு தின போட்டிகள், சர்வதேச டி20 போட்டிகள் என மூன்றிலும் சேர்த்து அவர் தற்போது 30,065 ரன்களைச் சேர்த்துள்ளார்.

சச்சின் குவித்த ரன்கள் விவரம்:

| போட்டி | ரன்கள் | சதம் | அரைசதம் | சராசரி |
|---|---|---|---|---|
| டெஸ்ட் | 160 | 12,877 | 43 53 | 54.79 |
| ஒரு நாள் | 436 | 17,178 | 45 91 | 44.50 |
| டி20 | 1 | 10 | - - | 10.00 |

டெஸ்ட் போட்டியில் 13 ஆயிரம் ரன்னை நெருங்கும் தெண்டுல்கர் 123 ரன் தேவை. கிரிக்கெட்டில் பல்வேறு உலக சாதனைகளை படைத்தவர் சச்சின் தெண்டுல்கர் டெஸ்டில் அதிக ரன், அதிக சதம், ஒருநாள் போட்டியில் அதிக ரன் உள்பட பல சாதனைகளை புரிந்துள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரின் போது அவர் 17 ஆயிரம் ரன்களை கடந்தார். இலங்கைக்கு எதிரான அகமதாபாத் டெஸ்டில் அவர் ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்டை சேர்த்து 30 ஆயிரம் ரன்னை கடந்து சாதனை படைத்தார். தெண்டுல்கர் மேலும் ஒரு மைல்கல்லை நோக்கி நெருங்கியுள்ளார். டெஸ்டில் அவர் 13 ஆயிரம் ரன்னை தொட இருக்கிறார். அதற்கு இன்னும் 123 ரன் தேவை. 160 டெஸ்டில் விளையாடி அவர் 12,877 ரன் எடுத்துள்ளார். 43 சதமும், 53 அரை சதமும் அடித்துள்ளார். லாரா (வெஸ்ட் இண்டீஸ்) 11,953 ரன் எடுத்து 2-வது இடத்திலும், பாண்டிங் (அவுஸ்திரேலியா) 11,345 ரன் எடுத்து 3-வது இடத்திலும் உள்ளனர். அகமதாபாத் டெஸ்டில் முதல் இன்னிங்சில் சொதப்பிய தெண்டுல்கர் 2-வது இன்னிங்சில் சதம் அடித்து முத்திரை பதித்தார். அவர் சிறப்பாக ஆடி தோல்வியை தவிர்க்க முக்கிய பங்கு வகித்தார்.

## இலங்கையை வீழ்த்தி இந்தியா இன்னிங்ஸ் வெற்றி

கான்பூரில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி தன் இரண்டாவது இன்னிங்சில் 269 ரன்களுக்கு சுருண்டது. இதனால் இந்தியா ஒரு இன்னிங்ஸ் மற்றும் 144 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று டெஸ்ட் கிரிக்கெட்டில் தன் 100-வது வெற்றியைப் பெற்றது. ரன்கள் அளவில் இந்தியா பெறும் 3-வது மிகப்பெரிய வெற்றி இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது. முதலில் ஆஞ்சேலோ மேத்யூஸ், ஜாகீர் கானின் பவுன்சருக்கு ராகுல் திராவிடிடம் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். பிரசன்னா ஜெயவர்தனேயிற்கு ஹர்பஜனின் வீசிய அபாரமான பந்து இன்றைய தினத்தின் சிறப்பான பந்தாகும். அவர் பவுல்டு ஆனார். ஹெராத், ஹர்பஜன் பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார். முரளிதரன் களமிறங்கி அனாயாச மட்டை சுழற்றலில் இறங்கினார் 11 பந்துகளில் 3 பவுண்டரிகள் 2 சிக்சர்கள் சகிதம் அவர் 29 ரன்களை எடுத்து ஓஜா பந்தில் பௌல்டு ஆனார். 191.8 என்ற நிலையிலிருந்து சம்ரவீராவும், அஜந்தா மெண்டிசும் சற்று நேரம் வெறுப்பேற்றினர் இருவரும் இணைந்து 9-வது விக்கெட்டுக்கு 73 ரன்களை சேர்த்தனர். மெண்டிஸ் 27 ரன்களில் யுவ்ராஜ் பந்தில் பௌல்டு ஆனார். கடைசியாக வெலெகேதரா 4 ரன்கள் எடுத்து ஓஜா பந்தில் அவரிடமே கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். பிட்சின் தன்மையை புரிந்து கோண்டு ஆடிய சமரவீரா 78 ரன்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்திய அணியில் ஹர்பஜன் 3 விக்கெட்டுகளையும் ஓஜா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். சுமார் ஓராண்டு இடைவெளிக்கு பிறகு டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடும் ஸ்ரீசாந்த் இந்த டெஸ்டில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றி வெற்றி வழி வகுத்ததால் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டனர். 3-வது இறுதி டெஸ்ட் வரும் 3ஆம் தேதி மும்பையில் நடைபெறுகிறது

## மேற்கிந்திய தீவுகள் விக்கெட்டுகள் சரிவு

பிரிஸ்பேனில் நடைபெறும் ஆஸ்ட்ரேலிய-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் அவுஸ்ட்ரேலியா தன் முதல் இன்னிங்ஸில் 480 ரன்களுக்குக் 8 விக்கெட்டுகளை இழந்திருந்தபோது டிக்ளேர் செய்தது. தொடர்ந்து ஆடிய மேற்கிந்திய அணி ஆட்ட முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 134 ரன்கள் எடுத்துள்ளது. டௌலின் என்ற புதிய வீரர் 40 ரன்களுடனும் தினேஷ் ராம்தின் 22 ரன்களுடனும் விளையாடி வருகின்றனர். மிட்செல் ஜான்சன் 2 விக்கெட்டுகளையும் வாட்சன், ஹில்ஃபென் ஹாஸ், சிடில் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். முன்னதாக 322/5 என்று துவங்கிய அவுஸ்ட்ரேலியா பிராட் ஹேடின் விக்கெட்டை முதலில் இழந்தது அவர் 38 ரன்கள் எடுத்து ராம்பால் பந்தில் ஆட்டமிழந்தார். உடனேயே ஜான்சன் 7 ரன்களில் சுலைமான் பென் பந்தில் ஆட்டமிழந்தார். ஆனால் நார்த் (79), ஹாரிட்ஸ் (50 நாட் அவுட்) இணைந்து 58 ரன்களை விரைவில் குவித்தனர். நார்த் பிராவோ பந்தில் ஆட்டமிழந்தார். கடைசி யில் பீட்டர் சிடில் 20 ரன்களைச் சேர்க்க ஆஸ்ட்ரேலியா 480-8 என்று டிக்ளேர் செய்தது. மேற்கிந்திய அணியில் டிவைன் பிராவோ 3 விக்கெட்டுகளையும் பென் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

மேற்கிந்திய அணி தன் இரண்டாவது இன்னிங்ஸை துவங்கிய போது ஹில்ஃபென் ஹாஸ் பந்துகளை கிறிஸ் கெய்ல் சாத்து சாத்தென்று சாத்தினார். 6 ஓவர்களில் 41 ரன்களை எடுத்தது வெஸ்ட் இண்டீஸ், ஆனால் 43 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 31 ரன்கள் எடுத்த கிறிஸ் கெய்ல் தவறான ஸ்ட்ரோக்கிற்கு ஹில்ஃபென் ஹாஸிடம் எல்.பி.டபிள்யூ. ஆனார். அவர் வெளியேற அடுத்தபடியாக மற்றொரு துவக்க வீரர் அட்ரியன் பரத் (15) ஜான்சனின் அபார பந்திற்கு வாட்சனின் சிறப்பான கேட்சிற்கு பெவிலியன் திரும்பினார். மேற்கிந்திய சுவர் சந்தர்பாலும் தாக்கு பிடிக்க முடியவில்லை. சிடில் பந்தில் நகர்ந்து வந்து ஆடிய அவர் கால்காப்பில் வாங்கியதால் 2 ரன்களில் எல்.பி.டபிள்யூ. ஆனார். பிராவோ ரன் எடுக்காமல் ஜான்சனிடம் வீழ்ந்தார். கடைசியாக பிரெண்டன் நாஷ் ஓரளவுக்கு நம்பிக்கை தரும் விதமாக விளையாடி 18 ரன்கள் எடுத்து தேவையில்லாமல் வாட்சனின் எழும்பி வந்த பந்தை தேர்ட்மேன் திசையில் ஸ்லாஷ் செய்ய முயன்று ஆட்டமிழந்தார். கடைசியில் ராம்தினும், டௌலினும் இணைந்து 6-வது விக்கெட்டுக்காக இதுவரை 38 ரன்களைச் சேர்த்துள்ளனர். ஃபாலோ ஆன் தவிர்க்க மேற்கிந்திய அணி 281 ரன்கள் என்ற ரன் எண்ணிக்கையை எட்டியாக வேண்டும்.

## ஏடிபி உலக டென்னிஸ் நடால் அதிர்ச்சி தோல்வி

உலகின் டாப்8 வீரர்கள் பங்கேற்ற ஏடிபி உலக டூர் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. 4 முறை பிரெஞ்சு ஓபன் பட்டத்தை வென்ற ரபெல் நடால் (ஸ்பெயின்) முதல் ஆட்டத்தில் அதிர்ச்சிகரமாக தோற்றார். சுவீடனை சேர்ந்த சோடர்லிங் 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் நடாலை எளிதில் வீழ்த்தினார். மற்றொரு ஆட்டத்தில் டிஜோகோவிக் (செர்பியா) 3-6, 6-4, 7-5 என்ற கணக்கில் டேவ் டென்கோவை (ரஷ்யா) வீழ்த்தினார். 8 வீரர்களும் 2 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வீரரும், தங்கள் பிரிவில் உள்ள மற்ற வீரர்களுடன் தலா 2 முறை மோத வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக்கும் வீரர்கள் அரை இறுதிக்கு தகுதி பெறுவார்கள்.


தர வரிசையில் மீண்டும் முதலிடத்துக்கு வருகிறார் ரோஜர் பெடரர்

டென்னிஸ் வீரர்கள் தரவரிசைப் பட்டியலில் மீண்டும் முதலிடத்துக்கு ஸ்விட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் முன்னேறுகிறார். லண்டனில் நடைபெற்று வரும் உலக ஏடிபி டூர் டென்னிஸ் போட்டியின்போது லீக் ஆட்டத்தில் பெடரர் 3-6, 6-3, 6-1 என்ற கணக்கில் பிரிட்டனின் ஆன்டி முர்ரேயை வீழ்த்தினார். இதன் மூலம் அவர் அதிக ஏடிபி புள்ளிகளைப் பெற்று, முதலிடத்துக்கு முன்னேறுகிறார். உலக ஏடிபி டூர் டென்னிஸ் போட்டியின் முடிவில் அவர் தரவரிசையில் முதலிடத்தில் இருப்பது உறுதியாகிவிட்டது.



எஸ். கணேஷ்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# கனடிய வட்டி வீதம் மாறாமல் உள்ளது

உங்கள் அபிமான விளம்பரத்தின் 2009 ஆம் ஆண்டின் இறுதி இதழில், இந்த ஆண்டில் கனடிய வட்டி வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் அதனால் வீடு, மனையில் ஏற்பட்ட வியாபார ஏற்ற இறக்கங்களைப் பற்றிப் பார்க்கலாம்.

2009ஆம் ஆண்டின் ஆரம்பம் பொருளாதாரத்தின் இறங்கு நிலையிலே தொடங்கியது எனக் கொள்ளலாம். அந்தளவிற்கு கடந்த வருடத்தின் (2008) இறுதி மூன்று மாதங்கள் மிகவும் இக்கட்டான நிலையில், கனடா மட்டுமல்லாது உலகநாடுகளுமே தத்தளித்துக் கொண்டிருந்தன. இதன் தொடர்ச்சியாக இவ்வருடத்தின் ஆரம்பம் இருந்தது. உலகநாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பும் ஒவ்வொருநாடுகளும், தம்மாலான பொருளாதார ஊக்குவிப்பு பொதிகளையும் தாராளமாக பாவிக்கத்தொடங்கின. அத்துடன் புதிதாக பதவியேற்ற அமெரிக்க அதிபர் பராக் ஓபாமாவின் மீதுள்ள மக்களின் அபாரநம்பிக்கை போன்றவை பொருளாதாரத்தில் ஓரளவு நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது என்று கூறினால் மிகையாகாது.

இதுமட்டும் போதுமா? அத்துடன் உலக நாடுகள், குறிப்பாக G20 நாடுகளின் ஒத்துழைப்பு, ஒவ்வொரு நாடுகளும் தமது அரசின் வட்டிவீதத்தில் குறைப்பு அல்லது ஆகக்குறைந்த நிலையில் வட்டிவீதத்தை வைத்திருந்தன என்பதையும், பொருளாதாரத்தை முக்கியமாக கனடிய பொருளாதாரத்தில் நம்பிக்கை ஏற்படுத்தின என்றுதான் உறுதியாகக் கூறலாம்.

இதன் தாக்கம் எவ்வளவு பொருளாதாரத்தில் ஏற்படுத்தினது என்பது தெரியாத போதிலும் கனடிய வீடு, மனை வியாபாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றே கூறலாம். அதற்கேற்ப, இவ்வருடத்தின் ஏப்பரல் மாதத்திலிருந்து வீடு, மனை வியாபாரத்தில் ஓரளவு ஆரம்ப திருப்பம் ஏற்பட்டது எனக் கூறலாம். இந்நிலைமை தொடர்ந்தே வந்தது. இன்றுவரை (இந்தக்கட்டுரை எழுதும்வரை) வீடு, மனை வியாபாரம் மிகவும் ஆரோக்கியமானதாகவே காணப்படுகின்றது. அத்துடன் கடந்த கிழமை செவ்வாய் டிசம்பர் 08, 2009 கனடிய மத்தியவங்கியின் ஆளுனர் மார்க் கார்னியின் தலைமையில் கூடிய பொருளாதாரகுழு, கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதத்தில் எதுவிதமாற்றத்தையும் ஏற்படுத்தாமல் 0.25% வீதமாகவே விட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் ஆண்டின் (2010) மத்திய காலம்வரை, வட்டிவீதத்தில் பெரிதான மாற்றம் நடைபெறாது (?) என்ற தொனியிலும் தமது கருத்துரையை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த உரையிலிருந்து கனடிய பொருளாதாரம், ஸ்திர நிலையை அடையவில்லை என்பதனை அனுமானிக்க கூடியதாக உள்ளது. 33 மில்லியன் முகங்களாகக் கொண்ட இந்த பெரிய நாட்டின் பொருளாதாரம் 1.3 ரில்லியன் (Trillion) ஆகும். நவம்பர் 2009இல் 79,000 புதிய தொழில்கள் உருவாக்கப்பட்டதுடன் கனடாவில் தொழில் புரியாதவர்களின் எண்ணிக்கை 8.5% ஆகக் குறைந்த புள்ளிவிபரம் தெளிவாகக் காட்டியுள்ளது. இதனால் கனடாவின் பொருளாதாரம் பொருளாதார இறக்கத்திலிருந்து (Recession) நீங்கி விட்டது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. G20 நாடுகளில் அவுஸ்திரேலியா முதலாவது நாடாக தனது வட்டிவீதத்தில் 3வது தடவையாக வட்டிவீதத்தை அதிகரித்துள்ளது.

கனடாவைப் பொறுத்தவரை குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட நாட்டின் பெறுமதியான பொருளாதாரத்தை தக்கவைப்பது இலேசான காரியமல்ல.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 310**

இருந்தபோதிலும், கனடிய மத்தியவங்கியின் ஆளுனர் வட்டிவீதத்தில் அடுத்த வருட மத்திவரை மாற்றம் ஏற்படாது(?) எனத் தெரிவித்துள்ளார். அதாவது பொருளாதாரத்தில் ஸ்திர நிலையை வைத்திருப்பதே நோக்கம்.

உலக பொருளாதாரத்தில் சிறிதளவு நம்பிக்கை ஏற்பட்ட பொழுது, அண்மையில் Dubai இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, ஸ்திரமற்ற நிலையினை உலக நாடுகளில் பங்கு சந்தையில் நெருக்கடியை ஏற்படுத்தியது. இந்த நிலைமை வேறு நாடுகளிலும் ஏற்படுமா?

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


HomeLife GTA Realty Inc., Brokerage*

Independently owned & operated

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



Raja M. Mahendran, P. Eng. (Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto Tel.: 416.321.6969

145 Traders Blvd # 29, Mississauga Tel.: 905.712.2666

TRIDEL - Special Prices

Highrise Condo. Unit for sale.

1. Downtown - Next to CN Tower / Rogers centre (Sky dome) / MTCC
2. Kennedy / HWY 401 - 1 bedroom , 1 bedroom + den, 2 bedroom, 2 bedroom + den, 3 bedroom. (upto **$15,000** discount)

NEW PROJECT IN MARKHAM

• PROFESSIONAL OFFICE • RESTAURANT •RETAIL AND MORE

Townhouse FOR SALE

Sold $315,000

• Morningside / Sheppa... 3-Storey
• 3 bedrooms • 3 washrooms
• Fridge, Stov... Dryer, Central Air, All Elf's A... ow Coverings. Walking Dista... ic, Park, Shops, Easy Access To 401, ... & Go Station. • Price $309,900

Party Rental Business for Sale

• Brimley/Progress
• Lots Of Rental Items Meant For Variety Of Functions/Occasions.
• Complete Training To Be Provided.
• Gross Rent $2800/Month Plus Utilities.
• Asking Price $99,000 Plus Stock



CONDO. for Sale

Vacant - Immediate closing

- 480 Mclevin Ave - Sheppard / Neilson
- 2 Bedrooms - 2 Washrooms
- Open Balcony - Completely renovated
- Close to schools and other amenities
- Ceramic Tile In Kitchen And Bathrooms.
- Gatehouse & State Of The Art Facilities.
- Close to all Amenities - Fridge, Stove, B/I
- Dishwasher, Washer And Dryer, All Electrical Light Fixtures, All Window Coverings.

Commercial/Retail Lease

• Markham/Steeles
• 3331 Markham Rd
• Great Location! Brand New Plaza Located At The High-Traffic
• Golden Opportunity To Start Your Own Business.
• Asking price $1,799 Gross Lease



Commercial/Retail for sale

• 9909 Highway 48 Rd. • Markham/Major Mac
•Total Area: 1,233 Sq Ft • Price $429,900
• Sought After Location In A High Visibility Strip Plaza. •Many Suitable Uses Including Restaurant/Retail & Services.

Commercial/Retail for Lease

• 5215 Finch Ave E, Middlefield & Finch
• Rent $950 Gross Lease
• Lowest Rent To Afford Any Bussiness, Great Opportunity!
•Underground And Surface Parking



Nantha Aiyadurai

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# கனடிய வட்டி வீதம்


07ஆம் பக்கத்தொடர்ச்சி

சரித்திரத்தை திருப்பி பார்க்கும் போது, பொருளாதாரத்தில் போதியளவு வளர்ச்சி இல்லாத சந்தர்ப்பங்களில் வட்டிவீதத்தை அதிகரிக்கும் போது பொருளாதார நிலைமை, மீண்டும் இறுக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதனை கண்கூடாக காணலாம். 1937 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் பொருளாதார இறுக்கத்தில் இருந்தது, சிறிது வெளிப்பட்டபோது, வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டது. இதேநிலை 1992, 2002 இலும் ஏற்படுத்தப்பட்டது. இதனால் பொருளாதாரம் இக்கட்டான நிலையை அடைந்தது. இதனைத் தொடர்ந்து வட்டிவீதத்தில் இறக்கம் ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனவே இன்றைய சமநிலையற்ற பொருளாதாரத்தின் வட்டிவீதத்தில் உடனடி அதிகரிப்பு ஏற்படும் என நிச்சயம் எதிர்பார்க்க முடியாது.

எனவே அடுத்த வருடத்தின் (2010) முதல் 6 மாதங்களும் வட்டிவீதம் நிலையாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். எனினும் எதிர்கால பொருளாதார மாற்றங்களே வட்டிவீதத்தின் திசையை நிர்ணயிக்கும் என எதிர்பார்க்கலாம்.

குறிப்பு - முதன்மை வட்டிவீதம் Bank Rate + 2.0% ஆகக் கணக்கிடப்படுகின்றது. அதாவது இன்றைய முதன்மை வட்டிவீதம் 2.25% ஆகக் கணிக்கப்படுகின்றது.




## கனடிய வட்டிவீதம் 2006 - 2009 வரை

| Year | Jan | Feb | Mar | Apr | May | Jun | Jul | Aug | Sep | Oct | Nov | Dec |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2009 | 1.00 | 1.00 | 0.50 | 0.25 | 0.25 | 0.25 | 0.25 | 0.25 | 0.25 | 0.25 | 0.25 | 0.25 |
| 2008 | 4.00 | 4.00 | 3.50 | 3.00 | 3.00 | 3.00 | 3.00 | 3.00 | 3.00 | 2.25 | 2.25 | 1.50 |
| 2007 | 4.25 | 4.25 | 4.25 | 4.25 | 4.25 | 4.25 | 4.25 | 4.50 | 4.50 | 4.50 | 4.50 | 4.25 |
| 2006 | 3.25 | 3.50 | 3.50 | 3.75 | 4.00 | 4.25 | 4.25 | 4.25 | 4.25 | 4.25 | 4.25 | 4.25 |

**Bank Interest Rate**

| | 2008 | 2009 |
|---|---|---|
| Jan | 4.00% | 1.0% |
| Feb | 4.00% | 1.00% |
| Mar | 3.50% | 0.50% |
| Apr | 3.00% | 0.25% |
| May | | |
| June | | |
| July | | |
| Augu | | |
| Sept | | |
| Oct | 3.00 | |
| Nove | 2.25% | |
| Dec | 1.25 | 0.25% |



# மது அருந்துவது அவரவர் சுதந்திரம்! மதுபோதையில் வாகனமோட்டுவது சுதந்திரமல்ல!
# மதுபோதையில் வாகனம் ஓட்டினால் கனடாவில் என்ன நடக்கும்?

## கனடிய தகவல் தொடர் 115



தற்போது கிறிமஸ் காலம்! மது அருந்துவதனை தனிநபர் வாழ்வில் தடுக்க கனடாவில் எதுவித சட்டங்களும் இல்லை. அது சகலரும் அறிந்த விடயம். அது அவரவர் சுதந்திரம். ஆனால் மதுபோதையில் கொஞ்சமாகத்தான் அருந்தியுள்ளேன் என எண்ணிக்கொண்டு வாகனம் செலுத்தினால் என்ன நடக்கும்? கொஞ்சமாக மது அருந்தியுள்ளோம் எனத்தான் நினைப்போம் ஆனால் பொலிசாரின் அளவு மீறறில் அவரவரின் உயர்நிலைமைக்கு ஏற்ப மாதிரி கூடவும் காட்டிவிடும். ஏனெனில் இதனால் ஏற்படும் விபத்துக்களும் மரணங்களும் ஏராளம். அதுவே இங்கு அறியவில்லை யானால் அறிந்து கொள்ள வேண்டிய கிறிஸ்மஸ் கால தகவல் தொடர்.

**மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபட்டால் முதல்கட்டம் என்ன நடக்கும்?**

கௌரவமாக வீதியில் வைத்து கைவிலங்கு பூட்டி பொலீஸ் நிலையத்திற்கு அழைத்து செல்வார்கள். படங்கள் பல கோணங்களில் மதுபோதையில் வாகனம் ஓட்டியவரை பிடித்து கொள்வார்கள். கைவிரல் அடையாளங்கள் எடுத்து கொள்வார்கள். ஊதும் பரிசோதனை செய்து (Breathalyzer Test) எந்த அளவுக்கு மதுபானத்தின் அளவு உடலில் உள்ளது என்பது துல்லியமாக மதிப்பிட்டு கொள்வார்கள். அதாவது நீதிமன்றத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்தியிருந்தார் என்ற குற்றசாட்டினை நிரூபிக்க வேண்டிய சகல தகவல்களையும் தயார் செய்து கொள்வார்கள்.

மதுபோதை முறியும் வரை ஆறுதலாக பொலீஸ் நிலைய சிறைசாலை கம்பியினுள் உறங்க வைப்பார்கள். மதுபோதை முறிந்தவுடன் நீதிமன்றத்திற்கு சமூகம் அளிக்கும் திகதி நிர்ணயம் செய்து, சமூகம் அளிக்க வேண்டிய பத்திரங்கள் யாவற்றிலும் கையொப்பங்கள் வாங்கிவிட்டு வெளியே போக விடுவார்கள்.

வெளியே போகவிடும் போது சாரதி அனுமதிப்பத்திரம் மூன்று மாதங்களுக்கு பறிமுதல் செய்யப்படும். (ADL Suspension - Administrative Drivers License Suspension) கைவிலங்கு பூட்டி அழைத்துக்கொண்டு போகும் போது வீதியில் அநாதரவாக விடப்படும் தங்கள் வாகனத்தினை கட்டி இழுத்து கொண்டு போய்விடுவார்கள். பின்னர் மறுநாள் கட்டி இழுத்து போன செலவுகள் (Towing Charge), வாகனத்தினை பாதுகாப்பாக வைத்திருந்த செலவுகள் (Vehicle Storage Charge) என ஒரு தொகையினை செலுத்தி வாகனத்தினை திரும்ப மீள் பெறவேண்டும்.

**அடுத்த இரண்டாவது கட்டத்தில் என்ன செய்ய வேண்டிவரும்?**

பொலீஸ் நிலையத்தில் கைச்சாத்திட்ட மாதிரி நீதிமன்றத்திற்கு குறிப்பிட்ட ஒவ்வொரு தவணைகளிலும் ஏறி இறங்க வேண்டும். இவ்வாறு சமூகம் அளிக்க தவறினால் கைது ஆணை (Arrest Warrant) பிறப்பிக்கப்பட்டு



பொலீஸ் தேடி வந்து கைது செய்யும் நிலைமையினை உருவாக்கி 'நீதிமன்றத்தினை அவமதித்தது' (Condemn to the Court) என்ற இன்னொரு குற்றச்சாட்டுக்குள் அகப்பட வேண்டிவரும்.

தொடர்ந்து வழக்கிற்காக அலைவதும் அத்துடன் சேர்ந்து இந்த வழக்கில் ஆஜராவதற்கு கிரிமினல் வக்கீல் ஒருவரை ஒழுங்கு செய்தே ஆகவேண்டும். அதற்கு ஒரு செலவு $4000 - $5000 டொலர்வரை மொத்தமாக உருவாகலாம்.

**மூன்று மாதத்திற்கு என தற்காலிகமாக பறிமுதல் செய்யப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரத்தினை திரும்ப எப்படி பெறுவது?**

மூன்று மாதகாலம் முடிவடைந்ததும் மாகாண போக்குவரத்து அமைச்சின் அலுவலகம் போய் மீண்டும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற மனு (License Reinstatement Application) வழங்கி விசாரணையின் தீர்ப்பு நாளில் திரும்ப ஒரு வருடத்திற்கு சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யும் வரை தற்காலிகமாக பெறலாம். அதாவது மீண்டும் நீதிமன்றத் தீர்ப்புநாளில் பறிமுதல் ஆகும் வரை தற்காலிகமாக வானம் செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது எனலாம்.

திரும்ப சாரதி அனுமதிபத்திரம் பெற்று கொள்ள $150 டொலர் கட்டணம் செலுத்த வேண்டும்.

**தொடர்ந்து நீதிமன்றத்தில் கிரிமினல் பிரிவில் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் தீர்ப்பு என்னவாகும்?**

1. முதல்முறை பிடிபட்டவராக இருந்தால் $500 - $5000 டொலர் வரை ஒரு பண தண்டனை கிடைக்கும். இரண்டாம் முறை தொடர்ந்து, மூன்றாம் முறை என்றால் அதிகமான பணத்தண்டனையும், சிறைத் தண்டனையும் தீர்க்கப்படும்.

2. தற்காலிகமாக மூன்றுமாதம் பறிமுதல் செய்யப்பட்டு மீள வழங்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரம் மீண்டும் ஒரு வருடத்திற்கு பறிமுதலாகும். இக்குற்றச்சாட்டு இரண்டாம் முறை அல்லது தொடர்ந்து மூன்றாம் முறை என்றால் அதிககாலம் பறிமுதல் ஆகும்.

3. மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தினை உருவாக்கி அது இன்னொருவரின் உடல் காயத்திற்கு அல்லது மரணத்திற்கு காரணமாக அமைந்து விட்டால் அது மேலதிக இன்னொரு குற்றசாட்டு உருவாக்கப்பட்டு தீர்ப்பு என்பது அதிக ஆபத்தில் போய் முடியும்.

கொஞ்சம் அதிக காலம் சிறை செல்வது தவிர்க்க முடியாததாக இருக்கும். இப்படி அநியாயமாக அகப்பட்டு சிறையில் இருந்து வெந்து வெந்து துடிப்பவர்கள் கனடாவில் ஏராளம்.

**தடை செய்யப்பட்ட காலம் முடிவடைந்து மீண்டும் சாரதி அனுமதிபத்திரம் பெற வேண்டுமாயின் எப்படி அதற்குரிய அணுகுமுறைகளை எடுத்து செல்ல வேண்டும்?**

சாரதி அனுமதிபத்திரத்தினை மீள பெற்று மீண்டும் வாகனமோட்ட வேண்டும் என விரும்பினால் மாகாண அரசினால் நடாத்தப்படும் கட்டாய பயிற்சி திட்டம் ஒன்றுக்கு (Mandatory Alcohol Education & Treatment Program) தங்கள் சொந்த செலவில் ($578 + வரிச்செலவு (GST) $178) பணம் கொடுத்து பதிவு செய்து இந்த பயிற்சி திட்டத்திற்கு போய் மது அருந்துவதும், மது அருந்திவிட்டு வாகனமோட்டுவதில் உள்ள ஆபத்துகளை புரிந்துவிட்டேன் என்ற சான்றிதழ் பெற வேண்டும்.

இப்பயிற்சி நெறிதிட்டத்திற்கு போகவேண்டிய நிலையில் இருந்தால் அவர்களுக்கு உதவி யாக இதோ இவை தொடர்பான விபரங்கள். சென்று பணம் செலுத்தி பயிற்சி திட்டத்தில் சேர்ந்து சான்றிதழை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தால் கால தாமதம் இல்லாமல் பெற்றுக்கொண்டிருப்பார்கள்.

ரொறொன்ரோவில் உள்ள இந்நிறுவன முகவரி

***CENTRE FOR ADDICTION AND MENTAL HEALTH***
***33, RUSSEL ST, ROOM - T316***
***TORONTO, ONT M5J 2S1***

தொலைபேசி - 1.888.814.5831
இணையதளம் - www.remedial.net
மின்அஞ்சல் - back_on_track@camh.net

இப்பயிற்சி திட்டத்தினை ஆங்கிலத்தில் 'Back on Track Program' என அழைப்பதுண்டு. அதாவது 'திரும்பவும் வழிக்கு வருதல்' என தமிழில் மொழிப்படுத்தப்படலாம்.

ஒரு நாளில் இப்பயிற்சி முடிந்துவிடும். ஆறு மாதத்திற்குப் பின்னர் குடிபோதையில் வாகனம் செலுத்திய மனிதன் மாறிவிட்டானா? என்பதனை பரிசோதனை செய்யும் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பார்கள். தோற்றியே ஆகவேண்டும்.

இப்பயிற்சி நெறிகள் நேர்முக பரீட்சைகள் யாவும் ஆங்கிலம், பிரெஞ்சு மொழியில் மட்டும் நடைபெறும். மொழி ஒரு தடையாக இருப்பவர்கள் தங்களுக்கு ஒரு மொழி பெயர்ப்பாளரை அழைத்து வருதல் வேண்டும்.

**"திரும்பவும் வழிக்கு வருதல்' (Back on Track Program) என்ற பயிற்சி நெறித்திட்டம் முடிந்த பின்பு சாரதி அனுமதிபத்திரம் திரும்ப பெற என்ன செய்ய வேண்டும்?**

நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு காலம்வரை என குறிப்பிடப்பட்ட குறைந்தது ஒரு வருடம் முடிவடைந்த பின்பு இப்பயிற்சி நெறித்திட்டம் முடிந்த சான்றிதழ்களுடன் சாரதி அனுமதி பத்திரத்தினை மீள பெற முயற்சிக்கலாம்.

மீள பெற முயற்சிக்கும் போது நீதிமன்றத்தினால் தீர்க்கப்பட்ட தண்டனை பணமும் முழுவதுமாக செலுத்தியிருத்தல் வேண்டும். மீண்டும் ஆரம்பத்திலிருந்து வருவது போல் எழுத்துப்பரீட்சை (Written Test) வீதிப்பரீட்சைக்கு (Road Test) தோன்றி சித்தியடைதல் வேண்டும். ஆனால் ஒன்று! வாகனத்தில் சாரதியின் ஆசனத்தில் இருக்க வேண்டுமாயின் உடலில் மதுபோதையின் அளவினை மதிப்பிடும் கருவி (Ignition Interlock) வாகனத்தில் பொருத்துதல் வேண்டும்.

**மீண்டும் சாரதி அனுமதிபத்திரம் பெற்று வாகனம் செலுத்துபவர் வாகனத்தில் கட்டாயம் பொருத்த வேண்டும் என உள்ள கருவி** (Ignition Interlock) **என்றால் என்ன? எவ்வளவு செலவு உருவாகும்?**



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


# ஆடைகள் விற்பனைக்கு

**NEILSON & WICKSON TRAIL**

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சாறிகள், சுடிதார்கள் விற்பனைக்கு உண்டு. மிகமிக மலிவான விலையில் பெண்களுக்கும், சிறுவர்களுக்குமான உடைகள்.

தொடர்புகளுக்கு : ***647.407.1109***



# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

## எலும்பும் தசையும்

சென்ற இதழ்தொடர்ச்சி

குழந்தைகளைப் பார்க்கும்போது சில குழந்தைகளுக்கு எலும்புகள் கெட்டியாகாமல் வலுவற்று இருக்கும். இது உயிர்ச்சத்து D குறைந்தால் ஏற்படும். இது பெரியவர்களுக்கும் வரலாம். எனவே பால், கல்சியம், பொஸ்பரஸ் போன்ற தாதுப்பொருட்கள் கையாண்டு வருதல் வேண்டும்.

தொலைக்காட்சி நீண்ட நேரம் ஒரே இருப்பில் இருந்து பார்ப்பதினாலும் இடுப்புவலி சிலருக்கு ஏற்படும். இதனால் முதுகுத்தண்டை தாக்கிப் பிடிக்கும் தசைகள் தாக்கமடையும். அத்துடன் குனிந்து அதிகவேலை செய்தல், அளவுக்கு மிஞ்சிய பாரம் தூக்குதல், முதுகு எலும்புத் தேய்வு என்பவற்றாலும் இடுப்பின்வலி ஏற்படும். உடற்பயிற்சி செய்து வருவது நன்மை அளிக்கும். சிலரைப் பார்த்தால் கெண்டைக்கால் பகுதியில் அடிக்கடி இழுத்துபிடித்து வலியினால் கஸ்டப்படுகின்றார்கள். இது கல்சியக் குறைபாட்டால் ஏற்படும். இச்சத்துக் குறைந்தால் எலும்புகளின் நிலை கெட்டுவிடும். எனவே உணவு வகையில் கல்சியம் முக்கியமாகும். முன்பு கூறியது போல் பால், முட்டை கீரைவகை போன்றவற்றை சேர்த்து வருவதினால் நன்மை உண்டு.

ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கு கல்சியம் முக்கியம். சாதாரண நிலையில் ஓரளவும், மாதவிடாய் நின்ற பின் அதிகமும், கர்ப்பமாக இருக்கும்போது அதைவிட மேலும் இருக்க வேண்டும். எனவே கல்சியம் உணவில் முக்கியமாகும். எல்லோருக்கும் உணவில் கல்சியம் கிடைப்பது கடினம். ஆகையினால் மூலிகை குளிகை, மாத்திரைகளை வைத்தியர்களின் ஆலோசனைகளுக்கு ஏற்ப பாவித்து வரலாம். எல்லாம் உடல் நிலைக்கு ஓர் அளவுண்டு என்பதையும் நன்கு அறிந்து கொள்ளவும். சிலருக்கு பால் ஒத்துவருவது கடினம். சிலர் பால் பாவிப்பதில்லை. சிலர் அருமையாக எடுப்பர். எனவேதான் கல்சியக்குளிகைகளைப் பாவிப்பது உகந்தது.

சிலருக்கு காலையில் நித்திரை நீங்கி எழும்பும்போது தசைகளில் வலி ஏற்படுவதுண்டு. இவர்கள் தேகப்பயிற்சி செய்பவர்களாகவும் அல்லது தசைகள், தளர்வடையக்கூடிய அதிக வேலைகளைச் செய்தவர்களாகவும் இருக்கலாம். நமது தசைப்பகுதிகள் சுருங்கும்போது தசை நார்ப்பகுதி நீளமடையும். நாம் அசைவற்று இருக்கும்போது சிறிது வீக்கம் அடைந்து கடினமாகக் காணப்படும். கடின தேகப்பயிற்சியால் தசை நார்கள் தாக்கப்படுவதுண்டு. எனவே கடின பயிற்சி தவிர்க்கப்பட வேண்டும்.

தசைகளைப்பாதிக்கும் பயிற்சிகளை குறைத்துக் கொள்ள வேண்டும். எதற்கும் முக்கியம் ஓய்வாகும். இதனை ஞாபகத்தில் வைத்திருக்கும்.

தசைகளுக்கு அளவுக்கு மிஞ்சி வேலை கொடுப்பின் தசைநார்கள் அதிகமாக விரிவடைந்து கிழிவுகள் ஏற்பட இடம் உண்டு. இந்நிலையில் வலியுடன் வீக்கம் காணப்படும். இந்நிலையை ஆங்கிலத்தில் Pulled Muscle என அழைக்கப்படுகின்றது. பெரும்பாலும் இந்நிலை விளையாட்டு வீரர்களுக்கு ஏற்படலாம் ஓய்வு எடுப்பின் பயன்உண்டு.



ஓய்வு எடுத்துக் குணப்படுத்தியவர்களும் தற்பொழுதும் சுகத்துடன் இருக்கின்றார்கள். ஆனால் இது சிலருக்கு தீங்கையும் ஏற்படுத்தலாம். அதாவது எலும்புகள் முறிவுபட்டு நொருங்கினால் அதன் கூர்பகுதிகள் இரத்தத்துடன் சேர்ந்து உறுப்புகளுக்குச் சென்று பல வியாதிகளை ஏற்படுத்தலாம். அல்லது முறிந்த பாகங்கள் அல்லது பிரிந்த இடங்கள் உரிய இடத்தில் சரியாக அமையா விடில் வழமையாக இயங்கிய உறுப்புக்கள் தங்கள் வேலைகளைச் செய்ய தடையாக இருக்கும். இவைகள் விஞ்ஞானம் விருத்தியடையாத காலத்தில் நிகழந்தவையாகும். அக்காலத்தில் இதுவும் ஓரளவு எம்மைப்பாதுகாத்தவையாகும். அதற்குரிய வைத்தியர்களும் பெயர் பெற்றும் நம் நாட்டில் இருக்கின்றார்கள்.

ஆனால் விஞ்ஞானம் விருத்தியடைந்து வரும் இக்காலத்தில் இம்முறிவுகள், பொருத்தல் மிக விசேடமாக நிகழ்ந்து கூடிய விரைவில் தங்கள் வேலைகளைச் செய்து வருகின்றார்கள். இது பெரும்பாலும் உரிய இடங்களில் பொருத்துவதற்கு செயற்கை. உலோகத்தைப் பயன்படுத்துகின்றார்கள். அத்துடன் உரிய இடத்தை கதிர்வீச்சினால் (Xray) அறிய முடிகின்றது. மற்றும் தாக்கத்தில் இருந்தும் பாதுகாக்கின்றார்கள். கூடிய காலம் ஓய்வு எடுக்க வேண்டிய நிலையும் ஏற்படாது. ஆனால் இயற்கைக்கும் இதற்கும் ஓரளவு வித்தியாசம் இருப்பதை நாம் நன்கு அறிவோம். எதற்கும் இந்நிலைமைகள் ஏற்படும் போது வைத்தியசாலைக்குச் சென்று நன்கு பரிசோதித்து சிகிச்சை பெற்றுக் கொள்வது மிக நன்று.

மேலும் 'குடல் இறக்கம்'. இதுவும் தசையில் ஏற்படும் மாற்றமாகும். தசைப்பகுதி தளர்வடைந்து பலவீனம் அடைந்தால் அங்குள்ள உடல் உறுப்புக்கள் வெளியே பகுதியாகவோ அன்றி முழுமையாகவோ வருவதை ஆங்கிலத்தில் Hernia அதாவது குடல் இறக்கம் என அழைக்கப்படுகின்றது. சிறுகுடலில் உள்ள பகுதி அல்லது அதனைச் சூழ்ந்துள்ள கொழுப்பு வயிற்றுச் சுவரில் உள்ள தசைவழியாக வரலாம். ஆரம்பநிலையில் சாதாரண வீக்கம் காணப்படும். அவ்வேளை வைத்தியர்களிடம் சென்று குணப்படுத்துவது மிகநன்று. தவறின் பாதிக்கப்பட்ட பகுதிக்கு இரத்தம் வருவது தடைப்பட்டு அவ்விடத்தில் உள்ள திசுக்கள் (Cell) இறந்து விடும் நிலை ஏற்படும். பின்பு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். எதற்கும் முன்கூட்டி முயற்சிப்பது மிக நன்றாகும். வைத்தியர்கள் யாவும் கூறிக்கொள்வார்கள்.

தசைப்பிடிப்பு பெரும்பாலும் விளையாட்டு வீரர்களுக்கு ஏற்படும். தசைப்பகுதிக்கு போதிய இரத்தம், பிராணவாயு செல்லும் நாளநாடிகள் சுருக்கம் அடைந்து இதனால் தசைப்பிடிப்பு ஏற்படலாம். இந்நிலையில் அப்பகுதியை மெல்லத்தடவத்தடவ வலி நின்று விடும். ஆனால் தேகப்பயிற்சி செய்த பின் இந்த வலி அடிக்கடி காணப்பட வைத்திய உதவியை நாடவேண்டும்.

உயிர்ச்சத்து 'D' குறைவால் எலும்புகளின் வளர்ச்சி குறைவடையும் என்பதை அறிந்தோம். இதை 'பக்ந நிதானம்" எனக் கூறப்படும். Fractures இரு நிலை உண்டு.

1. மூட்டு நழுவுதல் (Dislocations)
2. எலும்புமுறிதல் (Fractures) என்பனவாகும்.

எலும்புமுறிவை பார்ப்போமேயானால் இது பெரும்பாலும் விளையாட்டு வீரர்களுக்கும், விபத்தில் காயப்பட்டவர்களுக்கும் ஏற்படலாம். அத்துடன் தம்மீது கவனயின்மையாலும் வரலாம். இதனை இக்காலத்தில் தக்க இடத்தில் பொருத்தி, நீண்ட காலங்கள் ஓய்வு எடுத்து குணப்படுத்தியவர்களும் தற்பொழுதும் சுகத்துடன் இருக்கிறார்கள். ஆனால் இது சிலருக்கு தீங்கை ஏற்படுத்தலாம். அதாவது எலும்புகள் முறிவுபட்டு நொருங்கினால் அதன் கூறுப்பகுதிகள் இரத்தத்துடன் சேர்ந்து உறுப்புகளுக்குச் சென்று பல வியாதிகளை ஏற்படுத்தலாம். அல்லது முறிந்த பாகங்கள் அல்லது பிரிந்த இடங்கள் உரிய இடத்தில் சரியாக அமையாவிடில் வழமையாக இயங்கிய உறுப்புக்கள் தங்கள் வேலைகளை செய்யத்தடையாக இருக்கும். இவை விஞ்ஞானம் விருத்தியடையாத காலத்தில் நடந்தவையாகும். அக்காலத்தில் இதுவும் ஓரளவு நம்மை பாதுகாத்தவையாகும். இதற்குரிய வைத்தியர்களும் பெயர்பெற்று நம்நாட்டில் இருக்கிறார்கள். ஆனால் விஞ்ஞானம் விருத்தியடைந்து வரும் இக்காலத்தில் இம்முடிவுகள் பொருத்தல் மிக விஷேடமாக நிகழ்ந்து கூடிய விரைவில் தங்கள் வேலைகளை செய்து வருகிறார்கள். இது பெரும்பாலும் உரிய இடங்களில் பொருத்துவதற்கு செயற்கை உலோகத்தை பயன்படுத்தி வருகிறார்கள். அத்துடன் உரிய இடத்தை கதிர்வீச்சினால் (xray) அறிய முடிகின்றது. மற்றும் தாக்கத்திலிருந்தும் பாதுகாக்கின்றார்கள். கூடிய காலம் ஓய்வு எடுக்க வேண்டிய நிலை ஏற்படாது. ஆனால் இயற்கைக்கும் இதற்கும் ஓரளவு வித்தியாசம் இருப்பதை நாம் நன்கு அறிவோம். எதற்கும் இந்நிலைமைகள் ஏற்படும் போது வைத்திய சாலைக்கு சென்று நன்கு பரிசோதித்து சிகிச்சை பெற்று கொள்வது மிக நன்று.

தோள்பட்டை நோய்வலிக்கு இரண்டு காரணங்களை கூறலாம்.

1. நேராக தோள்பட்டை மூட்டில் நோய் ஏற்படுதல் அல்லது அவ்விடத்தில் உள்ள நரம்புத் தசை மூட்டில் நோய் ஏற்படுவது.
2. மற்றும் உறுப்புக்களில் ஏற்படும் நோய்களினாலும் தோள்வலி ஏற்படலாம். உ+ம் இருதய நோய், வயிற்றுவலி, ஈரல் நோய் மற்றும் உதரவிதானம் ஆகிய இடத்தில் ஏற்படும் நோய் என்பவற்றால் தோள்வலி காணப்படலாம்.

தோள்பட்டையில் வலி கூடிக் காணப்படும் போது முக்கியமாக இருதயவியாதி உண்டா என்பதை முன் அறியவேண்டும். நோ, வலி, இடதுபக்கத் தோளில் காணப்பட்டால் பெரும்பாலும் இருதய வியாதியால் வரலாம். தோளின்வலது பக்கத்தில் நோ, வலி இருந்தால் அது கல்லீரல் உள்ள நோயாக இருக்க இடம் உண்டு. இது தவிர மாறாக தோளை அகற்றும் போது நோய் வலி ஏற்படின் தோளில் வந்த நோயின் குறியாகவும் இருக்கலாம். இத்தன்மைகளை இலகுவில் கண்டு கொள்ள உரிய வைத்தியர்களிடம் செல்வதே சாலச் சிறந்தது.

ஒரு உறுப்பை மீண்டும் மீண்டும் பயன்படுத்தினால் மூட்டில் நோய் ஏற்படும். உ+ம் பந்தாட்டவீரர்களுக்கு கழுத்து எலும்பு மூட்டு என்பவற்றில் வலி ஏற்பட வலியுண்டு. அளவுக்கு மிஞ்சிய பொருட்களை தூக்கிச் செல்லும் போது கைமுட்டில் வலி ஏற்படலாம். இது பெரும்பாலும் தோள்பட்டை மூட்டு, முன்கை மூட்டுக்கு தென்படும். உடல் எடை கூடினால் முதுகு இடுப்புவலி போன்றவை ஏற்படலாம்.

எனவே தற்பாதுகாப்பு ஐஸ்கட்டி ஒத்தனம், தைல வர்க்கம் போன்றவற்றை பாவிக்கலாம். வயது ஏற, ஏற மூட்டுக்கள் தேய்வடையும் என்பதை ஞாபகப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மூட்டும் கிண்ணவடிவான அமைப்பில் சுழல்வது போல் அமைந்துள்ளது. இப்படி நமது,கை,கால் மூட்டுக்கள் அமைந்துள்ளது. இதில் சுரக்கின்ற வழுவழுப்பான திரவம் வயதான காலத்தில் குறைவடைந்து வரும். இதனால் மூட்டு அசையும் போது எலும்பு ஒன்றோடு ஒன்றாக உரசுவதால் மூட்டுவலி கூடிக்காணப்படும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013





SMILE....

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

# Served Over 15 Years In Toronto Now in Richmond Hill

# NTE AUTO INC.

## New Trade Engineering

MS7


**346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575**

## Quality Work... For Less $$$

**"Fully Licensed Class "A" Mechanics on Duty"**

Repairs To All Makes & Models

- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- BMW service & Maintenance
- Mechanical, Auto Electrical Repairs
- Mechanical Safety Inspection & Certification
- FREE ESTIMATES




# MS7 Quality Used Car Sales

- 2003 Toyota Corolla Sports S, fully loaded, 4 door, 5 speed, 112,000 km, Certified E test, Price $7,995.
- 2004 Toyota Matrix, fully loaded, 5 speed, 121,000 km, Certified E test, Price $6,995.
- 2006 Toyota Sienna Van,fully loaded, 8 Seats, 164,000 km, Certified E test, Price $14,995.
- 2003 Subaru Outback, 4 WD, fully loaded, One owner, Certified E test, Price $7,250.
- 2006 Honda Odyssey, fully loaded, 8 Seats, Certified E test, 144,000km, Price $15,995.
- Free Oil Change for Life Time * - If Anybody buy cars from MS7

# 905-770-2575 / 416-399-6640

# நோயில்லா பெருவாழ்வு பெற

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

## யோகாசன மருத்துவம்
## *Yoga Treatment*



உடல் ஆரோக்கியமாக நோயின்றி திகழ நாம் முக்கியமாக பின்பற்றவேண்டியது உணவுப் பழக்கம். அடுத்து நம் முன்னோர் நமக்களித்த யோகாசன பயிற்சி முறைகள். இதைத்தான் “ஆகாரம் பாதி - ஆசனம் பாதி” என்று யோக மருத்துவம் கூறுகின்றது. நாம் உண்ணும் உணவுதான் நமது ஆரோக்கியத்திற்கு அடித்தளமாக அமைகின்றது. நம்மில் அனேகமானவர்கள் உணவுக்கு முக்கியம் கொடுப்பதில்லை. ஏதோ கடமைக்காகவும் வாய் ருசிக்காகவும் புசிக்கின்றார்களே தவிர அதில் ஒழுங்கு முறைகளை கடைப்பிடித்து சத்தான உணவுவகைகளைத் தேர்ந்தெடுப்பது கிடையாது. மற்ற அனைத்திலும் மிகுந்த ஆர்வத்தோடு முன்னேறத்துடிக்கும் மனிதன் தனது உடல் ஆரோக்கியம் பற்றி கவனம் செலுத்துவதில்லை. எப்படியோ நோய்கள் வந்தால் டாக்டரிடம் சென்று மருந்துகளை எடுத்து நோய்களைக் குணப்படுத்தலாம் என்றுதான் நினைக்கின்றனர். நோய்களை ஆரம்பநிலையிலே நிவர்த்தி செய்து கொள்ளாமல் அது முற்றிய நிலையில் அறுவை சிகிச்சை செய்து அவதிப்படுகின்றனர். உலகத்திலுள்ள அனைத்து உயிரினங்களும் இயற்கைக்கு உட்பட்டு இயற்கை உணவுகளையே உட்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். ஆனால் மனித இனம் மட்டும் இயற்கைக்கு மாறாக நடந்து கொண்டு பல துன்பங்களுக்கு ஆளாகின்றது.

நோய்கள் வந்த பின்னர் மிகவும் அவஸ்தைப்பட்டு தற்காலிகமாக குணப்படுத்துவதைவிட நோய்களே வராமல் முன்னெச்சரிக்கை முறைகளை கடைப்பிடிப்பது நல்லது. நமது முன்னோர்கள் இயற்கையின் சூழ்நிலைக்கு உட்பட்டு தூய்மையான வாழ்க்கை மூலம் நோயின்றி நீடித்து இனிது வாழ்ந்து சென்றார்கள். ஆனால் இன்று உயிர்கொல்லி நோய்களான புற்றுநோய், சிறுநீரகக்கோளாறு மாரடைப்பு போன்ற அபாயகரமான நோய்களினால் மனிதன் சிக்கிக்கொண்டு அவதிப்படுகின்றான். நாம் உலகிலுள்ள அனைத்து செல்வங்களையும் அனுபவிக்க வேண்டுமென்று மனம்தான் விரும்புகிறது. அதனை உடல் மூலமாகத் தான் அனுபவிக்கவேண்டும். எனவே உடலை மிகவும் ஆரோக்கியமாக பேணி வரவேண்டும். நாகரிகம் என்ற பெயரில் வெளித்தோற்றத்தில் பகட்டான ஆடைகளையும் வாசனைத்திரவியங்களின் துணையோடு சொற்பகாலத்திற்கு போலியான வாழ்க்கையை வாழலாம். ஆனால் காலக்கிரமத்தில் நோய்களும் அதனால் வரும் கவலைகளும் பின்பு முதுமையும் அதனைத் தொடர்ந்து மரணமும்தான் மிஞ்சும்.

எனவே உயிர் உடலைவிட்டுத் தானாக பிரிவதில்லை. உடல் அழியும் நிலைக்கு சென்றால் உயிர் அதனைவிட்டுப் பிரிந்துதான் ஆகவேண்டும். எனவே உடலை அழியாது பாதுகாத்து அதனுள் இருக்கும் 5 இராஜ உறுப்புக்களான

(1) மூளை (Brain)
(2) இதயம் (Heart)
(3) நுரையீரல் (Lungs)
(4) சிறுநீரகம் ( Kidney)
(5) கல்லீரல் (Liver)

இவற்றை செம்மைப்படுத்தி நன்கு இயங்கவைக்கக்கூடிய யோகாசன பிரணாயாமப் பயிற்சி முறைகளை நமது முன்னோர்கள் வகுத்துச் சென்றுள்ளனர். இவற்றுள் சிலவற்றையாவது தேர்ந்தெடுத்து பழகி வந்தால் நமது உடலில் நோய் எதிர்ப்பு பல மடங்கு அதிகரிக்கின்றது. மருத்துவர்களை நாடிச்செல்ல வேண்டிய தேவையே ஏற்படாது. “மாத்திரைகள் - இறுதியாத்திரைக்கு வழிகாட்டும்” இது சித்தர்களின் வாக்கு. பொதுவில் சொன்னால் யோகாவினால் மாறாத வியாதிகளே இல்லை. வரும் நோய்களுக்கு இயற்கை உணவே மருந்தாக அமையும்.

### உடலும் உள்ளமும் இணைதல்
### Union of Body - Mind

மனம்தான் உடலை ஆளவேண்டும். இதை விடுதிது உடலானது மனத்தைக் கட்டுப்படுத்தினால் மனம் சாய்ந்து போகும். மனஇறுக்கம் (Stress), பரபரப்பு (Tension) என்பன இலகுவாக மனதைப் பற்றி இருக்கும். இதனால்தான் உடலும்-மனமும் ஒன்றாக இணைந்து செயல்படவேண்டும். இதனை அடைய ஒரே வழி “யோகா” பயிற்சிதான் சிறந்தது என்று மேல் நாட்டவர்களே இப்போது திடமாக நம்புகின்றனர்.

### யோகா பழக யோகம் வெண்டும்

இந்த யோகாசன பயிற்சியின் பின் பலன்கள் அளப்பெரியது. இதில் எவருக்கும் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினரைத் தவிர ஏன் மற்றவர்கள் இதை பழக முன்வருவதில்லை. இதற்கும் சில சிறந்த அறிவுடையவர்கள் தான் இதை பழகவும் கொடுத்து வைத்துள்ளனர். இந்த ஆசன பயிற்சியின் பின் ஒவ்வொரு நிலையும் உடலையும் மனத்தையும் செம்மைப்படுத்தி மனிதனை பூரணமாக மனிதனாக வாழ வழிகாட்டுகின்றன.


ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**


Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM


HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

YOGA - MEDITATION CLASSLESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



தொடர்புகுகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***

# பரிதாபத்துக்குரிய பாசம்

## ஓடும் நீர் உறைவதில்லை

உலகில் என்றும் தனித்துவமானது எது என்ற கேள்விக்குப் பலர் பலவிதமான கருத்துக்களைக் கூறுவார்கள். ஒவ்வொருவரும் அவரது எதிர் பார்ப்புக்களையும் சொந்த அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு தமது தெரிவுகளை வெளிப்படுத்துவார்கள். மிகமிகக் குறைந்த எண்ணிக்கை யுடையவர்களே இந்தக் கேள்விக்குச் சரியான பதிலைக் கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு பெரும்பாலானவர்களால் உடனடியாக உணரப்படாமல் இருப்பதற்கான அடிப்படைக் காரணம் அது இலவசமாகக் கிடைப்பதனால் அதற்கு ஒரு பெறுமதியைக் கொடுக்க முடியாமல் இருப்பது தான்.

ஒருவரால் உரிமை கொள்ளக்கூடிய அத்தனை பௌதீகச் சொத்துக்களாலும் ஈடுசெய்ய முடியாத ஒன்று தான் அது. அதற்கு ஒரு பெறுமதியைக் கொடுப்பதற்கு மனிதனால் இதுவரையில் எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை. இனிமேலும் கண்டுபிடிக்கப் போவதுமில்லை. அந்த அளவிற்கு மகத்துவமான, மனித இனத்திற்கு மட்டுமன்றி சகல உயிரினங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் இந்தக் கொடை, பௌதீக அடிப்படையில் அல்லாமல் உள்ளத்தின் அபரிமிதமான உணர்வால் தோற்றம் பெறுவதால் அந்த உணர்வுக்கு இணையாக உலகில் எதுவுமே இல்லை. இதனால் தான் இது மகத்துவமான மட்டுமல்ல, தனித்துவமானதும் கூட. இந்த மத்துவமும், தனித்துவமும், பிரதியீடுமற்ற உணர்வு எது? அதுதான் தாய்ப்பாசம்.

தாய், தாய்ப்பாசம், தாய்நாடு, தாய்மொழி என்றெல்லாம் கூறும்போது நாம் ஒரு விடயத்தை மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளோம். இவையனைத்தும் தன்னிகரற்றது என்பது தான் அது. இக்கட்டுரையில் தாய்ப்பாசம் பற்றிய விடயங்களைப் பார்ப்போம். தாய்ப்பாசம் என்பது என்ன என்பதற்கு ஒது தாயால் கூட சிறப்பான விளக்கத்தைக் கொடுக்க முடியாது. அது ஒரு மகத்தான உணர்வு. வார்த்தைகளுக்கும் விளக்கங்களுக்கும் அப்பாற்பட்டது. ஒரு தாயின் உயிருடன், உயிர் மூச்சுடன் இரண்டறக் கலந்து இயங்கும் ஒரு சக்தி என்பது கூட அதன் உண்மையான தன்மைக்கு உரிய விளக்கமல்ல.

இந்தத் தாய்ப்பாசம் ஒரு வாழ்வியல் தியாகம். அபரிதமான அர்ப்பணிப்பு. உணர்வுகளை ஒரு முகப்படுத்திய உயர்வான செயற்பாடு. இரு உயிர்களின் உள்ளார்ந்த ரீதியான தொடர்புபடுத்தல். உணர்வு ரீதியான தன்னலமற்ற கொடை. கொடுப்பதைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்காதது. குறிப்புணர்ந்து கொடுக்கும் தன்மை கொண்டது. இதனால் தான் ஒவ்வொரு உயிரும் பிறக்கும் கணத்திற்கு அப்பால் தன்னைக் கொண்டு செல்ல முடிகிறது.

நாம் பிறந்தவுடன் நமது உணர்வுகளைத் தெளிவாகத் தெரியப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருப்பதில்லை. காரணம் புரியாத ஒரு சிரிப்பும், காரணம் புரியாத ஒரு அழுகையையும் தான் நமது உணர்வுகளை வெளிப்படுத்தும் முறைகளாக அமைகின்றன. நமது தேவைகளை நம்மால் வெளிப்படுத்த முடியாத நிலையில் தான் நமது வாழ்க்கை ஆரம்பமாகின்றது. இவ்வாறு எதையும் வெளிப்படுத்த முடியாத, எதிர்பார்க்க முடியாத வாழ்க்கையை நாம் ஆரம்பிக்கும்போது நமது தேவைகளை முன்னுணர்ந்து பூர்த்தி செய்யக்கூடிய சிறப்பான தன்மை தான் இந்தத் தாய்ப்பாசத்தின் அடிப்படை. நமது உணர்வுகளாலோ அல்லது வார்த்தை களாலோ மற்றவர்களுடன் தொடர்பு கொண்டு நமது தேவைகளைப் பெறக்கூடிய நிலைக்கு நாம் வரும்வரை குறிப்பால் உணர்ந்து அவற்றைப் பூர்த்தி செய்யக்கூடிய இயற்கையான கொடையாகிய அந்தப் பாசம் தான் நாம் ஒவ்வொருவரும் உயிர்வாழ்வதற்கான காலத்தை அந்த நிலைவரை நீடிக்கிறது. எனவே இந்த உணர்வு பூர்வமான தொடர்புகொள்ளல் ஒரு தாய்க்குரிய தனித்துவமான கொடை. வேறு எவராலும் ஈடு செய்யமுடியாத ஒன்று.



நமது வார்த்தைகளுக்கும் விளக்கங்களுக்கும் அப்பாற்பட்ட சிறப்புடைய இந்தத் தாய்ப்பாசம் குழந்தைகளின் வளர்ச்சிக்கேற்ப அதன் செயற்பாட்டையும் மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் உண்டு என்பதை உணர்ந்திருத்தல் வேண்டும். ஏற்கனவே கூறிய விடயம் ஒன்றை இன்னொருமுறை சிறிது அழுத்தமாகக் குறிப்பிடுவது அவசியமாகின்றது. அதாவது ஒரு குழந்தை பிறந்து தனது விருப்பு வெறுப்புக்களை உணர்வுகளாலே அல்லது வார்த்தைகளாலோ வெளிப்படுத்தும் நிலைக்கு வரும்வரை தாயான-வள் குறிப்புணர்வாலும், உள்ளத்துணர்வாலும் அதன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றாள் என்பது தாய்ப்பாசத்தின் இயல்பு என்பது மறுக்கப்பட முடியாது உண்மை. இங்கு அந்தக் குழந்தையின் தேவைகள் தாயின் புனிதமானதும் ஒரு தலைப்பட்சமானதுமான தீர்மானங்களால் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பது வெள்ளிடைமலை. இங்கே இவ்வகையான தீர்மானங்கள் அவசியமானவை என்பதும் உண்மை.

ஆனால் ஒரு குழந்தை தனது தேவைகளை வெளிப்படையாகத் தெரியப்படுத்தக் கூடிய நிலையை அடையும் போது, அதன் உணர்வுகளை வார்த்தைகளால் வெளிப்படுத்தும் தகைமையை பெற்றிருக்கும் போது குழந்தைகளின் உடலியல் உளவியல் வளர்ச்சிக்கேற்ப தாய்ப்பாசத்தின் செயற்பாடு களும் மாற்றமடையவேண்டியதை அறியாத, அல்லது அறியவிரும்பாத அல்லது அறிந்தும் மாற விரும்பாத இந்தத் தாய்ப்பாசங்கள் பரிதாபத்திற்குரிய பாசங்களாகின்றன என்பது மிக அவசியமாகக் அறிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

**KG Master**-*kgmaster@rogers.com*

ஒரு தாய்க்குப் பிள்ளை எப்போதும் குழந்தைதான் என்பது உணர்வு பூர்வமான கணிப்பாக அமைய வேண்டுமேயன்றி அதன் செயற்பாடுகளைக் குழந்தைத்தனமாக வைத்திருப்பதற்கு வழிவகுக்கக்கூடாது. ஒரு குழந்தையின் உடலியல், உளவியல் வளர்ச்சிக்கு ஏற்ப அக்குழந்தையின் தாயின் செயற்பாடுகளும் அடுத்தடுத்த படி முறைகளுக்கு ஊக்கமளிப்பதாக அமைவது தவிர்க்கப்படக்கூடாது. ஏனெனில் ஒரு குழந்தை அதன் தாயுடனான உணர்வு பூர்வமான தொடர்புடன் தனது வாழ்க்கையை ஆரம்பித்துப் படிப்படியாகத் தன்னையும் தனது தேவைகளையும் அறியக்கூடிய நிலைக்கு வரும்போது தாயும் தனது ஒரு தலைப்பட்சமான தீர்மானத்தைத் தவிர்த்து குழந்தையின் உணர்வுகளுக்கேற்பத் தனது செயற்பாடுகளை மாற்றியமைக்காவிடின் வயதால் அதிகமாகவும் நடத்தைகளால் குழந்தைகளாகவும் அமைகின்ற தாழ்வு மனப்பான்மையும் தன்னம்பிக்கையுமற்ற குழந்தைகளை உருவாக்குவதாக அமைவது தவிர்க்க முடியாததாகும். இவ்வாறான குழந்தைகளை உருவாக்கும் தாய்ப்பாசம் உண்மையில் பரிதாபத்துக்குரிய பாசம் என்பதை ஒவ்வொரு தாயும் காலப்போக்கில் உணர்கின்றார்கள் என்பது நான் அனுபவரீதியாகக் கண்ட உண்மை.

ஒரு தாய் தன்னை உருக்கித் தன்பிள்ளைச் செல்வத்தை வளர்க்கும் போது அந்தப் பிள்ளையின் எதிர்காலத்திற்கான ஒவ்வொரு செயற்பாட்டிலும் முழுமையான பங்கைச் செலுத்த வேண்டும். ஒரு குழந்தை படிப்படியாக அடுத்த நிலைக்குத்தன்னை எடுத்துச் செல்ல முயற்சிக்கும் போது தாய்ப்பாசத்தை விலங்காக்கி அதன் கால்களைக் கட்டித் தடுக்காமல் தாய்ப்பாசத்தைப் புதிய சுவடுகளாக்கி முன்னேற்றத்திற்கு வழிவகுக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு தாயும் உணர்ந்து கொள்வது மட்டுமல்ல ஒரு முன்மாதிரியாகவும் (Row Model) செயற்படுவதும் அவசியம்.

துரதிஷ்டவசமாக, குறிப்பாக இந்த நாட்டில் வாழுகின்ற பெரும்பாலான தாய்மார்கள் தமது குழந்தைகளின் உடலியல், உளவியல், சமூக மாற்றங்களைக் கவனத்திற்கு கொள்ளாமல் பாசம் என்ற வலைக்குள் அவர்களைச் சிக்கவைத்து அவர்களால் நிறைவேற்றக் கூடிய நாளாந்த நடவடிக்கை களை செய்வதற்கான வாய்ப்பையும் ஊக்குவிப்பையும் கொடுக்காமல் அவர்களே செய்கின்றார்கள். எத்தனையோ தாய்மார்கள் தமது குழந்தைகள் பத்து வயதடைந்த பின்னரும் கூட உணவை ஊட்டினால் தான் குழந்தை சாப்பிடும் என்ற நிலைக்கு உருவாக்கி விட்டு தாழ்வு மனப்பான்மையும், தன்னம்பிகையு மற்ற குழந்தைகளாகி விட்டார்களே என்று கவலைபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தாய்ப்பாசம் தன்னிகரற்றது. ஆனால் அது பரிதாபத்துக்குரிய பாசமாக அமையக் கூடாது. ஒரு குழந்தை அதன் வளர்ச்சிப் படிமுறையில் எதையெதைச் செய்வதற்கான தகுதியைப் பெறுகிறதோ அதையதை அக்குழந்தையே செய்தல் வேண்டும். அதற்கான ஊக்குவிப்பதாகத் தாய்ப்பாசம் அமைவது அவசியம். மாறாக ஒரு குழந்தையின் செயற்பாடுகளை மழுங்கடிக்கும் தாய்ப்பாசம் அக்குழந்தையின் எதிர்காலத்தை நிகழ் காலத்தில் கொன்றுவிடுகின்றது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும். உதாரணமாக ஒரு தாய்ப்பறவை அதன் குஞ்சு தானாகவே உணவு தேடும் தகுதியைப் பெற்ற பின்னரும் அதற்கு வாய்ப்பளிக்காமல் தனது இறக்கைக்குள் வைத்து உணவூட்டுமாயின் அந்தக் குஞ்சுகள் நிலையை எண்ணிப்பாருங்கள். நடைமுறையில் தன்குஞ்சு உணவு தேடும் தகைமையைப் பெற்றவுடன் தாய்ப்பறவை அதை நெறிப்படுத்தி, தன்னம்பிக்கையை உருவாக்கி எதிர் காலத்துக்கு அனுப்புவதைப் பார்க்கின்றோம். பறவைகளும், விலங்குகளும் இதை உணர்ந்து செயற்படும்போது நமக்கு ஏன் இந்தத் தடுமாற்றம்? இந்தத் தடுமாற்றத்திற்குக் காரணம் தாயின் தவறான மன உணர்வே?

**ஆம் வாசகர்களே!**

தன்னிகரற்ற தாய்ப்பாசம் குழந்தைகளின் எதிர்காலத்தை நிகழ் காலத்தில் அழிக்கும் பரிதாபத்துக்குரிய பாசமாக அமையாமல் இருப்பதற்கு ஒவ்வொரு தாயும் அறிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் ஒரு தாய்க்கு தன்பிள்ளை எப்போதும் உணர்வால் மட்டுமே குழந்தை அதன் செயற்பாடுகளால் அல்ல. எனவே தாய்ப்பாசம் குளந்தைகளின் வளர்ச்சிக்கு தடைக்கல்லாக அமையாமல் படிக்கல்லாக அமையட்டும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹாராஜியின் உரைகள்**



**On DVD**

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

**On TV**

Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# மது அருந்துவது...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

முதல்முறை பிடிபட்டவர்கள் மீண்டும் வாகனம் செலுத்த வேண்டும் என விரும்பினால் ஒரு வருடத்திற்கேனும் இக்கருவி வாங்கி வாகனத்தினுள் பொருத்திவிடல் வேண்டும் என்பது நிபந்தனையாகும். உடலில் உள்ள மதுபோதையின் அளவு என்பது எவ்வளவு உள்ளது? மதுபோதையில் உள்ளவரை வாகனம் ஓட்ட அனுமதிக்கலாமா? என்பதை அளவிடும் கருவியாகும்.

வாகனம் ஓட்ட ஆரம்பிப்பவர் மது அருந்தியிருந்தால் இக்கருவியில் உள்ள ஊது குழலில் ஒருமுறை ஊதிப்பார்க்க வேண்டும். மதுவின் அளவு எல்லையினை தாண்டி விட்டால் வாகனத்தின் இயந்திரம் இயங்காது.

சாரதி அனுமதிபத்திரத்தினை மீளபெறும் வீதிப்பரீட்சைக்கு தோற்றும் போதும் இக்கருவி பொருத்திய வாகனத்தில் மட்டுமே இத்தகைய நிலையில் உள்ளவர்கள் வீதிப்பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும் என கனடாவின் சட்டங்கள் வலியுறுத்துகின்றது. இக்கருவி பொருத்திய வாகனமாக இல்லையேல் வீதிப்பரீட்சையிலும் தோற்றமுடியாது.



இக்கருவி பொருத்தினால் மட்டுமே வாகனமோட்டுபவருக்கு தொடர்ந்து வாகன காப்புறுதியும் கிடைக்கும். வாகனமும் ஓட்டலாம். மாகாணபோக்குவரத்து அமைச்சின் வாகனங்களின் பதிவிலும் இது பொருத்தப்பட்டுள்ளது என்பது இருக்கும். சாரதி அனுமதி பத்திரத்திலும் இருக்கும் பொலீசாரும் இலகுவாக அடையாளம் கண்டுகொள்ளலாம். இக்கருவி பொருத்தாமல் வாகனம் செலுத்தியது பிடிபட்டால் $200 - $1000 டொலர்வரை தண்டனை பணம் செலுத்த வேண்டிவரும்.

ஒரு வருடம் அல்லது குறிப்பிட்ட நிபந்தனைக் காலம் என முடிவடைந்த பின்பு இதனை வாகனத்திலிருந்து அகற்றலாம் என்ற ஒரு நிலைமை வந்தபின்பு வாகன பதிவு நிலையத்திற்கு (Motor Registration Division) அறிவித்துவிட்டே இக்கருவியினை வாகனத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

இக்கருவியினை வாகனத்தில் பொருத்திக் கொள்ள வேண்டிய நிலையில் ஏதாவது இருந்தால் அவர்கள் அழைக்கவேண்டியது

GUARDIAN INTERLOCK SYSTEM, தொலைபேசி - 1.866.658.6374 இக்கருவியினை வாகனத்தில் பொருத்தி வைப்பதற்குரிய செலவு வருடம் ஒன்றுக்கு சுமார் $2,000 டொலர் வரை ஏற்படலாம்.

**இத்தவறு என்பது ஒரு கிரிமினல் குற்றமாக பதிவில் போகும் போது கனடா வாழ்வில் தொடர்ந்து எத்தகைய பாதிப்பினை உருவாக்கும்?**

கனடா வாழ்வில் பதிவில் இருக்கும் கிரிமினல் குற்றம் என்பது எதற்குகந்த இடங்களில் எப்படி? எப்படி நின்று நின்று அறுக்கும் என்பது ஒன்று இரண்டல்ல. ஏராளம்.

1. வாழ்வில் சில தொழில் முன்னேற்றங்கள் தடைப்படும். தொழில் அனுமதிபத்திரம் எதுவும் பெறமுடியாது.
2. குடிவரவு விசாரணையில் இருந்தால் அங்கு அகதி அந்தஸ்து கோரிக்கை ஏற்கப்படுவது என்பது சிரமம். பிரஜா உரிமை பெறவே முடியாது.
3. எல்லை கடந்து அமெரிக்காவிற்கு போகமுடியாது.
4. ஆயுள்காப்புறுதி ஒப்பந்தம் கூட பெறுவதில் சிரமங்களும் தடைகளும் ஏற்படும்.
5. மீண்டும் அனுமதிப்பத்திரம் எடுத்து வாகனம் ஓட்ட முயலும் போது வாகனகாப்புறுதிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் என்பது இந்த குற்றசாட்டு வரலாற்றினால் அதி உச்ச விலையாகவே இருக்கும்.

இவைகள் மட்டுமல்ல பல்வேறு விடயங்களில் தடைகளும் பிரச்சினைகளும் ஏற்படும். இக் குற்றப்பதிவு எங்கே தடையாக இருக்கும் என சொல்லமுடியாமல் எந்த இடத்திலும் சிரமம் கொடுக்கும். என்றும் பாரிய தடைக்கல்லாகவே அமையும். தெரியாத்தனமாக மாட்டுப்பட்டு இன்று கனடாவில் அவதியுறும் படித்தவர்கள், பெரிய உயர் பதவியில் இருப்போர், பெருந்தொழில் செய்வோர் என ஏராளம் பேர் விரக்தியின் விளிம்பில் வரிசையில் உள்ளனர்.

எனவே ஒரு உறுதியான முடிவு! எல்லோர் மனதிலும் இருக்க வேண்டியது. அதாவது! மது அருந்தினால் வாகன சாரதியின் ஆசனத்தில் உட்காரகூடாது. திருப்பு வளையத்தினை (Steering) தொடக்கூடாது. வாகன சாரதியின் ஆசனத்தில் உட்காருவதாக இருந்தால் மது அருந்த கூடாது.

ஏனெனில் வாகன சாரதியின் ஆசனம் என்பது ஆண்டவன் சன்னிதானம் போன்றது. புனிதமானது.

**முக்கிய குறிப்பு**

மது அருந்திய ஒருவர் வாகனமோட்டி செல்லும் போது தமது நிலைமை என்பது தடுமாற்றமாக உள்ளது என தெரிந்தால் வாகனத்தினை ஓரமாக நிறுத்திவிட்டு கார் திறப்பினையும் கையில் எடுத்துக் கொண்டு பின் ஆசனத்திற்கு போய் மது போதை தெளியும் வரை தூங்கலாம். அந்த நிலையில இருக்கும் போது மது போதையில் வாகனமோட்டியவர் வாகனம் தொடர்ந்து செலுத்தமுடியாத நிலையில் பின் ஆசனத்தில் அமைதியாக தூங்குகின்றார் என இலகுவாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் புரிந்து கொண்டாலும் அவரால் கைது செய்யவோ குற்றம் சாட்டவோ முடியாது.

# விருத்தாசலம்...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

வேறு கலைகளில் ஒருங்கே அறிவாற்றல் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர் என்பதற்கு பழமலைநாதர் கோயில் சிற்பங்களையே சான்று ஆதாரங்களாக வரலாற்று ஆய்வாளர்கள் காட்டுகிறார்கள்.

என்ற ஆங்கில ஆட்சியாளர் அகழிகளைத் தூர்த்து மீண்டும் கோயிலாக்கினார். அவரைத் தொடர்ந்து சார்லஸ் கைடு என்ற மாவட்ட ஆட்சியரும் இக்கோயிலில் திருப்பணிகளைச் செய்துள்ளார். இத்தலத்து முருகப்பெருமானை அருணகிரிநாதர் தனது திருப்புகழில் பாடியுள்ளார். திருப்புகழில்



ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்தது இத்திருக்கோயில் என்பதற்கு பல வரலாற்று ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சங்க இலக்கிய நூலான அகநானூற்றில் 197ஆவது பாடலில், மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாமூலனார் என்ற புலவர், விருத்தாசலத்தை 'தேம்முதுகுன்றம்' என்று குறிப்பிட்டுள்ளார். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் பழமலைநாதரைப் பற்றிப் பாடியுள்ளார். 10ஆம் நூற்றாண்டில் கண்டராதித்த சோழனின் மனைவி செம்பியன் மாதேவி இக்கோயிலுக்குத் திருப்பணி செய்ததற்கான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இது தவிர பராந்தக சோழன், கண்டராதித்த சோழன், உத்தம சோழன், ராசராச சோழன், ராசேந்திர சோழன், குலோத்துங்க சோழன் ஆகிய மன்னர்களும், சோழ மன்னர்களைத் தொடர்ந்து காடவராயன், கச்சிராயன், அரியண்ண உடையார், பருவூர் பாளையக்காரர் ஆகிய குறுநில மன்னர்களும் இக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகள் குறித்துக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவாரத் திருப்பதிகங்களில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் திருமுதுகுன்றத்தின் சிறப்புகளைப் பாடியுள்ளனர். அருணகிரிநாதர் திருப்புகழிலும், வள்ளலார் திருவருட்பாவிலும் விருத்தாசலம் பற்றி பாடியுள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக, பதின்மூன்றரை கோடி ஆண்டுகள் பழைமை வாய்ந்த 'இரிடேசியஸ்' என்ற சுண்ணாம்பு வகையைச் சேர்ந்த பாறைகளால் இத்திருக்கோயில் கட்டப்பட்டிருப்பதாக நிலவியல் வல்லுனர்கள் கூறுவது இதன் சிறப்புகளில் மற்றொன்று.

1760இல் ஆங்கில ஆட்சியாளர்கள் இக்கோயிலைச் சுற்றி அகழி வெட்டி கோட்டையாக்கினர். அதனைடயாளமாகத்தான் இன்றும் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்கள் தென்கோட்டை வீதி, வடக்குக் கோட்டை வீதி எனக் குறிப்பிடப்படுகின்றன. கோட்டையை எதிரிகள் முற்றுகையிட்டு தாக்கியதற்கான அடையாளங்களாகச் சிதிலமடைந்த சிற்பங்கள் பல கொயிலில் இன்றும் காணக் கிடைக்கின்றன. 1803ஆம் ஆண்டு கார்ரோ

இத்தலத்து முருகன் மீது மூன்று பாடல்கள் உள்ளன.


இளைய தலைமுறையினருக்கு மாணவப் பருவத்திலேயே இசையோடு தேவாரம் பயிற்றுவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 1922இல் சபாபதிச் செட்டியார் இங்கு தொடங்கிய தேவாரப் பாடசாலையை இன்றும் நடத்தி வருகிறார், அவரது பேரன் ரத்தின சபாநாதன். இங்கு படித்தவர்கள் தமிழகத்தின் பல கோயில்களில் தேவார ஆசிரியர்களாகப் பணி செய்கின்றனர்.

இக்கோவிலில் ஆடிப்பூர திருவிழா, வைகாசி வசந்த உற்சவம், மார்கழி திருவாதிரை, பிரம்மோற்ஸவம் ஆகியவை மிகவும் பிரசித்திபெற்றவை. பிரம்மோற்சவம், மாசி மாதம் 10 நாட்கள் நடைபெறும். ஒன்பதாவது நாள் தேர் பவனி வரும். ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்ளும் திருவிழாவாக இது இருக்கும். ஆடிப்பூரமும் 10 நாட்கள் திருவிழாதான். இவை தவிர ஒவ்வொரு பவுர்ணமி அன்றும் விருத்தாசலத்தில் பக்தர்கள் கிரிவலம் வருவார்கள். எனவே, பவுர்ணமி தினங்களிலும் விருத்தாசலம் திருவிழா கோலாம் கொண்டிருக்கும்.

**எப்படிச் செல்வது? எங்கே செல்வது?**

விருத்தாசலம் ரயில் நிலையத்தில் இருந்து இரண்டு கி.மீ. தொலைவில் பழமலைநாதர் கோவில் அமைந்துள்ளது. விருத்தாசலம் சென்னையில் இருந்து 215 கி.மி. தொலைவில் உள்ளது. சென்னையிலிருந்து ரயிலில் வண்டியில் மூன்றரை மணி நேரப் பயணம்தான். சென்னை மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் மற்ற முக்கிய நகரங்களில் இருந்தும் விருத்தாசலம் செல்ல பேருந்து வசதி உள்ளது. கோயில் நடைவாசல் தினந்தோறும் காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் திறந்திருக்கும். எல்லா தூரத்திலும் தங்கும் விடுதிகளும் உணவகங்களும் விருத்தாசலத்தில் உள்ளன.


**யோகா பயிற்சி வகுப்புக்கள்**



அனுபவமிக்க யோகா சிகிச்சை நிபுணரும் (Yoga Therapy Consultant) யோகா ஆசிரியையினால் (Yoga Teacher) நோய்களுக்கான யோகா சிகிச்சையும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. அத்துடன் தனிப்பட்ட யோகா வகுப்புக்களும் உண்டு. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 647.348.3423

# விரித்தாசலம் - பழமலைநாதர்



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 69

சிவத்தலங்கள் அனைத்திலும் 1008 தலங்கள் சிறப்பானதாக கூறப்படும். இதில் நான்கு தலங்கள் முக்கியமானவை. அதில் ஒன்று, விருத்தாசலம். தேவர்களுக்காக இறைவன் நடனம் ஆடிய இடம். சிதம்பரத்தில் சிவன் போட்டிக்காக ஆடினான், விருத்தாசலம்தான் சிவன் சந்தோசத்திற்காக ஆடிய தலம். மேலும், நடுநாட்டுத் திருத்தலங்கள் இருபத்திரண்டில் ஒன்பதாவதாகப் போற்றப்படுகிறது விருத்தாசலம். தமிழகத்துக் கோயில்கள் எல்லாமே மகிமை நிரம்பியவை என்றாலும், இத்தகைய தனிப் பெருமைகளாலும், அதன் பழைமையாலும் தமிழகப் பழங் கோயில்களிலும் குறிப்பிடத்தகுந்த ஒன்றாக விருத்தாசலம் பழமலைநாதர்கோயில் இருக்கிறது. நமது இந்த மாத பயணம் அங்குதான்!

விருத்தாசலம் அருள்மிகு பழமலைநாதர் திருக்கோயில் பாடல் பெற்ற தலங்களில் ஒன்று. இதன் பழைய பெயர், திருமுதுகுன்றம். தேவாரப் பாடல்களில் திருமுதுகுன்றம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு புறமும் சுமார் 26 அடி உயரமுள்ள மதிற்சுவரையும், 660 அடி நீளமும், 390 அடி அகலமும் உடைய பெரிய கோவிலாகும், பழமலைநாதர் கோயில். ஆலயத்தின் நான்கு புறமும் ஏழு நிலைகளை யுடைய பெரிய கோபுரங்கள் காண்போரைக் கவரும் விதமாக நெடிதுயர்ந்து காணப்படுகின்றன. இங்குள்ள அர்த்த மண்டபத்தில் நான்கு வேதங்களே நான்கு தூண்களாக அமைந்துள்ளன. கிழக்கே உள்ளே பிரதான வாயில் வழியாக உள்ளே சென்றால் 16 தூண்களை உடைய மண்டபம் இருக்கிறது. முதல் வெளிப் பிரகாரத்தில் விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கி சுமார் 18 அடி பள்ளமான இடத்தில் அமைந்துள்ளது. பாதாள விநாயகர் என்று அழைக்கப்படும் இவரை வணங்கினால் எல்லாக் குறைகளும் நீங்கி நல்ல வாழ்வு அமையும் என்பதால் பக்தர்கள் இங்கு வந்து இவரை வணங்குகின்றனர். விநாயகரின் அறுபடை வீடுகளில் இந்த விநாயகர் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார். இத்தலத்தின் இறைவி பெரிய நாயகி அம்மையின் சந்நிதி ஒரு தனி கோவிலாக முதல் பிரகாரத்தின் வடபுறம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இரண்டாம் பிரகாரத்தில் நுழைந்தவுடன் தல விருட்சமான வன்னி மரம் உள்ளது. இந்த மரம் மூவாயிரம் ஆண்டுகள் வயதுடையது என்கிறார்கள். மூன்றாம் பிரகாரத்தில் 63 நாயன்மார்களில் உருவச் சிலைகளும், பிந்து மாதவப் பெருமாள் சந்நிதியும் உள்ளன. மூன்றாம் பிரகாரத்தின் வடமேற்கு கோஷ்டத்தில் விருத்தாம்பிகை சந்நிதி உள்ளது. நான்காம் பிரகாரத்தில் இத்தலத்தின் மூலவர் பழமலைநாதர் கருவறை இருக்கிறது. கருவறையின் வாயிலில் இரு புறமும் துவாரபாலகர்கள் சிலைகள் காணப்படுகின்றன.

பிரம்மன் மண்ணுலகைப் படைக்க எண்ணி, முதலில் நீரைப் படைத்தார். அப்போது திருமால் தியவர்களை வெட்டி வீழ்த்த, வெட்டுண்ட உடல்கள் பிரம்மன் படைத்த நீரில் வீழ்ந்தன. அதைக் கண்ட நான்முகன், சிவபெருமானிடம் வேண்ட நீரும், அவ்வுடல் தசைகளும் ஒன்றாக இறுகி சிவபெருமான் மலை வடிவாகத் தோன்றி நின்றார். இதனை அறியாத மலரவன், வேறு பல மலைகளைப் படைத்தார். தான் படைத்த மலைகளுக்கு இடமில்லாததைக் கண்டு மயங்கி நின்றபோது, 'நாமே இம்மலை வடிவாகத் தோன்றி நின்றோம். நாம் வேறு, இம்மலை வேறு இல்லை. இந்த மலை தோன்றிய பின்னரே உங்கள் பல மலைகள் தோன்றின. ஆதலின் நம்மலைக்கு பழமலை மண்ணுலகுக்கு அச்சாணியாக அழுந்தி நின்று, மேலே சிவலிங்கமாக விளங்கி நிற்கும். இதனை வழிபட்டோர் விரும்பிய பயனை எய்தி இன்புறுவர்!' என்று கூறி சிவபெருமான் மறைந்ததாக விருத்தாசல தலபுராணம் கூறுகிறது. அந்த மலைதான் பழமலைநாதர் திருக்கோயிலாக உயர்ந்து நிற்கிறது என்பது ஐதீகம்.

முருகன் சிவனை பூஜித்த தலம் இது என்ற சிறப்பும் இதற்கு உண்டு. இத்தலத்தில் மூன்றாம் பிரகாரத்தில் ஆறுமுருகப்பெருமான் 12 திருக்கரங்களுடன் தனது தேவியர் இருவருடன் மயில் வாகனத்தில் எழுந்தருளியுள்ளார்.

சைவ சமயத்தில் 28 ஆகமங்கள் உண்டு. இவற்றை 28 லிங்கங்களாக இத்தலத்தில் முருகப்பெருமான் பிரதிஷ்டை செய்து பூஜை செய்துள்ளார். இந்த லிங்கங்கள் கோயிலின் வடமேற்கு பகுதியில் தனி சன்னதியில் அமைந்துள்ளன. இதில் தெற்கு வரிசையில் உள்ள லிங்கங்களில் நடுவில் விநாயகரும், மேற்கு வரிசையில் உள்ள லிங்கங்களின் நடுவில் வள்ளி தெய்வானையுடன் முருகனும் அருள் பாலிக்கின்றனர். 28 ஆகமங்களுக்குரிய பெயர்களான, காமிகேஸ்வரர், யோகேஸ்வரர், சிந்தியேஸ்வரர், காரணேஸ்வரர், அஜிதேஸ்வரர், தீபதேஸ்வரர், சூட்சமேஸ்வரர், சகஸ்ரேஸ்வரர், அம்சுமானேஸ்வரர், சப்பிரபேதேஸ்வரர், விசயேஸ் வரர், விசுவாசேஸ்வரர், சுவாயம்பேஸ்வரர், அநலேஸ்வரர், வீரேஸ்வரர், ரவுரவேஸ்வரர், மகுடேஸ்வரர், விமலேஸ்வரர், சந்திரஞானேஸ்வரர், முகாம்பிகேஸ்வரர், புரோத்கீதேஸ்வரர், லலிதேஸ் வரர், சித்தேஸ்வரர், சந்தானேஸ்வரர், சர்வோத்தமேஸ்வரர், பரமேஸ்வரர், கிரணேஸ்வரர், வாதுளேஸ்வரர் என்ற பெயர்கள் அவற்றுக்கு சூட்டப்பட்டுள்ளன. இந்த அமைப்பு வேறு எங்கும் காணஇயலாத சிறப்பாகும். இதனால் இக் கோயிலை ஆகமக்கோயில் என்றும் அழைப்பார்கள்.

இங்குள்ள அம்மனின் திருநாமம் விருத்தாம்பிகை. ஒருமுறை திருவண்ணாமலையிலிருந்து சிதம்பரம் செல்ல வந்த குரு நமச்சிவாயர், இத்தலத்தில் இரவு தங்கினார். அப்போது அவருக்கு பசி ஏற்பட்டது. பசியை போக்க, இத்தல பெரியநாயகி யிடம் சோறு வேண்டி, 'கிழத்தி' என்ற சொல் வரும்படி ஒரு பாடல் பாடினார். இதைக்கேட்ட பெரியநாயகி கிழவி வேடத்தில் அங்கு வந்து, 'கிழவி எவ்வாறு சோறு கொண்டு வர முடியும்? இளமையுடன் இருந்தால் தான் நீ கேட்டது கிடைக்கும்', எனக் கூறி மறைந்தாள். இதைக்கேட்ட குரு நமச்சிவாயர், 'அத்தன் இடத்தாளே, முற்றா இளமுலை மேலார வடத்தாளே சோறு கொண்டு வா' என பாடினார். இந்தப் பாட்டில் மயங்கிய அம்மன் இளமைக் கோலத்துடன் அவருக்கு காட்சியளித்து சோறு போட்டாள். அன்று முதல் 'பாலாம்பிகா' என்ற பெயர் இவளுக்கு ஏற்பட்டது.

சைவர்களின் 'சிவாயநம' என்ற ஐந்தெழுத்து மந்திரத்தைப் போன்று, இக்கோயிலில் எல்லாமே ஐந்துதான். ஐந்து மூர்த்தங்கள்: விநாயகர், முருகன், சிவன், சக்தி, சண்டிகேஸ்வரர், இறைவ-னின் ஐந்து திருநாமம்: விருத்தகிரீஸ்வரர், பழமலைநாதர், விருத்தாசலேஸ்வரர், முதுகுன்றீஸ்வரர், விருத்தகிரி, ஐந்து விநாயகர்: ஆழத்து விநாயகர், மாற்றுரைத்த விநாயகர், முப்பிள்ளையார், தசபுஜ கணபதி, வல்லப கணபதி, இறைவனை தரிசனம் கண்ட ஐவர்: உரோமச முனிவர், விபசித்து முனிவர், குமார தேவர், நாத சர்மா, அனவர்த்தினி, ஐந்து கோபுரம்: கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு மற்றும் கண்டராதித்தன் கோபுரம், ஐந்து பிரகாரம் (திருச்சுற்று): தேரோடும் திருச்சுற்று, கைலாய திருச்சுற்று, வன்னியடி திருச்சுற்று, அறுபத்து மூவர் திருச்சுற்று, பஞ்சவர்ண திருச்சுற்று, ஐந்து கொடிமரம்: இந்த கொடி மரங்களின் முன்புள்ள நந்திகளுக்கு இந்திர நந்தி, வேதநந்தி, ஆத்மநந்தி, மால்விடைநந்தி, தர்மநந்தி என்று பெயர், ஐந்து உள் மண்டபம்: அர்த்த மண்டபம், இடைகழி மண்டபம், தபன மண்டபம், மகா மண்டபம், இசை மண்டபம், ஐந்து வெளி மண்டபம்: இருபது கால் மண்டபம், தீபாராதனை மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், விபசித்து மண்டபம், சித்திர மண்டபம், ஐந்து வழிபாடு: திருவனந்தல், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தஜாமம், ஐந்து தேர்: விநாயகர் தேர், முருகன் தேர், பழமலை நாதர் தேர், பெரிய நாயகி தேர், சண்டிகேஸ்வரர் தேர், தலத்தின் ஐந்து பெயர்: திருமுதுகுன்றம், விருத்தகாசி, விருத்தாசலம், நெற்குப்பை, முதுகிரி.

காசியைப் போன்று விருத்தாசலமும் முக்தி தலமாகும். இங்குள்ள மணிமுத்தாறு நதியில் நீராடி மூலவர் பழமலைநாதரை வழிபட்டால், காசியில் நீராடி விஸ்வநாதரை வழிபட்ட பலன் கிடைக்கும் என்பது ஐதீகம். எனவே, இத்தலம் 'விருத்தகாசி' என்றும் அழைக்கப்படுகிறது. கோயிலின் வடக்கு, கிழக்கு ஆகிய இரு திசைகளிலும் அரை வட்ட வடிவில் செல்கிறது மணிமுத்தாறு. இந்த ஆற்றில் நீராடி, பழமலைந-ாதரை வழிபட்டால், பாவங்கள் விலகும் என்பது நம்பிக்கை. கோயிலின் வடக்கு கோபுரத்துக்கும் நேர் வடக்கில் ஆற்றில் குளிப்பதே சிறந்தது என பக்தர்கள் நம்புகின்றனர். இந்த இடம் புண்ணிய மடு என குறிப்பிடப்படுகிறது. இவ்விடத்தில் இறந்தவர்களின் எலும்புகளை இட்டால், அவை கல்லாக மாறி இறந்தவரின் உயிர் நற்பயனை அடையும் என்பதும் இன்னொரு நம்பிக்கை. அதனால்தான் இன்றும் நீத்தார் இறுதிச் சடங்குகளையும், இறந்தவர்களின் நினைவாக மாசி மகத்தன்று திதி கொடுப்பதையும் மணிமுத்தாற்றில் செய்கின்றனர். இங்கு உயிர் நீப்பவர்களை பழமலைநாதர் தன் மடி மீது கிடத்தி ஐந்தெழுத்து உபதேசம் செய்ய, பெரிய நாயகி முந்தானையால் வீசி முக்தியளிப்பதாக கந்தபுராணத்தில் கச்சியப்பமுனிவர் குறிப்பிட்டு உள்ளார்.

**வழிப்போக்கன்**


பக்தர்கள் வணங்குவதற்கு மட்டுமல்ல, கலாரசிகர்கள் கண்டு தரிசிக்கவும் இக்கோயில் முக்கியமானது. தஞ்சை, ஸ்ரீவில்லிப்புத்தூர், மதுரை, நெல்லை... போன்ற தமிழகத்தின் கலைக்கோயில்களுக்கு இணையாக குறிப்பிடும் அளவுக்கு இக்கோயிலிலும் சிற்பங்கள் அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளது. கோயிலில் வடக்கு, தெற்கு கோபுர வாயில்களில் அமைந்துள்ள ஆடல் மகளிர் சிற்பங்களில் பல நுட்பமான பரதநாட்டிய அடவுகள் வடிக்கப்பட்டுள்ளது. இது போன்ற ஆடற்சிற்பத் தொகுதிகள் தஞ்சாவூர், சிதம்பரம், தாராசுரம் ஆகிய ஊர்களில் காணப்பட்டாலும், இந்தச் சிற்பங்களே காலத்தால் முந்தையதாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது. சிற்பிகள் சிற்பக் கலையில் மட்டும் வல்லவராயிருந்தால் மட்டும் இத்தகைய கலை நுட்பம், சிற்பத்தில் வெளிப்பட்டு விடாது. ஆடல் கலை நுட்பங்களும் அறிந்திருந்தால் மட்டுமே இத்தகைய சிற்பங்களை வடிப்பது சாத்தியம். அக்காலச் சிற்பிகள் இரு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்




**COTTAGE / CAMPGROUND FOR SALE**
**Property and Business**

*10 River front cottages with 1-2-3 bedrooms fully equipped comfortable house keeping. 20 trailer homes. One bungalow house with double car garage. Big party hall. The property has own access to the front river. Motor boating, fishing and swimming, 3 boats. 1 Johndeer, 2 golf carts.* *1½ hours from Toronto*



Sugu: 416.727.6525 www.hickorygrovecottages.com www.troutwatercamping.com

போர்ச்சூழல் பல சமயங்களில் விசித்திரமானது. மரணிக்கும் உடல்களுக்கு அப்பால் பெரும் பாலான சமயங்களில் அடக்கு முறையின் உக்கிரம் ஒரு தனிப்பட்ட மனிதனின் வீட்டிற்குள்ளும் நுழைந்துவிடும். இது எமக்கு புதிதல்ல. மலசல கூடங்களுக்குள் துப்பாக்கியின் காவலர்களை சர்வசாதரணமாக கண்டுள்ளோம். எம்மிடம் இது போன்ற பல கதைகள் உண்டு. இவை வெளி உலகிற்கு தெரியாது. மரணித்த உடல்களுள் இவை புதை உண்டு போயின. எமது இனத்தைப் போலவே நீண்ட காலமாக தமது இறைமைக்காக போராடி வரும் பாலஸ்தீனத்தில் நடந்த உண்மைக் கதை இது.

கி.மு 10,000 - 600 வருட காலப் பகுதியில் இருந்து பாலஸ்தீனிய பகுதி வரலாறு ஆரம்பமாகின்றது. கி.மு 333 ஆம் ஆண்டளவில் அலெக்ஸான்டர் கிரேக்கத்தின் கீழ் கொண்டு வந்தார். 1914ல் முதலாம் உலகப் போரின் போது பிரித்தானியா பாலஸ்தீனிய பகுதியை சுதந்திர நாடாக பிரகடனம் செய்வதாக கூறி ஏமாற்றிவிட்டது. அப்பொழுது அப்பகுதியில் வாழ்ந்த யூதரின் எண்ணிக்கை மிகக் குறைவு. 1988க்கு பின்னர் பல சம்பவங்கள் நடை-பெற்றுள்ளன. அதாவது இக்கதையின் காலகட்டத்தில். 1988ல் பாலஸ்தீனிய தலைவர் அபு ஜிகாத் அவரது இல்லத்தில் வைத்து மொஸாட்டினால் சுட்டுக்கொல்லப்படுகின்றார். 20-05-1990ல் ரெல் அவிவ்க்கு அருகாமையில் வைத்து 7 பாலஸ்தீனிய தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பாலஸ்தீனிய மக்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு ஐ.நாவில் யசீர் அரபாத்தால் வைக்கப்பட்ட கோரிக்கை வீட்டோ பாவிக்கப்பட்டு நிராகரிக்கப்படுகின்றது. அமெரிக்காவை பகிஸ்கரிக்க பாலஸ்தீனிய தலைமை முடிவெடுக்கின்றது. பின்னர் காசாப் பகுதியில் புதிய பாலஸ்தீனிய குடியிருப்புக்கள் தோன்றுகின்றன. இந்த காலத்தில் எல்லையை ஒட்டியுள்ள பல வீடுகளுள் புகுந்த இஸ்ரேலிய இராணுவம் அந்த வீடுகளை கைப்பற்றி அவற்றை தமது முகாமாக மாற்றுகின்றன. பாலஸ்தீனிய போரின் போது இறந்தவர்களில் 80 வீதமானோர் 30 வயதுக்குட்பட்டோர்.

1992 ஆம் வருடம். பாலஸ்தீனிய புத்திஜீவி காசாப் பகுதியில் தமது குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றார். இவர் ஒரு ஆங்கில ஆசிரியர். உயர் பாடசாலையில் ஆங்கில பிரிவுத் தலைவர். பல கனவுகளுடன் இவரது குடும்பம் வாழ்ந்து வருகின்றது. மூத்த மகள் படிப்பில் கெட்டிக்காரி. தந்தைக்கு அவளை ஜேர்மனிக்கு அனுப்பி வைத்தியராக்க ஆசை. அவள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றாள். அடுத்து இரு இளைஞர்கள், ஒரு சிறுவன். சிறுமி என ஐந்து பேர் அவ் வீட்டில்.

ஒரு நாள் இரவு திடீரென இஸ்ரேலிய இராணுவம் இவர்களது வீட்டினுள்

# Private

நுழைகின்றது. துப்பாக்கி முனையில் அனைவரையும் வரவேற்பறையினுள் தள்ளு கின்றது. மறுநாள் காலை. கொமாண்டர் இவர்களிடம் ஒரு விண்ணப்பத்தை கூறுகின்றார். ''நீங்கள் கீழ்த்தளத்தில் தங்கலாம், இல்லையேல் வீட்டை விட்டு வெளியேற வேண்டும்". வீட்டின் தலைவர் வீட்டில் கீழ்த்தளத்தில் தங்க சம்மதிக்கின்றார். தனது சொந்த வீட்டிலேயே தாங்கள் எங்கு தங்குவது என்பதை அத்து மீறிய இராணுவம் தீர்மானிக்கின்றது. அடுத்து கொமாண்டர் கூறியது ஒரு அதிரடி "கீழ்த்தளத்தில் சூரிய அஸ்தமனத்தின் போது கீழ்த்தள வரவேற்பறைக்குள் நீங்கள் அனைவரும் செல்ல வேண்டும், பின்னர் சூரிய உதயத்தின் போது தான் வெளிவரவேண்டும். மேல் தளத்திற்கு நீங்கள் எக் காரணம் கொண்டும் செல்ல முடியாது, மீறினால் தண்டனை உண்டு". இவர்களது வீட்டை இராணுவம் ஆக்கிரமித்தமைக்கான காரணம், இவர்களது வீட்டில் இருந்து 15அடி தூரத்தில் புதிய குடியிருப்பு ஒன்று அமைய இருப்பதே.



வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை முன்வைக்கின்றார்கள்.
தாய்: என்னால் ஒரு நாளைக்கு மேல் இந்த வீட்டில் தங்கமுடியாது.
மகள்: அவர்களுக்கு எங்களை வெளியேற்ற அதிகாரம் இல்லை.
தகப்பன்: என்னால் அகதியாக முடியாது.

பாடசாலைக்கு எல்லோரும் செல்லும் பொழுது தாய் மாத்திரம் வீட்டில் தனித்து தங்க வேண்டும். அவள் தானும் அவர்களுடன் வர விரும்ப, கணவன் அதற்கு "நாங்கள் பயந்ததாக காட்டினால் பிள்ளைகளும் பயப்படுவார்கள்" எனக் கூறுகின்றார். இந்த வீட்டின் வெளியில் ஒரு சிறு கூடாரம் ஒன்றை கட்டுகின்றனர். அப்பொழுது ஒரு மகன் "இதை அவர்கள் உடைக்கலாம்" என்கின்றான். அதற்கு தந்தை "ஆம் உடைக்கலாம். மீணடும் கட்டுவோம் உடைப்பார்கள் மீண்டும் கட்டுவோம். அவர்கள் களைக்கும் வரை மீண்டும் கட்டுவோம்"என்கின்றார்.

ஒவ்வொரு இரவும் ஒரு யுகமாக செல்கின்றது. ஒரு நாள் இரவு மேல் தளத்தில் இருந்து துப்பாக்கி சூட்டுச் சத்தம் கேட்கின்றது. பாலஸ்தீனிய குடியிருப்பு பகுதியை நோக்கி சுடுகின்றார்கள். கீழத்தளத்தில் அறை பூட்டப்படும் பொழுது சிறுமி மாத்திரம் மறு அறையில் தவறுதலாக அடைபட்டு விடுகின்றாள். அச்சிறுமி மறுநாள் முழுவதும் நித்திரை கொள்ளவில்லை. பெற்றோரை விட்டு எங்கும் செல்லக் கூடாது என்ற பயத்தில் அவ்வாறு நித்திரை கொள்ளவில்லை.

இவர்களது வீட்டுக்கு எவரும் வர அனுமதியில்லை. தனித் தீவு போன்று பயத்திலும், வெறுமையிலும், ஏமாற்றத்திலும் வாழ்கின்றனர். தந்தை எடுக்கும் முடிவுகளே இறுதியானவை. தந்தை வீட்டை விட்டு வெளி யேறுவது தன்னையும் தனது குடும்பத்தையும் அகதியாக்கி விடும் என்ற கருத்துடன் பேரழிவாளர்களது தந்திரங்களும் கோட்பாடு



களும் இவ்வாறான ஆக்கிரமிப்புக்கள் மூலம் மக்களை களைப்படையச் செய்து அடிபணியச் செய்தல் என நினைக்கின்றார். எனது மண், எனது மக்கள், எனது வீடு என்பவற்றை விட அவர்களது அணுகு முறைக்கு எதிராக எதிர்க்க வேண்டும் என முடிவெடுக்கின்றார். சில சமயங்களில் தாழ்ந்து போவது போல் செயற்பட்டாலும் இறுதிவரை உறுதியுடன் உள்ளார். இவரது மனைவி ஐந்து பிள்ளை களின் தாய் இவற்றை பற்றியெல்வலாம் கவலைப்படாமல் தனது பிள்ளைகளுக்கு இந்தச் சூழல் ஏற்றதல்ல. வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என விரும்புகின்றார். மூத்த மகள் 18ஐ தொடும் வயது. தந்தையின் தீர்மானத்தில் உறுதியாக இருக்கின்றார். அரசி யலை உணர்ந்து, புரிந்து கொள்ளும் பருவம். அவர்களை எதிர்க்கின்றார். அடுத்த இரு பையன்கள் 13-16 வயதிற்குள் இருக்கும். ஒருவர் ஒதுங்க விரும்புகின்றார். மற்றவர் எதிர்க்க விரும்புகின்றார். வீட்டுக்கு வெளியில் இவர்கள் அமைக்கும் கூடாரத்திற்கு அருகில் டைனமைட்டை புதைத்து வைக்கின்றார் இஸ்ரேலிய இராணுவம் வெளியில் உலாவும் போது இறக்க வேண்டும் என்பதற்காக. வீட்டிற்குள் இருந்து கொண்டே இந்த குடும்பத்தினர் தங்களது எதிர்ப்பை தெரிவிக்கின்றனர்.

இஸ்ரேலிய இராணுவத்தினரின் நடவடிக்கைகளே பலரை இவர்களுக்கு எதிராக செயல்பட தூண்டுகின்றது. இங்கும் தந்தை, மகள், மகன் என மூவர் இவர்களுக்கு எதிராக செயல்படுகின்றனர். இவர்கள் அடிப்படையில் போரை எதிர்த்தாலும் நடைபெறும் சம்பவங்கள் இவர்களை போருடன் அடித்துச் செல்கின்றது. இது போன்ற சம்பவத்தைக் கொண்ட மற்றொரு படத்தையும் நிச்சயம் குறிப்பிடவேண்டும் Lemon Tree - எலுமிச்சை மரம். வெஸ்ட் பாங் எல்லை பகுதியில் உள்ள பாலஸ்தீனிய விதவை ஒருவரின் வீட்டுக்கு எதிரே இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரின் வீடு உள்ளது. இப் பெண்மணியின் வீட்டுடன் ஒரு எலுமிச்சை தோட்டமும் உண்டு. அங்கு தான் பிரச்சினை ஆரம்பமாகின்றது. இந்த எலுமிச்சை தோட்டம் தங்களது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளது என்கின்றனர் தோட்டத்தை அழிக்க முடிவெடுக்கின்றனர். இதனை இப் பெண்மணி எதிர்க்கின்றனர். இவ்வாறு

## தூறல்

### வானரன்

பல படங்கள் இஸ்ரேலிய பாலஸ்தீனிய பிரச்சினையை மையமாகக் கொண்டு வெளிவந்துள்ளன.

இப்படம் இத்தாலியின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள Calabria பகுதியில் படமாக்கப்பட்டுள்ளது. இதனை இயக்கியுள்ள இத்தாலிய இயக்குனர் Saverio Costanzo ன் முதல் படமிது. இதற்கு முன்பு இவர் விவரணத் திரைப்படங்கள் பலவற்றை இயக்கியுள்ளார். குளோசப் காட்சிகள் எதுவுமின்றி, நடிகர்களின் இயல்பை வெளிப்படுத்தியுள்ளார். சூழலின் இறுக்கத்தை வெளிப்படுத்த கமரா பல கோணங்களில் நடிகர்களின் அசைவுகளை பதிவு செய்துள்ளது. படம் சுமார் 30க்கு மேற்பட்ட நாடுகளில் திரையிடப்படுள்ளது. ஆனால் இஸ்ரேலில் திரையிடப்படவில்லை. இதற்கான பிர-தான காரணம் இஸ்ரேலிய அரசு இப்படங்கள் மக்களின் மனதை மாற்றி இஸ்ரேலிய மக்களை அரசுக்கு எதிராக திருப்பிவிடும் என்ற பயம்.

படத்தில் இஸ்ரேலின் அக்கிரமத்தின் மத்தியில் பாலஸ்தீனிய ஆணாதிக்கத்தையும் மறைமுக மாக சாடியுள்ளது. ஒரு தாய் அனைவரும் வேலைக்கும், பாடசாலைக்கும் சென்ற பின், வீட்டின் மேல் தளத்தில் இராணுவத்தினர் இருக்கும் பொழுது தனியே இருத்தல் என்பது மிகவும் கொடூரமானது. இவரின் மனோ நிலையை எவரும் புரிந்து கொள்ளவில்லை. இளம் பெண்கள் மத்தியில் எழுந்துள்ள மாற்றங்களையும் பதிவுசெய்துள்ளது. மேற்குலகம் சொல்லும் பயங்கரவாதம் என்பது மேற்குலகால் தான் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டில் வாழும் மனிதர்களுக்கும், இஸ்ரேலிய இராணுவத்திற்கும் சாதாரண நட்பு கூட தோன்றவில்லை. இயந்திரத்தனமான இயக்கமே இராணுவத்திடமிருந்தது. இயக்குனர் பாலஸ்தீனிய குடும்பத்தின் வலியை வெகுசிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். அக்குடும்பத்தின் சகிப்புத் தன்மையை மீற போராட்ட குணத்தை வெளிப்படுத்துகின்றன.

இப்படங்கள் எமக்கு என்னத்தை உணர்த்து கின்றன. பாலஸ்தீனியரை இஸ்ரேலியர் சமூக, பொருளாதார நிலைகளில் ஒடுக்குகின்றனர். இப்படங்கள் உண்மையை பிரதிபலிக்கின்றன. அடக்குமுறையை நேரடியாக சந்தித்து நம்பிக்கையுடன் காத்திருக்கின்றார்கள பாலஸ் தீனிய மக்கள். இஸ்ரேலுடன் உறவு வைக்கும் நாடுகளை கேள்வி கேட்கின்றது. இஸ்ரேலியர் திட்டமிட்டு பாலஸ்தீனிய இளைஞர்களை சுட்டுக் கொல்கின்றனர். உலகம் கைகட்டி பார்த்து நிற்கின்றது.

எம்மிடம் இது போன்ற பல கதைகள் உண்டு. உலகரங்கிற்கு அவற்றை நாம் கொண்டு செல்ல வேண்டும்.

Divine Intervention இப்படம் 2002ல் கான்ஸ்லில் நடுவர் விருதைப் பெற்ற பாலஸ்தீனிய படம். பல திரைப்படவிழாக்களில் விருதுகளை பெற்றுள்ளது. ஒஸ்கார் இப்படத்தை நிராகரித்து விட்டது. காரணம் பாலஸ்தீனியம் ஒரு நாடல்ல எனக் கூறியது. தேசமற்ற தாய்வான், கொங்கோங் போன்ற பிரதேசங்களின் படங்களை அங்கீகரித்துள்ளது ஒஸ்கார். இன்றைய பாலஸ்தீனத்தை தீர்மானிக்கும் சக்திகளாக இஸ்ரேலும், அமெரிக்காவும் உள்ளன.

இப்படங்களை வி.ஐ.பி வீடியோ (கொப்பர் கட் பிளாசா), ஆங்கில வீடியோக் கடைகள், ரொரண்ரோ நகர பெரும்பான்மை நகர நூலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

REAL ESTATE
வகுப்புகள்

ரொறொன்ரோவில் இலவச
ஆதனவியல்
(*Real Estate*) வகுப்பு
ஆரம்பிக்க இருக்கின்றது.
தொடர்புகளுக்கு: ***Vanessa - 416.321.6969***



***HomeLife/GTA Realty Inc.*** இன் வருடாந்த நத்தார் கொண்டாட்டம் (Christmas Party) டிசெம்பர் 09, 2009 இல் மார்க்கம் நகரில் அமைந்துள்ள நியூ ஜாஸ்மின் விருந்து மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ***HomeLife/GTA Realty*** நிறுவனத்தின் வியாபார முகவர்கள் அவர்கள் குடும்பத்தினர், பணி புரிபவர்கள் மற்றும் அழைக்கப்பட்ட சிறப்பு விருந்தினர்கள் இந்நிகழ்வில் மிகவும் மகிழ்ச்சியுடன் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வில் 2009 ஆம் ஆண்டு ஆதன வியாபாரத்தில் சிறப்பாக செய்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. அத்துடன் பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் ***'Tridel'*** நிறுவனத்தின் 'Senior Marketing Manager' Sam Fung அவர்களும் Parallax Group இன் சார்பில் Mat Nutson அவர்களும் பிரசன்னமாயிருந்தார்கள்.

Top Producer - 2009 இன் விருதினை சிவா சிவஞானமும் Top Lister - 2009 விருதினை ஞானி நரசிங்கம், மற்றும் ஜுடி ஞானேந்திரனும் பெற்றுக்கொண்டார்கள். இவர்களுக்கும் இவ்வாண்டு வியாபாரத்தில் சிறப்பாக செய்த அனைத்து வியாபார முகவர்களுக்கும் எமது வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்களில் சில. அத்துடன் ஒரு பகுதி முகவர்களையும் படத்தில் காணலாம்.

குறிப்பு: ***HomeLife/GTA Realty Inc.*** 2003ஆம் ஆண்டு ஸ்காபரோவில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது ஸ்காபரோ, மிசிசாகா நகரங்களில் இரு நிறுவனங்களுடனும் 125 இற்கு மேற்பட்ட முகவர்களுடனும் திரு. ராஜா மகேந்திரன், திரு. எடி வூ இன் தலைமையின் கீழ் நடத்தப்படுகின்றன. இந்நிறுவனதில் இணைந்து வாழ்வில் வெற்றியடைய ***416.321.6969*** என்னும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

















# “ரசனையான தயாரிப்பாளர் இல்லையென்றால் திரைக்கதை வெற்றுக்காகிதம்!”

## சந்திப்பு: இயக்குனர் மீராகதிரவன்

‘அவள் பெயர் தமிழரசி’... இன்னும் படமே வெளிவரவில்லை. அதற்குள் தமிழ் சினிமாவுக்குள் நல்ல சினிமாவை விரும்புபவர்கள் மத்தியில் மிகப் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது இந்தப் படம். அதற்குக் காரணம், இயக்குநர் மீராகதிரவன். எழுத்தாளர், இயக்குநர் லோகிததாஸுடனும் தங்கர்பச்சானிடமும் பணியாற்றியவர் என்பது ஒரு பக்கம், இன்னொரு பக்கம், திரைக்கு வருவதற்கு முன்னதாகவே துபாய் சர்வதேச திரைப்பட விழாவில் ‘அவள் பெயர் தமிழரசி’ திரையிடப்பட்டது என்கிற காரணம். இயக்குநர் மீராகதிரவனை சந்தித்தோம்.

கேள்வி: படம் வெளியாகும் முன்பே விருதுபெற்ற முதல் தமிழ் சினிமா இயக்குநர் நீங்களாகத்தான் இருப்பீர்கள் என நினைக்கிறோம். வாழ்த்துகள். படம் எப்போது வெளியாகும்?





மீராகதிரவன்: டிசம்பர் கடைசியில, இல்லன்னா, ஜனவரிக்கு மேல ஆயிடும். படம் எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன. இப்போ தியேட்டர் கிடைக்கிறதுதான் பிரச்சனையா இருக்கு.

கேள்வி: இங்கே விருது படம் என்றால் ஒரு சாரார் மத்தியில் நல்ல பெயர் இருக்கும். ஆனால், வியாபார ரீதியாக தோல்வியைத் தழுவும். ‘அவள் பெயர் தமிழரசி’ எப்படிப்பட்ட படமா இருக்கும்?

மீராகதிரவன்: என் வாழ்க்கையில் நடந்த ஒரு சின்ன நிகழ்ச்சிதான் படமா விரிஞ்சிருக்கு. ஆனா, முழுக்க முழுக்க புனைவுதான். நிறைய எதிர்பார்ப்பை கிளப்பி விட்டிருக்கு. நிச்சயமா எல்லாருக்குமே பிடிச்ச படமா இருக்கும். வாழ்க்கையைப் பார்க்கறது மாதிரியான படமா இருக்கும். அன்பை போதிக்கிற, மனிதர்களின் மதிப்பைச் சொல்கிற படமா இருக்கும். தினசரி வாழ்க்கை நமக்குத் தெரியாமலேயே நம்மை கரையான் மாதிரி அரிச்சு தின்னுக்கிட்டு இருக்கு. அதுல ஒருத்தருக்கொருத்தர் எப்பிடி விட்டுக்குடுத்து வாழணும்னு சொல்லித் தர்ற படமா இது இருக்கும்னு உறுதியா சொல்லலாம்.

கேள்வி: உங்களுடைய சொந்த ஊர் எது?

மீராகதிரவன்: எனக்கு திருநெல்வேலி மாவட்டம் சொக்கம்பட்டி கிராமம்தான் சொந்த ஊர். எங்க கிராமத்துல இருந்து, எங்க பரம்பரையிலருந்து, சினிமாவுக்கு வந்த முதல் ஆள் நான் தான். இப்போதான் இன்னொருத்தர் வந்திருக்கார். அவர் கேரளாவுல, எம்.டி. வாசுதேவன் நாயர் படத்துல கேமராமேனா வேலை பார்க்கிறார்.

கேள்வி: அதென்ன மீராகதிரவன்னு பேர் வச்சிருக்கீங்க?

மீராகதிரவன்: எனக்கு தாய்ப்பாசம் அதிகம். அம்மா பேரு மீரா. அவங்க பேரை என் பேரோட சேத்து வச்சுக்கிட்டேன்.

கேள்வி: சினிமாவுக்கு எப்பிடி வந்தீங்க?

மீராகதிரவன்: ப்ளஸ்டூ வரைக்கும் படிச்சேன். ஒரு நாள் வீட்ல கோவிச்சுக்கிட்டு கேரளாவுல இருக்குற எர்ணாகுளத்துக்குப் போயிட்டேன். அங்க என் நண்பர்கள் கொஞ்சம் பேர் இருந்தாங்க. அங்கதான் எனக்கு நல்ல சினிமா, நல்ல புத்தகங்கள் எல்லாம் அறிமுகமாச்சு. அதுக்கப்புறம் 1998 டிசம்பர் மாசம் சென்னைக்கு வந்தேன். ஏற்கெனவே, கேரளா, சினிமா பத்தின ஒரு பெரிய தாக்கத்தை எனக்குள்ள ஏற்படுத்தியிருந்துச்சு. எனக்கும் சினிமா மேல அப்பிடி ஒரு ஆர்வம் வந்துடுச்சு. சினிமாவைத் தேடி வர்ற எல்லாருக்கும் இருக்குற மாதிரி எனக்கும் கனவு இருந்துச்சு. பெரிய ஆளா ஆகணும்னு. ஆனா, நான் உதவி இயக்குநரா ஆகறதுக்கே அஞ்சு வருஷம் ஆயிடுச்சு. எப்பிடியோ ஒரு இயக்குநர்கிட்ட சேந்துட்டேன். ஆனா, அந்தப் படம் தோல்வி அடைஞ்சிடுச்சு. அதுக்கப்புறம்தான், இனிமே சின்ன இயக்குநர்கள்கிட்ட வேலை பாக்கக்கூடாது, பெரிய இயக்குநர்கள் யார்கிட்டயாவது வேலை பாக்கணும்னு முடிவு பண்ணினேன்.

கேள்வி: நீங்கள் ஒரு எழுத்தாளரும்கூட. மலையாளத்தில் இருந்து தமிழுக்கு பல மொழிபெயர்ப்புகளைச் செய்திருக்கீங்க. எப்போது எழுத ஆரம்பிச்சீங்க?

மீராகதிரவன்: சரியா சொல்லணும்னா, நான் முதல் படத்துல உதவி இயக்குநரா வேலை பாத்ததுக்கு அப்புறம்தான் எழுத ஆரம்பிச்சேன். ‘நிழல்’ திருநாவுக்கரசு என்னோட நண்பர். அவர் மூலமா, ‘காலக்குறி’ங்கற பத்திரிகைல என்னோட முதல் சிறுகதை ‘வதை’ வெளிவந்தது. அ.ஜா.கான்-னு ஒருத்தர் அதை நடத்திக்கிட்டு இருந்தார். அப்புறம் இன்னொரு சிறுகதை ‘அம்மாவின் பாடல்களும் நிறைவுபெறாத கதைகளும்’, கணையாழியில வெளியாச்சு. நிறைய படிக்கறதும் எழுதறதும் எனக்கு புது தெம்பை குடுத்துச்சு. பெரிய இயக்குநர்கள் கிட்ட வாய்ப்பு கேட்டு போக ஆரம்பிச்சேன். அந்த சமயத்துலதான் ‘அழகி’ படம் ரிலீசாச்சு. எனக்கு அந்தப் படம் ரொம்ப பிடிச்சிருந்துச்சு. அதைப் பத்தி ஒரு விமர்சனம் கணையாழில எழுதினேன். அது மூலமாத்தான் இயக்குநர் வ.கௌதமன் எனக்கு அறிமுகமானார். அவர், என்னை இயக்குநர் தங்கர்பச்சான்கிட்ட அறிமுகப்படுத்தினார். அவரோட, ‘தென்றல்’ படத்துல உதவி இயக்குநரா வேலை பார்த்தேன். அதுக்கப்புறம் ‘பள்ளிக்கூடம்’, ‘ஒன்பது ரூபாய் நோட்டு’ படங்கள்ல டிஸ்கஷன்ல கூட இருந்தேன். ஆனா, அதே சமயம் என்னோட எழுத்து வேலை இன்னொரு பக்கம் தொடர்ந்து நடந்துக்கிட்டுதான் இருந்துச்சு.

‘கல்கி’-ல ‘மழைவாசம்’னு ஒரு சிறுகதை எழுதியிருந்தேன். ‘கூடல்நகர்’ படத்தோட இயக்குநர் சீனுராமசாமி அதைப் படிச்சுட்டு, என்னை இயக்குநர் பாலுமகேந்திராகிட்ட அறிமுகப்படுத்தினார். பாலுமகேந்திரா சார் அதைப் படிச்சுட்டு ரொம்ப பாராட்டினார். அதுக்கப்புறம் அவரை அடிக்கடி போய் பார்க்க ஆரம்பிச்சேன். நல்ல மொழிபெயர்ப்புகளை தமிழ்ல கொண்டு வரணும்னு எனக்கு ஆசை. எம்.டி. வாசுதேவன் நாயரோட ‘நிர்மால்யம்’, பத்மராஜனோட ‘பெருவழி அம்பலம்’, அடூர் கோபாலகிருஷ்ணனோட சினி-மாவைப் பற்றிய கட்டுரைகள் இதையெல்லாம் மொழிபெயர்த்தேன். கனவுப்பட்டறைல புத்தகமாக அவை வெளிவந்துள்ளன.

கேள்வி: மலையாள இயக்குநர் லோகிததாஸ்கிட்ட எப்போ சேர்ந்தீங்க?

மீராகதிரவன்: அவர் மலையாள சினிமா உலகத்துல ஒரு புதுமையைக் கொண்டு வந்தவர். எல்லா இயக்குநர்களும் நம்பூதிரிகளையும் வசதி படைச்சவங்களையும் பத்தி சினிமா எடுத்துக்கிட்டு இருந்தப்போ, லாரி டிரைவரைப் பத்தியும், சாதாரண ஸ்கூல் வாத்தியாரைப் பத்தியும் படம் எடுத்தவர் அவர்தான். அப்போ அவர் தமிழ்ல படம் பண்ற வேலையில இருந்தார். தமிழும் மலையாளமும் தெரிஞ்ச உதவி இயக்குநரைத் தேடிக்கிட்டு இருந்தாங்க. நான் அவர்கிட்ட போய் சேர்ந்தேன். ‘கஸ்தூரிமான்’ படத்துல முதல் உதவி இயக்குநரா வேலை பார்த்தேன். அவர்தான் என்னோட குருநாதர். தந்தை ஸ்தானத்துல இருந்து எல்லாத்தையும் சொல்லிக் குடுத்தார். ‘வாழ்க்கைக்குள்ள இருந்து எப்பயும் வெளியில போயிடக்கூடாது. மனிதர்களைவிட்டு விலகிப் போயிடக்கூடாது’ன்னு சொல்லுவார். பண்பட்ட குணம். எளிமையான மனிதர். திடீர்னு ஓட்டலுக்குப் போய் சாப்பிடலாம்னு கூப்பிடுவார்.

நேர்காணல் - பாலு சத்யா

ரெண்டு பேரும் போவோம். பெரிய ஃபைவ் ஸ்டார் ஓட்டல் இல்லை. சாதாரண, தெருவோரத்துல இருக்குற கையேந்தி பவன்ல சாப்பிடுவார். அவர் இறந்தப்போ, ஒட்டு மொத்த கேரளாவே வந்துடுச்சு. சரியான, நல்ல சினிமா பண்ணணுங்கறதை அவர்தான் எனக்கு கத்துக் குடுத்தார். அவர் படத்துல வர்ற ஒரு வசனம், ‘சாம்பலை எடுத்து வெள்ளிக் குத்துவிளக்கை துலக்குற மாதிரி மனசை எப்பவும் சுத்தமா வச்சுக்கோ!’ என்றிருக்கும். இதை வாழ்க்கையிலயும் கடைப்பிடிக்கச் சொன்னவர், கத்துக்குடுத்தவர் அவர்தான். ஆனா, ‘கஸ்தூரிமான்’ வியாபாரரீதியா வெற்றி பெறலை. அதுக்கப்புறம்தான் இயக்குநராகறதுக்காக முழு மூச்சா முயற்சி பண்ண ஆரம்பிச்சேன்.

கேள்வி: உடனே கதை, திரைக்கதை எல்லாம் தயார் பண்ணிட்டீங்களா?

மீராகதிரவன்: ஆமா. என்னோட கதையை முதல்ல நானே, என் சொந்தச் செலவுல ஒரு டிரெயிலரா எடுத்தேன். அதை தயாரிப்பாளர்கள்கிட்ட போட்டுக்காட்டி வாய்ப்பு கேட்க ஆரம்பிச்சேன். இயக்குநர் பாலுமகேந்திரா எழுத்துல கூட ஈஸியா சமாதானமாயிடுவாரு. ஆனா, படத்துல அவ்வளவு சீக்கிரம் சமாதானம் ஆக மாட்டார். அவரே, என்னோட டிரெயிலரைப் பாத்துட்டு, ‘நீ தாராளமா சினிமா இயக்குநராக முயற்சி பண்ணலாம்’னு சொல்லிட்டார். ‘மெட்ராஸ் டாக்கீஸ்’ல மணிரத்னம் சார் கம்பெனியில என்னோட படத்தை தயாரிக்க ஒத்துக்கிட்டாங்க. ஆனா, துரதிர்ஷ்டவசமா அவரோட சகோதரர் குலுமணாலில நடந்த ஒரு விபத்துல இறந்துட்டதால, என் படம் நின்னு போச்சு. அதுக்கப்புறம் நிறையபேர்கிட்ட முயற்சி செஞ்சேன். கடைசியில மோசர் பியர் கம்பெனியில முக்கியமான பொறுப்புல இருக்குற

தொடர்ச்சி 22ஆம் பக்கம்




# மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு நினைவு முத்திரை வெளியீடும் இளையோர் நிகழ்வும்




இங்கு எமது நாட்டு கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்கள் பல சிறப்பாக செயற்படுகின்றன. அவற்றில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கமும் ஒன்றாகும். தமது கல்லூரியின் நூற்றாண்டு நினைவை முன்னிட்டு ஆரம்ப நிகழ்வாக 14.11.2009ம் திகதி கெனடி வீதியில் அமைந்த எவரெஸ்ட் விருந்து மண்டபத்தில் காலை 9.00மணி தொடக்கம் 3.00 மணி வரை இளையோர் நிகழ்ச்சியும், பிற்பகல் 6.00மணி தொடக்கம் 11.00மணி வரை இரவு விருந்தினையும் நடத்தினார்கள்.

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், தாங்கள் முன்னெடுக்கும் நிகழ்ச்சிகளை சிறப்பாக செயற்படுத்துவதுடன், மற்றவர்களுக்கு முன் மாதிரியாக செய்வது வழக்கம். கடந்த மூன்று வருடங்களாக கல்லூரி மாணவர்களுக்கு கணிதம், பொது அறிவுப்போட்டிகளை நடத்தி வருகின்றனர்.

இம்முறை நூற்றாண்டை சிறப்பிக்கும் முதல் நிகழ்வாக இளையோருக்கான "இளையோர் நிகழ்ச்சியை (YOUTH EXPO-2009) நடத்தினார்கள். இந்நிகழ்ச்சி இளையோரின் பன்முக ஆற்றலையும், திறனையும் வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது. இந்நிகழ்ச்சி இரு பிரிவாக அமைந்திருந்தது. அரங்கத்தில் நடக்கும் நிகழ்ச்சியாகவும், மற்றது இளையோரின் திறனை வெளிப்படுத்தும் காட்சி பொருட்களாக சித்திரம், கைவினை பொருட்கள் காட்சியாகவும் காணப்பட்டது. அரங்கத்தில் இயல் இசை நாடகம் இளையோர் நிகழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சி மிகவும் சிறப்பாகவும், பார்வையாளர்களை கவரும் விதத்திலும் அமைந்திருந்தது. சில பிள்ளைகள் சிறப்பாக தங்கள் திறமையை வெளிப்படுத்தினார்கள். தமது



பிள்ளைகளுக்கும் இப்படி ஒரு நிகழ்வை வைத்து முன்னிலைப்படுத்தியமைக்கு சங்கத்திற்கு பெற்றோர்கள் பாராட்டை தெரிவித்தனர்.

பொருட்காட்சி முதல்முறையாக முன்னெடுக்கப் பட்ட காரணத்தால், எதிபார்த்தளவுக்கு அமையவில்லை. அடுத்த ஆண்டுகளில் கூடிய ஊக்கம் அளிக்கப்பட்டால் இந்நிகழ்ச்சியும் சிறப்பாக அமையும். இளையோர் நிகழ்ச்சியை தொடந்தும் சங்கம் நடத்தும் என்றும் நிர்வாகத்தினர் கூறினார்கள். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக திரு. லோகன் கணபதி அவர்களும், திரு நீதன் சண்முகராஜா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

அன்று மாலை நிகழ்ச்சி 6.00மணிக்கு ஆரம்பமாகியது குத்துவிளக்கேற்றல், கனடா தேசிய கீதம், கல்லூரி கீதம், மௌன அஞ்சலிகளுடன் தொடர்ந்து சங்கத்தலைவர் திரு இரவீந்திரனின் ஆரம்ப உரையுடன், மூன்று முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதல் நிகழ்ச்சியாக நூற்றாண்டு நினைவு மலர் "மகாஜனன்" வெளியிடப்பட்டது. மகாஜன பழைய மாணவியாகிய கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியன் அவர்கள் வெளியீட்டுரையை செய்தார்கள். முதன்மை விருந்தினர் டாக்டர் கணேசன் அவர்கள் சங்கக் காப்பாளர்களுக்கு முதல் பிரதிகளை வழங்கினார்.

அடுத்து சிறப்பு நிகழ்வாக நூற்றாண்டு நினைவு முத்திரை வெளியிடுதலை மகாஜனாவின் முன்னாள் அதிபர் திரு கனகசபாபதி அவர்கள் வெளியீட்டுரை நிகழ்த்தி முதல் முத்திரையை மகாஜனாவின் மூத்த ஆசிரியரும், சங்கத்தின் முதற் காப்பாளருமாகிய திரு கார்த்திகேசு அவர்களுக்கு வழங்கினார். இதை தொடந்து மகாஜனாவின் முன்னாள் ஆசியர்களுக்கு திரு கார்த்திகேசு அவர்கள் முத்திரைகளை வழங்கினார்.




இதன் பின் இவ்வாண்டு ஜனவரி மாதம் நடத்தப்பட்ட கணிதம், பொது அறிவுப் போட்டிகளின் வெற்றியாளர்களுக்கு பதக்கமும் சான்றுப் பத்திரங்களும் வழங்கப்பட்டன. இசை விருந்துடனும், உணவு விருந்துடனும் மகாஜனாவின் நூற்றாண்டு நினைவு ஆரம்ப நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

TORONTO BUSINESS COLLEGE



COMPUTERIZED ACCOUNTING DIPLOMA

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✓
- 3 வருடங்களுக்குள் EI பெற்றவர்கள் ✓
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள் ✓

அரசாங்க நிதி உதவியில் இலவசமாக கற்கலாம்

*Co-op Available*

CERTIFICATE COURSES

Take One Get One Free

WINDOWS, WORD, EXCEL, POWER POINT, ACCESS, OUTLOOK
PHOTO SHOP, QUICK BOOKS, SIMPLY ACCOUNTING, ACCPAC
DAY, EVENING, WEEK ENDS

FREE COMPUTER TRAINING FOR BEGINNERS

FREE PARKING SMALL CLASS SIZE

416-291-5155

4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH
t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

***Personal Prayer To The Holy Spirit***

Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted - R.R



Our Mother of Perpetual Help

# BASEMENT RENT

**EGLINTON & MIDLAND**
2 Bedroom walk-out bsmt. for rent. Parking, cable & laundry. Close to kennedy subway. All facilities close by. Avail. immediately.
647.886.3920 / 416.759.9675

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Wal-Mart in front. Close to doctors, plaza, school & TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.427.2521

**TAPSCOTT &FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.829.9797

**MARKHAM & MCLEVIN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.293.8327 / 647.308.8327

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom walkout bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.727.7550

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, library. Avail. January 01, 2010.
416.439.4054 / 416.899.4835

**MCCOWAN & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.315.5375

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.509.0102

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. January 01, 2010.
416.282.8585 / 416.801.8813

***MORNINGSIDE/LAWRENCE/KINGSTON***
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. High ceiling. Parking, internet, laundry, utilities inclu. Couple or small family preferred. Very close to TTC - 3 bus routes, shopping mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.283.2124

**WARDEN & LAWRENCE**
New 2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. TV cable & High speed internet free. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.258.2138

**MORNINGSIDE & McLEVIN**
New One Bedroom walk-out bsmt. apt for rent. Laundry & Cable. Close to TTC, school. Wal-Mart & many malls. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.519.2899

**NEILSON & McLEVIN**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking cable & laundry. Close to Malvern Mall, school, doctors & bus. Available immediately.
தொடர்புகளுக்கு: 416.358.4220

**BRIMELY & DENISON**
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0155

**PHARMACY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.759.2608 / 647.637.5425

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom Bsmt apt. for rent. Separate entrance, stove, fridge, washer, dryer, kitchen dinning etc. Very convenient location. Good for single or couple. Available immediately.
416.264.3899 / 647.808.1186

***EAST OF MORNINGSIDE & SHEPPARD***
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC. Family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.724.2564

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school, Tamil stores, mall. Avail. immediately. Family preferred.
தொடர்புகளுக்கு: 416.820.3116

**LAWRENCE & KENNEDY**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.752.0863

**MCCOWAN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.738.2523

**BRICHMOUNT & FINCH**
3 Bedroom walkout-out bsmt. apt. for rent. Sep. entrance, laundry facilities. Close to TTC, tamil stores, school, etc. No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.568.0686

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.5518379

**McCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Washer, dryer, internet, cable & parking. Close to mall, TTC, tamil stores & hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.554.2496

**MARKHAM & STEELES**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. 1000 Squre feet. Close to TTC, YRT, mall. Avail. immediately. ஒருவர் அல்லது இருவர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.726.0897

**MORNINGSIDE & MORNINGVIEW TRAIL**
2 Bedroom walkout bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable, internet. Close to TTC, school, shopping, tamil stores. Working ladies, students, small families preferred. No smoking & No pets. Avail. immediately.
416.830.0643 / 416.533.0768

# BASEMENT FOR RENT

## MORNINGSIDE & SHEPPARD

2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry & other facilities. Students, small family, working ladies preferred. No smoking & No pets. Avail. immediately.

***416.724.9493 / 647.290.9635***

**MCCOWAN & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, go train, shopping. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.224.4064

**NEILSON & FINCH**
2 Bedrooms bsmt for rent. Sep entrance. Parking, laundry. Bills Including. Close to 24 hours bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.456.1031

**MARKHAM & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Parking, kitchen, washroom. 1 Room also Available. Close to TTC, shopping. Ladies only. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.899.6300

**MARKHAM & ELSON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to school, TTC. Avail. immediately.
905.201.6043 / 416.725.3665

**MEADOWALE & SHEPPARD**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, tamil store. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.282.6282

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry included. Close to TTC, school, grocery. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.286.1628

**ELSON & MARKHAM**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.917.0557

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, shopping mall & other all facilities. Avail. Anytime.
416.902.1758 / 416.724.4752

**WESTNEY & ROSELAND**
1 Bed room basement apartment (Partially furnished) available in Ajax any time. Sep. Entrance. For detail call (647) 333 0029

**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to 24 hrs. bus service, school. Avail. anytime.
தொடர்புகளுக்கு: 416.272.4921

# CONDO. FOR SALE

**KENNEDY & EGLINTON**
Two Bedroom Condo. for Sale, schools,TTC, shops and all facilities close to the building. Convenient location. Available immediately.
contact. Arul: (647) 801-9720

*விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு*
***www.vlambaram.com***

# HOUSE FOR RENT

**NEILSON & FINCH**
4 Bedroom house for rent. Parking, laundry, cable. Close to TTC, parking, school. Rent $ 1100. Avail. immediately.
416.799.4915/416.631.4085

**DONMILLES & SHEPPARD**
3 Bedrooms house for rent. Parking, laundry, cable, internet. Close to 5 நிமிட நடை தூரத்தில் பஸ் தரிப்பிடம், Donmills Subway, school, mall, DVP, hwy 401. Avail. January 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.502.8053

**NEILSON & FINCH**
3 Bedroom house for rent. Close to TTC, mall . Avail. January 01, 2010.
416.332.2992/416.464.5149

**NEILSON & MCLEVIN**
4 Bedroom house for rent. Main floor 2½ washrooms, 4 parking. Close to TTC, school, mall etc. Avail. January 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.724.7603

**MORNINGSIDE & MCLEVIN**
3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. சகல வசதிகளும் உண்டு. அத்துடன் உங்கள் பிள்ளைகளை வீட்டில் வைத்து பராமரிக்கக் வேண்டுமா? அழையுங்கள்
416.357.5683 / 416.724. 1837

# HOUSE FOR SALE

## EGLINTON & DANFORTH NEW TOWN HOUSE

4 Bedrooms house for sale. 1St owner.
தொடர்புகளுக்கு: 647.201.3111

கொழும்பு வெள்ளவத்தை தயா வீதியிலுள்ள 3 படுக்கை அறைகள் கொண்ட தொடர்மாடி Condo. 1st Floor வீடு விற்பனைக்கு உண்டு. 950 Sq.feet, 3 washroom, parking, A/C, just painted, 24hrs. security guard.
ரவி - 416.418.5479
மயூரன் - 001194-11-236-5443

# JOB JOB JOB

Scarborough வில் உள்ள உணவகம் ஒன்றிற்கு அனுபவமுள்ள பெண்கள் பகுதி நேர வேலைக்கு தேவைப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**NEILSON & MCLEVIN** சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள பேக்கறி ஒன்றிற்கு நல்ல அனுபவம் உள்ள பேக்கறி வேலைக்கும், சமையல் பகுதிக்கும் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு:
416.299.5083 / 416.788.5265

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கம் 21, 23

# ROOM RENT

**HIGHGLEN & MIDDLEFIELD**
3 அறைகள் கொண்ட வீட்டில் 1 அறை வாடகைக்கு உண்டு. Avail. immediately. No smoking & No pets. வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 905.209.0545

**TAUNTON & BROCK STREET**
3 அறைகள் வாடகைக்கு உண்டு. Close to mall, TTC, shopping, Doctor Office. Old people Or Working ladies preferred. வயோதிபர்களை பராமரிக்கப்படும்.
416.990.1887/ 647.863.3993

**MIDLAND & LAWRENCE MARTINGROVE & REXDELE**
1 Room in an Aptartment for rent. Rent $ 400. Close to all facilities.
416.731.2833 / 416.615.0222

**MARKHAM & PAINTED POST DR.**
2 அறைகள் bsmt இல் தனித்தனியாக வாடகைக்கு கொடுக்கப்படும். Sep. entrance, kitchen, laundry, cable. Close to school, mall. Avail. December 15th, 09. Ladies 0r Old people preferred.
416.400.6921 / 647.427.9645

**FINCH & BRIDLETOWNE CIRCLE**
Only 1 room for rent in bsmt. Sep. entrance. Parking, cooking facilities. Meals optional. Close to mall, TTC, school. Males only. Avail. immediately.
416.502.3033 / 647.502.0151

**BRIMELY & EGLINTON**
1 Room in a bsmt for rent. Parking, cable, laundry included.No smoking. Rent $350. Avail. January 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.268.5014

**MCCOWAN & STEELES**
1 Bedroom for rent. Parking, laundry. Close to TTC, school, library. Bachelor only. No smoking & No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.6423

**MCCOWAN & EGLINTON**
ஒரு அறை condo. இல் வாடகைக்கு உண்டு. சகலவசதிகளும் கொண்டது. Close to TTC, mall, etc. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.267.2821

**MCCOWAN & EGLINTON**
2 bedroom bsmt apt. for Rent with all facilities. Sep. entrance. Parking, laundry. Avail. immediately. Close to bus, stores, school, etc.
தொடர்புகளுக்கு: 416.269.2108
416.738.9376 / 647.866.5901

**WARDEN & FINCH**
Condo. இல் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Parking. Close to bus, Tamil stores, Tamil restaurant. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.499.6437
416.844.6437 / 647.308.7829

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**FINCH & WARDEN**
One room for rent. Laundry, internet. Close to TTC, shopping mall. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.938.7510

**MARKHAM & STEELES**
1 Room for rent. Parking, laundry. Close to TTC, walmart, bank. Avail. Anytime.
416.951.2200 / 416.951.0034

**MIDDLEFIELD & ELSON**
2 Rooms for rent. Attached washroom. Close to TTC, No Frills, school, tamil stores, Doctor. Avail. immediately. தொடர்புகளுக்கு:
905.471.5340 / 905.209.7359

**MORNINGSIDE & FINCH**
3 rooms for rent. Parking, laundry, cable. Close to TTC, mall. Avail. Anytime. அறைகள் தனித் தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.351.0422

**TAPSCOTT & MCLEVIN**
1 Room for rent. Laundry. Close to mall, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.754.8947

**QUEEN STREET EAST & MAIN**
1 Room for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.347.8609

**KENNEDY & EGLINTON**
one room for rent. Sep. entrance. Laundry, cable. Non smoker preferred. Close to bus, stores, subway. Avail. immediately. வாகனம் இல்லாதவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.757.3303

**MARKHAM & KINGSTON**
1 Bedroom with spacious room for rent. Laundry, cable, internet. Close to mall, 24hrs. TTC, etc. (Call after 6.00pm)
தொடர்புகளுக்கு: 416.546.8005

**MARKHAM & LAWERENCE**
1 Room for rent. Sep. entrance, parking, laundry, cable. Share kitchen & washroom. Close to TTC, mall. Rent $325. Avail. January 01, 2010.
தொடர்புகளுக்கு: 416.836.0074

**MIDLAND & EGLINTON**
Rooms available with all facilities. Close to Yarl supermarket, scarborough University, Centennial College. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.896.2511

**MIDLAND & SHEPPARD**
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Parking, laundry. Avail. immediately. Close to bus, RT, mall, school. தொடர்புகளுக்கு:
416.266.4789 leave message
416.980.5697 8:00am - 4:00pm

**NEILSON & FINCH**
அறை உடன் வாடகைக்கு உண்டு. தனி குளியலறை. சமைக்கும் வசதி அல்லது உணவு தரலாம். வயதான பெண்கள் விரும்பத்தக்கது. குறைந்த வாடகை.
தொடர்புகளுக்கு: 416.554.4416

**MORNINGSIDE & McLEVIN**
2 அறைகள் உடன் வாடகைக்கு உண்டு. இணைந்த தனி குளியலறை. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள், வயதானவர்கள், சிறு குடும்பம் விரும்பத்தக்கது. விபரங்கட்கு:
416.732.6931/416.281.9888

**WESTON & RUTHERFORD**
Master bedroom வாடகைக்கு உண்டு. Full furnished room. Sep. washroom, parking, laundry. Avail. immediately. Close to bus, school, shopping. Couple or Single preferred.
416.266.4789 / leave message/
416.980.5697 8:00am - 4:00pm

**BRIMLEY & STEELES**
தனி வீடு ஒன்றின் மேல் தளத்தில் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. Parking, Laundry, cooking facilities. Close to bus, school, தமிழ் கடைகள். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.844.7550

**FINCH & MIDDLEFIELD**
Bsmt இல் 2 அறைகள் தனித்தனியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to mall, ஐயப்பன் கோவில். No smoking. Ladies preffered. Avail. immediately.
416.493.0590/647.286.0590

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.201.3111

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

# CARS FOR SALE PRIVATE SALE

1996 Toyota Camry -LE model, Gold colour, good condition, 203 km, new brake, extra winter tire. 1999 Dodge Caravan, one owner, fully loaded, 221 km
தொடர்புகளுக்கு: ***416-270.2677***

# திருமண சேவை

மணமகள், மணமகன் தேவையானவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் : 416.754.8947

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் 29.11.1969 ஆம் ஆண்டு பிறந்த கொழும்பில் பொறியியலாளராக பணிபுரியும் ஆணுக்கு Canada Or America வில் Sponsor செய்யக்கூடிய மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.759.3597

# மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட யாழ். பல்கலைகழகத்தில் Physical Science 4th year இல் படித்துக் கொண்டிருக்கும் 21.08.1984 ஆம் ஆண்டில் பிறந்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுகின்றோம். Sponsor செய்யக் கூடிய வரனாக இருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416.284.8757

# ஆடைகள் விற்பனைக்கு

**கிறிஸ்மஸ், புதுவருட வரவுகள்**

இந்தியாவில் இருந்து புதிய டிசைன் ஆடைகள் (தீபாவளி வரவுகள்) வந்து குவிந்துள்ளன. உயர்தரம் நியாய விலை. ஒரு முறை வந்து பார்த்தால் உண்மை புரியும். மொத்த வியாபாரமும் உண்டு.
416.400.7398/905.201.6791

**THARANEE ELECTRICAL SERVICES**
அனைத்து மின் இணைப்பு தருத்த வேலைகளுக்கும், கனடிய அரசு அங்கீகாரம் பெற்றவர் மூலமி பாதுகாப்பான முறையில் உங்கள் அனைத்து மின்சார வேலைகளையும் செய்து கொள்ள அழையுங்கள்.
Big or Small Job
Licensed Electrician Bala : 647.284.6141

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# இமிகிரேஷன் வழக்குகள் Immigration Cases

இமிகிரேஷன் வழக்குகள் வெற்றிகரமாக முடித்துக் கொள்வதற்கு அழையுங்கள்
Paul Ganesh - சட்ட ஆலோசகர்
Tel : 416.284.4772 / 647.403.8780

**பிள்ளை பராமரிப்பாளர் தேவை**
***10 TH LINE & DERRY***
3½ வயது ஆண் குழந்தையை பராமரிப்பதற்கு ஒரு பெண் தேவை. சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.
தொடர்புகளுக்கு: 905.824.8565

# TUITION

**MORNINGSIDE & NIGHTSTAR**
Need a private tutor? Call today!!!! Maths, English & Science. Fluent in both English & Tamil. Affordable rates. Grade JK - 8. Home work help provided. Guaranteed to improve academic performances in less time & at lower cost. Flexible scheduling
Contact: 416. 835.6628

# TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil. (JK – Gr. 3) Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

# தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496

# WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. AC, Airbag.
Raj - 647.269.6552

# FOR SALE

**WARDEN & EGLINTON**
Zoning place for business garage for sale.
தொடர்புகளுக்கு: 416.882.5759

# SPACE FOR RENT

**KENNEDY & FINCH**
Commercial Place for rent. Out of 6 rooms 4 rooms avail. for rent. Close to TTC, all facilities. Close by immediately.
contact: 416.288.8701

# SCHOOL TRANSPORTATION

***BRIMLEY & HUNTINGWOOD***
பகுதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு உங்கள் பிள்ளைகளைக் கூட்டிவர வேண்டுமா?
தொடர்புகளுக்கு: 416.274.9726

மேலும் பக்கங்கம் 20, 23

# தன்னை வெளிக்கொணர்வது எப்படி?

ஆனந்த விகடனில் சில பக்கங்கள் பழைய காலச்சஞ்சிகையில் வந்தவற்றுள் சிலவற்றை பிரசுரித்து நினைவுக்கு கொண்டு வருகின்றன. அத்தகைய ஒன்றில் (10.8.41) ஒரு நகைச்சுவை கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.

## ரேடியோவில் பேசுவது எப்படி?

"குண்டூசியின் மகாத்மியம்" என்பதைப் பற்றி உங்களிடம் பேசச் சொல்லிக் கேட்பார்கள் என வைத்துக் கொள்ளுங்கள். பிரசங்கம் தயாரிக்கும் போது முக்கியமாகக் கவனிக்கவேண்டியது குண்டூசியைப் பற்றியல்ல. ராஜத்துவேஷமான விஷயங்களோ தேசிய இயக்கங்கள் பற்றிய சமாச்சாரங்களோ தவறியும் பிரசங்கத்தில் நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மற்றும்படி நீங்கள் முழுப்பூசணிக்காயைப் பற்றி பேசினாலும் பாதகமில்லை. ஆனால் 'குண்டூசி' 'மகாத்மியம்' என்ற இரண்டு வார்த்தைகளும் பிரசங்கத்தில் எங்கேயாவது பிரஸ்தாபித்து வையுங்கள். இல்லாவிட்டால் அவ்வளவு நன்றாக இருக்காதல்லவா?

உலகத்தில் முன்னுக்குவர வழி தெரிந்தவர்கள் இந்தப் பிரசங்கத்தை ஒருவிதத்தில் தங்களுக்கு பயன்படுத்தி கொள்வார்கள். "நான் பிரஸிடென்ஸிக் கல்லூரியில் எம்.ஏ படித்துக் கொண்டிருந்த போது ஒரு ருசிகரமான விஷயம் நடந்தது. நான் எப்பொழுதும் முதல் வகுப்பில் தேறி வந்ததையிட்டு ஒரு பையனுக்கு என் மேல் பொறாமை. அதனால் அவன் ஒருநாள் நான் உட்காரும் இடத்தில் ஒரு குண்டூசியைச் சொருகி இருந்தான் போலிருக்கின்றது. நான் தெரியாமல் அதன் மீது போய் உட்கார்ந்து விட்டேன். ......." என்பார். அதற்குமேல் என்ன நடந்தது என்பது நமக்கும் ருசிகரமாக தோன்றாது. ஆனால் அவர் ஏம்.ஏ. படித்ததையும் முதல் வகுப்பில் தேறியதையும் நாஸுக்காக சொல்லி விடுவார். சிலர் தங்கள் மனைவியின் பெயரை நடுநடுவில் சொல்லி அவளைத் திருப்தி செய்வார்கள். இப்படி நீங்களும் செய்யலாம்.

அறையை விட்டு வெளியே வரும் போது மயக்கம் போட்டு விழுந்து விடத்தக்கதான காரியம் நடைபெறும். அதாவது எது பேசினாலும் அதற்கான சன்மானத் தொகை உடனே கிடைத்து விடும். 'மைக்கில் பேச்சு கையில் செக்கு' என்பது ரேடியோகாரர்களின் பழமொழி.

நன்றி - ஆனந்தவிகடன். 4.11.2009

*இன்றுவரை சகல ஊடகங்களிலும் இதே நிலை காணப்படுகின்றது.*

# "ரசனையான தயாரிப்பாளர்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

தனஞ்செயன் சார்கிட்ட கதையை சொன்னேன். அவருக்கு ரொம்பப் பிடிச்சிப் போச்சு. 'அவள் பெயர் தமிழரசி'யை தயாரிக்க ஒத்துக்கிட்டாங்க.

கேள்வி: என்ன கதை?



மீராகதிரவன்: இது அடிப்படையில ஒரு காதல் கதை. சினிமாவுக்கான எந்த வரையறையும் இல்லாத, அதே சமயம் ரசிக்கும்படியான ஒரு கதை. எல்லாருக்குமே இந்தப்படம் ஏதாவது ஒரு விதத்துல பாதிப்பை ஏற்படுத்தும். இதுல ஜெய் கதாநாயகன். நந்தகின்னு ஒரு புது கதாநாயகி. முக்கியமான பாத்திரங்கள்ல ஓவியர் வீரசந்தனமும், எழுத்தாளரும் விமர்சகருமான தியடோர் பாஸ்கரனும் நடிச்சிருக்காங்க. ஓவியர் வீரசந்தனத்துக்கு இந்தப்படம் அவர் வாழ்நாள்லயே, அவருக்கு கொடுத்த மிகப்பெரிய கௌரவம்னு நினைக்கிறேன்.

ஒரு நாயகன். அவனுக்கு தாய்ப்பாசம், அன்பு, பொறுப்பு எல்லாத்தையும் குடுத்தது ஒரு பொண்ணு. ஒரு கட்டத்துல அவளை இழக்கவேண்டிய சூழல் ஆயிடுது. அதுக்கப்புறம், அவளையும் அவள் சார்ந்த இடங்களையும் தேடிப் போறான் நாயகன். கடைசியில அவ கிடைச்சாளா இல்லையாங்கறதுதான் கதை.

கேள்வி: இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி ரொம்ப நவீனமா இசை அமைக்கிறவர். அவர்கிட்ட நீங்க எதிர்பார்த்த இசை கிடைச்சுதா?

மீராகதிரவன்: எனக்கு நிறைய வரையறை இருக்கு. ஒரு ரசனையான தயாரிப்பாளர் கிடைக்கலைன்னா, திரைக்கதைங்கிறது ஒண்ணும் இல்ல, வெறும் அச்சடித்த பண்ணின, அவ்வளவுதான். மோசர் பியர் கம்பெனில நாலஞ்சு இசையமைப்பாளர் பேரைச் சொன்னாங்க. அதுல நான் விஜய் ஆண்டனியை தேர்வு செஞ்சேன். அவர் அடிப்படையில ரொம்ப இலகுவான மனிதர். ஈகோ இல்லாதவர். எனக்கு அவர்கிட்ட வேலை வாங்கறது ரொம்ப சுலபமா இருந்துச்சு.

கேள்வி: உங்க படத்துல மொத்தம் ஒன்பது பாடல்கள் இருக்கு. பாடல்களைத் திணிப்பதில் உங்களுக்கு உடன்பாடு உண்டா? இயல்பான கதையில் பாடல்கள் தேவையா?

மீராகதிரவன்: சினிமாங்கறது ஒரு ஆளுக்கு மட்டும் சொல்ற கதை இல்ல. இது புத்தகமும் இல்ல, சுதந்தரமா கதை சொல்றதுக்கு. ஒரு அரங்கத்துக்குள்ள மூன்னூறு, நானூறு பேரை உக்கார வச்சு, அவங்க கவனம் சிதறாம, தொடர்ச்சியா கதை சொல்ல வேண்டியிருக்கு. சினிமா ஃபார்முலாவுக்கு எல்லா மனசுமே பழக்கப்பட்டுப் போச்சு. அதை அவ்வளவு சுலபமா மாத்திட முடியாது. என்னோட படத்துல பாடல்கள் எல்லாமே கதையோட இயல்பா அமைஞ்சிருக்கு. கதாநாயகனும், நாயகியும் பாட்டுப்பாட, பின்னாடி 100 ஜூனியர் ஆர்ட்டிஸ்ட் ஆடறதெல்லாம் இந்தப் படத்துல இல்ல.

நம்புங்கள், நம்புவோம்!

விற்பனையாகின்றன!
கனி விமலநாதனின்
மூன்று நாவல்கள்

❶ வேற்றுக்கிரக மனிதர்கள்



யார் இந்த வேற்றுக்கிரக மனிதர்கள்?
அவர்களின் பின்னணி என்ன?
வேற்றுக்கிரக மனிதர்களை சந்தித்தவர்கள் உண்டா?
வேற்றுக்கிரக மனிதர்களுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்பு?

❷ பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள்

எமது பிரபஞ்சம் எப்போது தோன்றியது?
தோன்றியபோது எப்படி இருந்தது?
எவ்விதம் இவ்வளவு பெரிதாக ஆகியது?
பிரபஞ்சத்தின் முதல் நட்சத்திரம் எவ்வாறு தோன்றியது?


❸ இனம்தெரியாத பறக்கும் தட்டுகள்

பறக்கும் தட்டுகள் என்பது உண்மைதானா?
அவை எங்கிருந்து வருகின்றன?
பறக்கும் தட்டுகளை கண்டவர்கள் உண்டா?

பிரபஞ்ச இரகசியங்களை தெளிவு படுத்தும் நூல்கள்

கிடைக்குமிடம்: முருகன் புத்தகசாலை
*1241 Ellesmerer Road - Midland & Ellesmere*
*GTA Square - 5215 Finch Ave. E., Middlefield & Finch*

"ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்"




எனும் அரிய நூல்
மனதை கட்டுப்படுத்தி நல்வழியில் செலுத்த, ஆளுமையை வளர்க்க, மனதில் நின்மதியை பெற வாசிக்க வேண்டிய அருமையான நூல்

கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்
தொலைபேசி இலக்கம்: 416.282.8059
*GTA Square - 5215 Finch Ave. E., #201*
*Middlefield & Finch*

# STORE FOR RENT

**SHEPPARD & MARKHAM**

5800 Sheppard Ave, Unit 10

600 Square Feet கடை ஒன்று வாடகைக்கு உள்ளது. குமார் வீடியோ, சிநேகா நகைக்கடைக்கு அருகாமையில் உள்ளது.

மேலதிக விவரங்களுக்கு: 416.291.8050 / 647.830.2773

# CONDO. FOR SALE

**FINCH & MIDDLEFIELD**

Two + one bedroom (Den can be used as third bedroom) for rent. Underground parking, largest locker. Close to GTA square, TTC, HWY 401, Etc.

416.662.1529 / 416.332.9374

# வீடு விற்பனைக்கு

நல்லூர், யாழ்ப்பாணத்தில் 4.5 பரப்புக்கொண்ட தென்னைமரங்கள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. நல்லூர் கோயிலிற்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இந்நிலம் பழைய கல்வித் திணைக்களத்திற்கு (Old Education Department) முன்பாக உள்ளது.

மேலதிக விவரங்களுக்கு: ***416.315.9397***

# Commercial Basement For Rent

**MARKHAM & ELLESMERE**

Smart Baby's Diaper Factory Outlet இன் நில அறை வாடகைக்கு உண்டு. Very Busy area.

தொடர்புகளுக்கு: ***416.499.8517 / 647.321.7575***


மேலும் பக்கங்கம் 20, 21

*விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு*

***www.vlambaram.com***

## வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## யாழ்ப்பாணம் கொக்குவில் பற்றிய

# நூல் வெளியீட்டு விழா

கொக்குவில் கிராமத்தினதும், அங்குள்ள ஆன்மீகத் தலங்கள், கல்விக்கூடங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றினதும் பூர்வீக வரலாறுகளை ஆவணப் படுத்தும் ஒரு பதிவேடாக இந்நூல் வெளிவருகின்றது.

நூற்தலைப்பு: கொக்குவில் நம் ஊர்

ஆக்கம்: த. த. செ. நடராசா
நா. பாலகுமார்

தினம் - நேரம்: 27-12-2009 ஞாயிற்றுக்கிழமை,
பிற்பகல் 5:30 மணி

இடம்: கனடா கந்தசுவாமி கோவில் மண்டபம்
733 Birchmount Road, Scarborough, Ontario

அன்பர்கள் அனைவரையும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

விழா ஏற்பாட்டாளர்கள்

தொடர்புகட்கு: ***416-321-5513 / 416-321-5522 / 416-621-6308***

## எட்டாவது சர்வதேச தமிழ் குறுந்திரைப்பட விழா படைப்புகளுக்கானகோரல்

சுயாதீன கலை திரைப்பட மையத்தால், கனடாவின் ரொரன்ரோ நகரில் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புக்கள் ஆங்கில துணைத் தலைப்புக்களை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

தாயக நிலைமையை வெளிப்படுத்தும் படங்கள் வரவேற்கப்படுகின்றன.

விழாவில் சிறந்த திரைப்படைப்புக்களுக்கான 3 பரிசுகள் வழங்கப்படும். அவையாவன:
- முதற் பரிசு -- 500 கனடிய டொலர்
- இரண்டாம் பரிசு -- 300 கனடிய டொலர்
- மூன்றாம் பரிசு -- 200 கனடிய டொலர்

படைப்புக்கள் பின்வரும் விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும்:

- படைப்புக்கள் தை 15, 2010க்கு (Jan. 10, 2010) முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்பக்கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

Tam Sivathasan
Exceutive Director - IAFS
1345 Morningside Ave., Unit # 8, Toronto, ON. Canada, M1B 5K3

மேலதிக தொடர்புகளுக்கு:
1-416-450-6833, 1-416-804-3443, rathan@rogers.com,
iafs@rogers.com, www.iafstamil.com

*Independent Art Film Society of Toronto*

## மாற்று சினிமாவுக்குகான தேடல்

## உண்மையை நோக்கி ஒரு பயணம்

# 1084 இன் அம்மா

Haazar chaurasi ki Maa

இயக்கம்: கோவிந் நிகாலினி

வங்காள திரைப்படம்
திரையிடலும் கலந்துரையாடலும்

இடம்: ஸ்காபரோ சிவிக் மண்டபம்
நேரம்: December 20, 2009 மாலை 2 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தமிழர் வகைதுறை வள நிலையம் (தேடகம்)

Thedakam@gmail.com
647-891-8597 or 416-450-6833

# எந்தக்கணத்திலும் மனம் நாடுவது!
# எந்தப்பொழுதிலும் மனங்கள் விரும்புவது!




தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும்
சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது
**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

ASTROLOGY PALMISTRY
PANDITH RAMU SWAMY

இந்தியாவிலிருந்து சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து போன்ற பலநாடுகளிற்கு சென்று கனடா வந்திருக்கும் பிரபல பரம்பரை சோதிட மலையா சாஸ்திரி அவர்கள் நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை பற்றி துல்லியமாக கூறுகிறார்.



I Will Read Your Past, Present, Future, Face Reading, Hand Reading, Husband & Wife Problems, Love Problems, Family & Education Problems, and Etc. Dustagraha, Shanthi, Dosha Nivarana, Astabandana, Devi Pooja Pariharam. I Recover People 100% From Black Magic.







துர்க்கா பரமேஸ்வரி ஜோதிடம்

* கைரேகை பலன்
* திருமணபொருத்தம்
* குறிப்பு
* முகநாடி
* பிள்ளைகளின் ஜனா ஜாதககுறிப்புக்கள்
* கண் திருஷ்டி
* அதிஸ்ட இலக்கம்
* பரிகாரங்கள்
* மனஸ்தாபங்கள்
* நீதி மன்ற விவகாரங்கள்
* மணப் பொருத்தங்கள்
* பிள்ளைகளின் படிப்பு
* மந்திரம்
* சூனியம்
* செய்வினை
* அதிஸ்ரக்கல்
* கணவன் மனைவி ஒற்றுமை
* காதல் கல்யாணம்
* தொழில் வியாபார லட்சுமி விருத்தி
* வீட்டு வாஸ்த்து
* குடும்ப பிரச்சனை
* குழந்தைபாக்கியம்

Call: 416-827-1643/647-988-1643
10:00 AM – 8:30 PM GTA SQUARE MALL
5215 Finch Ave.East Unit#106, Scarborough, On, M1S 0C2
(Middlefield & Finch) South East Corner

ஒரு முறை விஜயம் செய்யுங்கள் உண்மை புரியும்
நம்பிக்கையே கடவுள்

BUROX
Design - Print - Marketing
Tel: 416-438-3133


# உள்ளம் கவரும் உருவம்



கடவுளர்களிலே அதிகமான கோயில்களில் எழுந்தருளி அருள் பாலிப்பவர் விநாயகர். உயிர்களைக் காத்தருளும் பெரிய கடவுள் இவரே. முதற்பூசை பெறுபவர் பிள்ளையார். விக்கினங்களை விலக்கி வேண்டியதை அருள்பவர். ஆனதால் எல்லோரும் பிள்ளையாரை பிரியமுடன் வணங்குவர். இந்துக்களின் 'சுப்பர் ஸ்டார்' பிள்ளையார். அவர் மிகவும் எளிமையான கடவுள். ஆலமரத்தடியிலும் ஆற்றங்கரையிலும், முச்சந்திகளிலும், ஆடம்பர பங்களா வாசலிலும், தெருவுக்குத் தெருவும் அருள் பாலிக்கும் ஆண்டவராக அவர் விளங்குகின்றார். உயிர்கள் தேடுவதும் நாடுவதும் இன்பமேயாகும். அதனை பிள்ளையார் பக்தர்களுக்கு தப்பாமல் தருவதாக மறைகள் கூறுகின்றன. மேலும் கருங்கல், சலவைக்கல், மஞ்சள், மண், சந்தனக்கட்டை, செம்பு முதலிய பொருள்களாலும் முத்து, பவளம், யானைத்தந்தம், வெள்ளெருக்கு வேர், அத்திமரம், பசும் வெண்ணெய், அரைத்த சந்தனம், வெணணீறு, சர்க்கரை, பசுஞ்சாணி ஆகியவற்றாலும் ஆனைமுகனின் திருவுருவத்தை அமைத்து வழிபடலாம். 'பிடிச்சுவச்ச பிள்ளையார்' என்ற வழக்குப்படி எந்த ஒரு பொருளானாலும் பிள்ளையாரை நினைத்துக் கொண்டு தொடங்கினால் போதும், அதில் விநாயகரின் அருளாற்றல் குடிகொண்டு விடும்.

சில கோயில்களில் பிள்ளையார் நின்ற நிலையில் உள்ளார். சில கோயில்களில் உட்கார்ந்த நிலையில் உள்ளார். சிலவற்றில் நடனமாடிக்கொண்டிருக்கின்றார். சில கோயில்களிலோ லட்சுமியை தனது மடியில் இருத்திக் கொண்டு லட்சுமி கணபதியாகத் திகழ்கின்றார். இதற்குக் காரணம் என்னவெனில் கடவுளை வழிபடுபவர்களுடைய உள்ள உணர்ச்சிகளுக்கு ஏற்ப கடவுள் திருவுருவங்கள் வடிவமைக்கப்படுவதேயாகும்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திருவுருவம் ஈடுபாட்டைத் தருகின்றது. இவ்வித ஈடுபாட்டுடன் அந்த உருவத்தில் ஒன்றும்போது தியானநிலை கூடி நம் உள்ளம் விரிவடைகின்றது. எந்த திருவுருவத்தில் ஒருவருக்கு ஈடுபாடும், ஒன்றிப்போதலும், தியான நிலையும் கைகூடுகின்றதோ அந்தத்திருவுருவமே அவரது உயிர்நிலையையும் உயர்வடையச் செய்கின்றது. இன்பம் தருகின்றது. முப்பத்திரண்டு கணபதி வடிவங்களை வழிபாட்டிற்குரியதாக நம் முன்னோர்கள் வடிவமைத்துள்ளனர். பிள்ளையாரின் உருவின் கொள்ளையழகு நம் உள்ளத்தை சிலிர்க்கச் செய்வதுடன் அருள் வெள்ளத்துல் ஆழ்த்துவதாகும்.

பிள்ளையாரின் பெரிய காதுகள் கற்றலின் கேட்டல் நன்று என்பதை உணர்த்துவதாகும். 'அதிகம் கேள் என்கின்றது. பெரிய தலையோ 'பிரமாண்டமாக யோசி' என அறிவுறுத்துகின்றது. கையில் வைத்திருக்கும் கோடரியோ பந்த பாசங்களை அறுத்தெறி என்கின்றது. சின்னக் கண்களோ உற்றுப்பார் என்று சொல்லாமல் சொல்கின்றது. பாசக் கயிறோ அகிலத்தை அன்பால் கட்டு என்று வழிகாட்டுகின்றது. விரிந்த கைகளோ கர்ணனைப் போல் அள்ளி வழங்கு என்று அன்பாய் சொல்கின்றது. பெரிய வயிறோ நல்லதையும் அல்லாதையும் ஜீரணி என்று புத்தி புகட்டுகின்றது. ஒற்றைத் தந்தமோ நல்லதை மட்டும் வைத்துக் கொள் என்கின்றது. தும்பிக்கையோ சமயங்களில் வளைந்து கொடு என்று சூசமாக சொல்கின்றது. மோதகமோ உள்ளே இன்பம் என்பதை உணர்த்தி நிற்கின்றது. எலிவாகனம் ஆணவ மலத்தைக்குறிப்பது. மிகச்சிறிய எலியை வாகனமாக தனது கால் கீழ் கொண்டிருத்தல் அறியாமையையும் செருக்கையும் அடக்கி, ஆட்கொள்பவர் என்பதனை புலப்படுத்தும். இந்துமதத்தினர் மட்டுமன்றி எல்லாமதத்தினரும் ஏற்றிப்போற்றும் தெய்வம் ஆனைமுகக்கடவுள் எனவே ஆனைமுகமும் பானை வயிறுமுடைய பரம்பொருளை நினைவார் வல்வினை போகும்.

எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி
மனத்தின் சலனமில்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் போது நின்மவுன
நிலைவந்திட நீ செயல் வேண்டும்
கனக்குஞ் செல்வம் நூறுவயது
இவையும் தர நீ கடவாயே! _ பாரதியார்.



நா. க. சிவராமலிங்கம்

# திரை விமர்சனம் - யோகி

தமிழ் சினிமாவில் இயக்குநர்கள் அணியில் இருந்து, இன்னொரு கதாநாயகனாக அவதாரம் எடுத்திருக்கிறார் அமீர். அதனாலேயே 'யோகி'க்கு ஏகப்பட்ட எதிர்பார்ப்புகள். இரண்டு வருடங்களாக எடுத்துக்கொண்டே இருந்ததால் எதிர்பார்ப்பு இன்னும் எகிரத்தான் செய்தது. இப்போது படத்தைப் பார்த்தால் ஒரு ஆப்பிரிக்கப் படத்தின் அப்பட்டமான தழுவல். ஒரு காப்பியைத்தான் இரண்டு வருடங்களாக செதுக்கிக்கொண்டே இருந்திருக்கிறார்கள். எந்தப் படத்தின் காப்பி என்பதைப் பார்க்கும் முன், முதலில் யோகியைப் பார்த்துவிடுவோம்.



- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -

ஒரு குழந்தையால் மனம் திருந்தி வாழ முயற்சிக்கும் குப்பத்து ரவுடியின் கதைதான் யோகி. கோவில் வாசலில் பிச்சை எடுக்கும் தேவராஜின் மகன் யோகி. பள்ளியில் படிக்க விரும்பும் அவனை அடித்து பிச்சை எடுக்க வைக்கிறார், தேவராஜ். அவரது சித்ரவதையால் யோகியின் தாய், தங்கை இருவரும் இறக்கின்றனர். ஆத்திரமாகும் யோகி தந்தையை கொன்றுவிட்டு சென்னை வந்து, சென்னையில் 'குப்பம்' என்று சொல்லப்படும் குடிசைப் பகுதியில் தங்குகிறான். பெரியவனானதும் மூன்று பேருடன் கூட்டு சேர்ந்து கொள்ளை, கொலை செய்கிறான். இவர்கள் சேர்ந்து செய்யும் கொலையும் கொள்ளையும் காவல்துறையை நடுங்க வைக்கின்றன. இதில் காவல்துறை அதிகாரி ஒருவரிடம் கொள்ளையடிப்பதுடன் அவரின் துப்பாக்கியையே களவாடுகிறான் யோகி. ஒருநாள் ஓட்டலில் கொள்ளையடிக்கும்போது போலீஸ் விரட்டுகிறது. அப்போது ரோட்டோரம் நின்ற காரை எடுத்துக்கொண்டு தப்புகிறான். அந்த காருக்குள் அழகான பெண் குழந்தை இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைகிறான். அதிர்ந்து போனாலும் அந்தக் குழந்தையை அரவணைத்துக் கொள்கிறான். பிறகு அந்தக் குழந்தையைத் தானே தன் குடிசையில் வைத்து வளர்க்கிறான். சிறு வயதில் இறந்த தங்கையை அக்குழந்தை வடிவில் பார்த்து மனம் மாறுகிறான். குழந்தை மேல்பாசம் காட்டி ரவுடி தொழிலை விடுகிறான்.

இன்னொரு பக்கம், பெற்றோரும் போலீசும் குழந்தையை தேடுகின்றனர். குழந்தையைப் பறிகொடுத்த தாய் சுவாதி, படுத்த படுக்கையாக இருக்கிறார். சுவாதியின் இரண்டாம் கணவர் வின்சென்ட், இன்னொருவன் மூலம் குழந்தை பெற்ற கோடீஸ்வர பெண்ணான சுவாதியை பணத்துக்காக திருமணம் செய்து, பிறகு அக்குழந்தையை கொல்ல கூலிப்படைகளை ஏவுகிறார். அக்குழந்தையைத் தேடிக் கொல்ல, சென்னையில் உள்ள ரவுடிகளிடம் பணம் கொடுக்கிறார். அந்தக் கும்பல் குழந்தையைத் தேடுகிறது. இந்தக் 'கொலை ப்ராஜெக்ட்' யோகியின் நண்பர்களுக்கும் வருகிறது. அந்தக் கும்பலிடம் இருந்து யோகி குழந்தையை எப்படிக் காப்பாற்றினான் என்பதுதான் மிச்சக் கதை.

யோகியாக அமீர் நடித்திருக்கிறார். உடம்பை முறுக்கிக்கொண்டு ஒரே முகபாவத்தில் திரிந்து கொண்டிருப்பதுதான் யோகி பாத்திரம் என இயக்குநர் சொல்லிவிட்டார் போலும். அமீர் நடக்கிறார், ஜீன்ஸ் போட்டு நடக்கிறார், சார்ட்ஸ் போட்டு நடக்கிறார், வேகமாக நடக்கிறார். நடந்துகொண்டே இருக்கிறார். பருத்தி வீரனில் கார்த்தியிடம் அமீர் வாங்கிய நடிப்பைக்கூட இந்தப் படத்துக்கு அமீர் கொடுக்கவில்லை. அமீர், திரைக்குப் பின்னால் மட்டும் இருந்துகொள்வது அவருக்கும் நல்லது தமிழ் சினிமா ரசிகர்களுக்கும் நல்லது.

மற்ற நட்சத்திரங்களில் ஒரே ஆறுதல் மதுமிதா. புருஷனை பிரிந்து, ஆந்திரா காக்கிநாடாவில் இருந்து கைக்குழந்தையுடன் சென்னை வந்து பொம்மை தயாரித்து விற்கும் பெண்ணாக வருகிறார். அமீரை காதலிக்கிறார். பெண்மையும் தாய்மையும் மதுமிதாவிடம் அற்புதமாக வெளிப்படுகிறது. பாத்திரத்தில் கச்சிதமாக பொருந்தியிருக்கிறார், மதுமிதா. குழந்தையை முதுகில் சுமந்துவரும் போது அச்சு அசலாக ஆந்திரா வாடை. அவன் இனி தப்பு செய்ய மாட்டாங்கையா என்று அமீருக்காக போலீஸிடம் கெஞ்சி அடி வாங்கும்போது பரிதாபப்பட வைக்கிறார்.

பொன்வண்ணனை இதே மாதிரி இன்னும் எத்தனைப் படங்களில்தான் பார்ப்பது. மனிதன், கடுப்பேற்றுகிறார். வில்லனாக பாடலாசிரியர் சினேகன். தோளில் புரளும் முடியும், துப்பாக்கி பிடித்த கையுமாக வருகிறார். கஞ்சா கருப்பும் இருக்கிறார். ஆனால், அவரைவிட தீனிப் பண்டார தோஸ்த் சிரிக்க வைக்கிறார்.

இசை: யுவன் சங்கர் ராஜா. பாடல்கள் ஒன்றும் மனதில் ஒட்டவில்லை. பின்னணி இசை பல இடங்களில் '7ஜி ரெயின்போ காலனி', இளையராஜாவின் பழைய படங்களின் பாதிப்பு அதிகம் தெரிகிறது. யுவன் கொஞ்சம் மெனக்கெட்டிருக்கலாம்.

இயக்கம்: சுப்ரமணிய சிவா. ஒரு குழந்தை மூலம் ரவுடியைத் திருத்துகிறேன் என்றுவிட்டு, குழந்தையின் மீது கட்டெறும்புகளை விடுவது, பாம்பை விடுவது எனப் பதைபதைக்க வைத்துள்ளார். பச்சிளம் குழந்தையை கட்டெறும்புகள் மொய்ப்பது, பரிதாபத்துக்குப் பதில் இயக்குனர் மீது கோபத்தையே வரவழைக்கிறது. பேப்பர் பையில் குழந்தையை கையாண்டிருக்கும் விதம் அப்பட்டமான குழந்தை வதை. அமீரை அவரது அப்பா கேரக்டர் கொடுமை படுத்துவதைக் காட்டிலும், சுவாதியின் குழந்தையை கொண்டு வந்து கொஞ்சுகிறேன் பேர்வழி என கொடுமையோ கொடுமை படுத்துகிறார் அமீர். சினிமாக்காரர்களுக்காக சிறுவர் வதை தடுப்பு சட்டம் என ஏதாவது கொண்டு வந்தால்தான் சரிப்படுவார்கள் போலிருக்கிறது.


ஒளிப்பதிவும் ஒலிப்பதிவும் மட்டும்தான் படத்தின் மிகப்பெரிய பலம். குழந்தை அழும் குரலிலிருந்து கத்தி கீசிடும் ஒலி வரை துல்லியமான ஒலி ஒளி. ஒளிப்பதிவாளர்கள் ஆர்.பி.குருதேவ், கே.தேவராஜ் ஆகியோர், சென்னையின் அழுக்கையும் இருட்டையும் துல்லியமாகப் படம் பிடித்துள்ளனர்.

இனி ஒரிஜினல்...

டூட்சி என்ற ஆப்பிரிக்க படத்தைத்தான் நடிகர்களையும் இடத்தையும் மாற்றி யோகியாக தமிழுக்குத் தந்திருக்கிறார்கள். தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு சேரியில் வளரும் அநாதை டீன்ஏஜர். சிறுவயதிலேயே பெற்றோரால் கைவிடப்பட்டு, முட்டி மோதி இந்தக் குப்பத்திற்கு வந்து சேர்ந்தவன். அவனும் அவனுடைய கூட்டாளிகளும் வழக்கமாய் இம்மாதிரியான சிறுவர்கள் ஈடுபடும் கொள்ளையில் ஈடுபட்டு, பணத்தை திருடி குடியும் பெண்களுமாய் அலைகிறார்கள். ஒரு நாள் ஒரு கொள்ளையை நடத்திவிட்டு ஓடி வரும்போது ஒரு காரை திருட எத்தனிக்க, அதை தடுக்கும் பெண்ணை சுட்டுவிட்டு, காரை திருடிக் கொண்டுவருகிறான். கொஞ்சம் தூரம் ஓட்டி வந்த பிறகு பின்னிருக்கையில் இருந்து சத்தம் வர, பார்த்தால் ஒரு கைக்குழந்தை. குழந்தையை அங்கேயே விட்டுவிட்டு போக மனமில்லாமல் குழந்தையை ஒரு பேப்பர் பேக்கில் போட்டுக்கொண்டு தன் வீட்டில் வைத்து பராமரிக்கிறான். ஒரு கட்டத்தில் குழந்தையால் அவனுடைய வாழ்கையில் மாற்றம் ஏற்படுகிறது. அந்த குழந்தையை அதன் தாயிடமே கொண்டு போய்விட போகும் போது அவனை போலீஸ் கொன்று விடுகிறது.

டூட்சியில் வரும் அத்தனைக் காட்சிகளும் யோகியில் படத்தில் வரிசைக் கிரமமாய் அச்சு அசலாய் இருக்கிறது. ரவுடி, குழந்தை கடத்தல், குழந்தையால் ரவுடி மனம் மாறுதல், குழந்தைக்கு பால் கொடுக்கும் பெண், குழந்தையின் வீட்டிற்கே சென்று திருடுதல், அங்கு நடக்கும் சண்டையில் நண்பனையே போட்டுத் தள்ளுவது, குழந்தையைப் பேப்பர் பேக்கில் வைப்பது, குழந்தையை ஒப்படைக்க வரும் இடத்தில் சுட்டுக் கொல்லப்படுவது என படத்தின் 90 சதவீத காட்சிகள் அப்படியே இருக்கிறது. இதில், கதை: சுப்பிரமணிய சிவா, திரைக்கதை: அமீர் எனக் கூச்சம் இல்லாமல் டைட்டில் வேறு போட்டுக்கொள்கிறார்கள். வசனும் அமீர். இவர் என்ன வசனம் எழுதினார் என்று தெரியவில்லை. பல இடங்களில் வசனங்கள் கூட ஒரிஜினலின் பிரதிபலிப்பு. ஒரு நல்ல படத்தைக்கூட மோசமாக்கி 'ரீமேக்' செய்யமுடியும் என நிரூபித்திருக்கிறார்கள் தமிழ் சினிமாக்காரர்கள் இல்லையா!

ரஜினிகாந்த், கமலஹாசன், விஜய், அஜித் போன்ற முன்னணி கதாநாயகர்களின் படங்கள் தவிர்த்து மிகச்சில படங்களையே வெளியான உடனே பார்த்துவிடவேண்டும் என்னும் வரிசையில் நாம் வைத்திருப்போம். 'ராம்', 'பருத்திவீரன்' காரணமாக அமீர் நடித்துள்ளதால் இந்தப் படத்தையும் தமிழ் சினிமா ரசிகர்கள் அந்த வரிசையில் வைத்து எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். வடிவேல் பாணியில் 'அந்தளவுக்கு நாங்க ஒர்த் இல்லை சார்' என்று அமீர் அண்ட் கூட்டணி சொல்லிவிட்டது. அதையும் மீறி நீங்கள் படம் பார்க்கச் சென்று, அமீர் மீதும் சுப்பிரமணிய சிவா மீதும் வருத்தப்பட்டால், அதற்கு அவர்கள் பொறுப்பில்லை.



SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL

# 10TH ANNIVERSARY SPECIAL!



# BREAD MASTER BAKERY

XMAS SPECIAL

## SPECIAL STARTING FROM DECEMBER 01, 2009

**TAKE - OUT AND CATERING FOR ANY OCCASIONS**

SPECIAL
SAMOSA
Vegi.
5 FOR $1.00
Mutton, Chicken Or Fish 4 FOR 1.00

SPECIAL
RICE & CURRY Vegi.
(வடை, பாயசம், அப்பளம், மிளகாய், ரசம்) 6 கறியுடன்
$4.99 (Tuesday & Friday)

SPECIAL
கொத்து ரொட்டி
Kotthu Rotti
(Chicken, Mutton, Beef)
$3.99

SPECIAL
25 இடியப்பம்
25 String Hopper
(with Potato Curry)
சம்பல், சொதி, கிழங்கு - குளம்பு $2.99

SPECIAL
பிட்டு / Pittu
(with Potato Curry)
கிழங்கு குளம்பு
$2.99


SPECIAL
இடியப்ப மிக்ஸ்
String Hopper Mix
$1.99
பிட்டு மிக்ஸ்
Pittu Mix $2.99

SPECIAL
நூடில்ஸ்
NOODLES
(Chicken & Shrimp)
with Coke
$2.49
Special for Students

SPECIAL
ரொட்டி
(Plain) 0.60¢
வீச்சு ரொட்டி
0.75¢

SPECIAL
Lunch Special for Students
2 Rolls
+ Can Juice
$1.99

10வது வருடத்தில்
கால் பதிக்கும் முகமாக
வாடிக்கையாளர்களுக்கு
**BREAD MASTER**
தரும் சிறப்பு விலை



FRESH FROM THE OVEN

திருமணம்,
பூப்புனித நீராட்டு விழா,
பிறந்தநாள் வைபவம்,
ஒன்றுகூடல்கள், அந்தியேட்டிக்
கிரியைகள் மற்றும் எந்த
வைபவங்களானாலும்
சுத்தமான முறையில்
எத்தனை பேர்களுக்கும்
கேற்றறிங் செய்து தரப்படும்

SPECIAL
CROISSANT
3 FOR
$1.00



OPEN 7 DAYS A WEEK! 7.00 A.M - 9.00 P.M

MANY MORE ITEMS FOR SPECIAL

## 31 TAPSCOTT ROAD, UNIT #B3

LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH

## TEL: (416) 299-5083




SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL SPECIAL

SELVA GRAPHICS 416-724-8315

# கருந்துளைகள்

கருந்துளைகளுக்கான விளக்கத்தில் அயன்ஸ்ரைனின் பொதுச் சார்புத் தத்துவம் பெரும் பங்கு வகிக்கின்றது. மிகவும் சிக்கலான கணிதச் சமன்பாடுகளினதும், உயர்ந்த சிந்தனைப் பரிசோதனைகளின் முடிவாகவும் பெற்றுக் கொண்ட இந்தத் தத்துவத்தின் முடிவினை எளிய வடிவத்தில் பார்க்கப் போகின்றோம். ஊண்மையில் பொதுச் சார்புத் தத்துவமானது வான் பொருட்களின் ஈர்ப்பிற்கான விளக்கமேயாகும் பொதுச் சார்புத் தத்துவம் (விளக்கம்)



## பேரண்டம் - 54

பொதுவாகவே நாம் வாழும் பேரண்டம் முப்பரிமாண வெளியினால் ஆனது என நாம் நம்புகின்றோம். நியூட்டனும் கூட அவ்வாறே நம்பியிருந்தார். அதன்படி, பேரண்டம் முழுவதுமே புள்ளிகளினால் நிரம்பியுள்ளது என்பது விளக்கம். இப்புள்ளிகளிலேயே பொருட்கள் எல்லாம் இருக்கின்றன, இயங்குகின்றன என்பதும் எமது தெளிவு. அத்துடன் அப்புள்ளிகள் எல்லாம் நிலையானவை என்பதும் எமது பொதுவான நம்பிக்கை. அதனால் நமது பேரண்டமும் ஒரு நிலையான வடிவினதாக இருக்கவேண்டும் என்பது எங்கள் எல்லோரதும் பொதுவான அபிப்பிராயம். நேரம் என்பது இப்புள்ளிகளுடன் சம்மந்தப்பபடாத ஒன்று, அது தனியனாகவே, ஒன்றுடனும் இணையாமல், ஒன்றினையும் சாராமல் இருக்கின்றது என்பதும் எமது நாளாந்த நடவடிக்கைகளின் ஊடாக நாம் பெற்றுள்ள அனுபவம். இப்படித்தான் நியூட்டனும் கருதினார். ஆனால் அயன்ஸ்ரைன் பேரண்டம் பற்றி வேறு விதமாக விளக்கம் தந்தார்.

பேரண்டமானது வெளி-நேரம் என்ற கணிபத்தினால் ஆனது என்கின்றார். அதன்படி, பேரண்டமானது எண்ணற்ற நிகழ்வுகளின் சேர்க்கையினால் ஆனது என்கின்றார். பொதுப்படையாகச் சொல்வதென்றால் இந்தச் சித்தாந்தமானது ஒன்றும் அவ்வளவு சிக்கலானது அல்ல. முப்பரிமாணத்தின் புள்ளியுடன் சேர்த்து நேரத்தையும் ஒரு பரிமாணமாகக் கொண்டு, இப்பேரண்டமானது வெளி-நேரம் என்ற நாற்பரிமாணத்தால் ஆனது என்கின்றார். ஒவ்வொரு புள்ளியுடனும் நேரமும் இணைந்துள்ளது. பேரண்டத்தினுள் ஒவ்வொரு கணமும் ஏதாவது ஒரு சம்பவம் (நிகழ்வு) நிகழ்ந்து கொண்ட இருப்பதால், ஒவ்வொரு புள்ளியுடனும் ஏதாவது ஒரு நிகழ்வு சேர்ந்திருக்கும். எனவே பேரண்டமானது வெளிநேரம் என்ற நாற்பரிமாணத்தால் ஆகியது, (நியூட்டனின் கருத்துப்படி, வெளியானது முப்பரிமாணத்தால் நிரம்பியது: அத்துடன் நேரம் என்ற பரிணாமமும் இணைய, வெளி-நேரம் என்பது நாற்பரிமாணம் ஆகின்றது) இந்த வெளி-நேரம் என்பது தன்னுள் எங்கும் நிகழ்வுகளைக் கொண்டது என அயன்ஸ்ரைன் தெளிவுபடுத்தினார்.

அயன்ஸ்ரைனின் இந்தப் புது விளக்கமானது பேரண்டம் பற்றிய பல சிக்கல்களை எளிதாகத் தீர்த்ததுடன், பேரண்டத்திற்கும் புது வடிவம் கொடுத்தது. பேரண்டம் ஏன் இப்படியாக உள்ளதெனில் பேரண்டமானது சக்தியாலும் சடங்களினாலும் நிரம்பியுள்ளது. வெறுமனே சடங்களினால் மட்டும் நிரம்பியதாக இருப்பின் முப்பரிமாண வெளியை ஏற்றுக் கொள்ளலாம். சக்தியும் கூடவே உள்ளதால்தான் இந்த நாற்பரிமாண வெளியைக் கருத வேண்டியுள்ளது. சக்தி இல்லாது சடம் இருக்கமுடியாது. சக்தியின் சிறப்பான வடிவமே சடம். (சக்தியின் உறைநிலைதான் (frozen form) சடம் என்றார், நிறுவியும் காட்டினார் அயன்ஸ்ரைன். $E = mc^2$ எனக் கேள்விப் பட்டிருப்பீர்களே! அதுதான் சக்தியிற்கும் சடத்திற்குமான தொடர்பு. E என்பது சடமாக மாறிய சக்தியின் அளவு, m என்பது சக்தியில் இருந்து தோன்றிய அல்லது சக்தியாக மாறிய சடத்தின் அளவு, c என்பது வெற்றிடத்தில் ஒளியின் வேகம்.

வெளி-நேரம் என்ற நாற்பரிமாண வெளியை சக்தியும் சடமும் வளைவுறச் செய்கின்றன. அதனால் இந்த நாற்பரிமாணவெளியானது வளைவுற்றே காணப்படுகின்றது. இந்த வளைவுற்ற நாற்பரிமாண வெளியில்தான் சக்தியும் (ஒளி, வெப்பம், காமா கதிர் போன்றவை) சடங்களும் (விண்மீன்கள், கோள்கள், கலக்சிகள் போன்றவை) பொதுவாக இயங்குகின்றன. இந்த வளைவான நாற்பரிமாண வெளியில் இருக்கும் பொருட்கள் எல்லாம், அவ்விடத்தில் உள்ள வளைவின் தன்மைக்கு ஏற்றவாறாக இயல்பாய் அவ்வளைவில் இயங்கும். இதனைத்தான் ஈர்ப்பு என்பதற்கான புது விளக்கமாக அயன்ஸ்ரைன் கொடுத்தார். இதனை நிறுவியும் காட்டினார். அயன்ஸ்ரைனைப் பொறுத்த வரையில் ஈர்ப்புவிசை என ஒன்றும் இல்லை. ஈர்ப்புப் பற்றிய விளக்கங்களை எனது 'புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள்' எனும் நூலில் தெளிவாகப் பார்க்கலாம். இந்த விபரம்தான் அயன்ஸ்ரைனின் பொதுச் சார்புத் தத்துவத்தில் கூறப்பட்டுள்ளது.

நியூட்டன் எமது பேரண்டத்தினை வெறும் புள்ளிகளைக் கொண்ட நிலையான முப்பரிமாணவெளியினால் ஆனது எனக் கருதித் தனது ஈர்ப்புவிதியினைத் தந்தார். அவரின் காலத்தில் பேரண்டமானது ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் அமைந்தது எனக் கருதப்பட்டது. அந்நிலையில், நியூட்டனின் கருதுகோள்களும், நிறுவல்களும் சொல்ல முடியாத அளவிற்குப் பெரியது என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் அயன்ஸ்ரைன் இன்னமும் ஒருபடி மேலாகச் சிந்தித்து, எமது பேரண்டமானது புள்ளிகளால் மட்டும் ஆனதில்லை, புள்ளிகளுடன் இணைந்த நேரத்தினாலும் ஆன நாற்பரிமாணவெளியினால் ஆனது எனக் கண்டார். ஆதலினால் பேரண்டமானது நிகழ்வுகளைக் கொண்ட விரிவடையும் பெரு வெளி எனக் காட்டினார்.

அயன்ஸ்ரைனின் பொதுச் சார்புத் தத்துவத்தின் மேலோட்டமான விளக்கத்ததைப் பார்த்தோம் எளிய சிந்தனையின் பிரமாண்டமான வடிவம். இதனை முதன்முதலில் அயன்ஸ்ரைன் தனது நிறுவல்களுடன் கூறியபோது, அக்காலத்தின் பெரும் விஞ்ஞானிகளுக்கே விளங்கவில்லை. நேரத்தினை ஒரு பரிமாணமாக அயன்ஸ்ரைன் விளங்கபடுத்தியது அக்காலத்தில் பெரிய புதிராக இருந்தது. ஆம்மட்டில் நேரமானது வெறுமனே பரிமாணம் என்ற கூற்றுடன் பார்த்துக் கொண்டு (ஏற்றுக்) கொண்டதினால், எளிமையானது போலத் தோன்றுகின்றது. பேரண்டத்தின் வடிவத்தினை, அளவினை, மேலும் விஞ்ஞானிகளின் எதிர்காலச் சிந்தனைகளை எல்லாம் முற்றாக மாற்றிவிட்டது, இந்த பேரண்டத்தின் நாற்பரிணாமச் சிந்தனையும் பொதுச் சார்புத் தத்துவமும்தான். இன்று பேரண்டமானது நாற்பரிமாண வடிவமல்ல, இன்னமும் பல பரிமாணங்களைத் தன்னுள் கொண்டது எனப் பல விஞ்ஞானிகள் இன்று எதிர்வு கூறுகின்றார்கள்: பொதுச் சார்புத் தத்துவத்தினை ஆதாரம் காட்டி நிறுவியும் காட்டுகின்றார்கள். (அவற்றினைப் பற்றியும் பார்க்கக் கூடிய நேரம் எதிர்காலத்தில் உங்களுக்கும் எனக்கும் கிடைக்கும் என நம்புகிறேன், நம்புவோம்)

இனி, பொதுச் சார்புத் தத்துவத்தின் அடிப்படையில் கருந்துளையிற்கான விளக்கத்தினை அடுத்த தடவையில் இருந்து தொடர்ந்து பார்ப்போம்.

விளம்பரம் வாசகர்களுக்கு எனது நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்.



**- கனி -**

# மனிதநேயப்பரிசு



சமாதானத்தின்
நிகழ்கால
உலக நாயகன்

எதிரிகள்
என்று யாருமில்லை
என்றுணர்ந்து
எதிரி ஆக்கப்பட்ட
எதிரிகளையும்
ஓடிச்சென்று அரவணைப்பவன்

உன்னைப் போற்றி எழுதிய
எனது
எழுதுகோல் மை காயமுன்னம்

நீ
உலகத்தை
உன்
இதயத்தினுள் எடுத்தாய்

உலகம்
உன்னைத்
தன் இதயத்தினுள் எடுத்தது

ஒன்பது மாத
ஆட்சியிலேயே
உன்னத
உலகப் பரிசைப்பெற்று
வரலாற்று
நாயகனாகிவிட்டாய்

'நோபல்பரிசு'

உயர்ந்த
உன் பண்பின்
அடையாளச் சின்னம்

இனியாவது புரியட்டும்

'உலகக்கிராமம்'
என்பது

'ஒரே இதயம்
ஒரே மனிதம்
ஒரே அன்பு'

எனும்
உன்னத தத்துவத்தை.



**முத்துராஜா**





## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# சிரித்து வாழ முடியவில்லை




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள்.

சிரிப்பு, உடல் ஆரோக்கியத்துக்குரிய ஒரு செயல். உடல் பயிற்சி உடலின் அங்கங்களுக்கு உற்சாகம் தருகிறது. மனப்பயிற்சி, அடக்கம், அமைதி, தியானம் முதலியன மனச்செழுமைக்கு உதவுகின்றன. சும்மாயிருத்தல் கூடச் சுகம்தான். 'சும்மாயிரு சொல் அற' என்றார் அருணகிரிநாதர். "மௌனம் கலக நாஸ்த்தி" என்று ஒரு சமஸ்கிருத சுலோகம் உண்டு. அநியாயங்கள் நடக்கிறபோது சும்மாயிருக்கமுடியுமா? எட்டிப்பார்த்து தட்டி கேட்டு அநியாயங்களை அடக்க வேண்டும். அடிபோட்டு அடக்க முடியாவிட்டால் ஆர்ப்பரித்தாவது அடக்க வேண்டும். அநியாயம் நடக்கும் போது சும்மாயிருப்பது கடவுளுக்கும் ஏற்காது. அநியாயங்களைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருப்பதுவே பாவம் என்கிறார்கள் ஆன்மீகச் செல்வர்கள். என்ன? சிரிப்புப்பற்றிச் சொல்லத்தொடங்கி அநியாயங்கள்பற்றி அடுக்குகிறேன் என்று யோசிக்கிறீர்களா? முன்பெல்லாம் ஒன்றைத் தொட்டால் அதையே தொடர்ந்து முடிக்கும் ஆரோக்கியம் ஆளுமை இருந்தது. எல்லோருக்கும் இன்று அப்படியான மனநிலை இல்லை. இதற்கு மனம் திறந்து சிரித்து வாழாத நிலைதான் காரணம்.

சிரிப்பு சிந்தையை சீராக்கும். சிந்தனையை கூராக்கும். குளித்துவிட்டு சாப்பிடுவது போல் சிரித்து விட்டு சிந்தியுங்கள். பயனான கருத்துக்கள் பளிச்சிடும். சிரிப்பு சூழலை சுத்தமாக்கும். சிரிப்பவர்கள் இருக்கும் இடத்தில் இருக்கவே பலர் விரும்புகிறார்கள். மனம் விட்டுச்சிரித்தால் நரம்புகள் தூண்டப்படுகின்றன. உடல் சமநிலைப்படுகிறது. 'சினம் சேர்ந்தாரைக் கொல்லும்' என்றார் திருவள்ளுவர். சிரிப்பு சேர்ந்தாரைச் சிறக்க வைக்கும். சிரிப்பு ஒரு கிரியா ஊக்கி. சிரித்து சிரித்து வேலைகளைச் செய்யலாம். வேலைகளைச் செய்யும்படி தூண்டலாம். சிரிப்பு பற்றிய கருத்துக்களும் அனுபவ உண்மைகளும் அனேகம் உண்டு. சிரிப்பு பற்றிய நூல்கள் ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும், தமிழ் எனப்பல மொழிகளிலும் வெளிவந்திருக்கின்றன. கட்டுரைகளும் ஏராளம். ஒரு மனிதன் பத்து வயதிலிருந்து இருபது இருபத்தைந்து வயதுக்குள் சிரிப்பு பற்றிய துணுக்குகளையோ கட்டுரைகளையோ படித்திருப்பான். தானும் அத்துணுக்குகள் போன்று சிரிப்புக்கதைகளை சிருஷ்டித்து விட்டிருப்பான். ஊரிலே மாலை நேரத்தில் வாசிகசாலையிலோ, வயல் வரம்பிலோ, திண்ணைகளிலோ, மரச்சோலைகளின் மத்தியிலோ இருந்து கொண்டு எத்தனை சிரிப்புக் கதைகளைப் பேசிப் பேசிச் சிரித்திருப்போம். வயிறு குலுங்கச் சிரிப்பது வயதைக் கூட்டி வாழவைக்கும். இன்று சிரிப்பு ஒரு நடிப்பு அம்சமாகிவிட்டது. இது கவலையை தருகிறது. மனந்திறந்து சிரிப்பாரும் குறைந்து விட்டார்கள். சிரித்து மகிழும் சூழலில் பல வேண்டாத கதைகளை உண்டு பண்ணி பகை வளர்ப்பவர்கள் பெருகிவிட்டார்கள். இவர்கள் மனநோய் பிடித்தவர்கள். இவர்களைக் கண்டால் 'அம்ம, நாம் அஞ்சுமாறே'.

'துன்பம் வந்தால் சிரியுங்கள்' என்கிறார் திருவள்ளுவர். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்பது அவர் போதனை. இது முடியக்கூடிய காரியமா? இன்று உலகில் நடக்கும் துன்ப நிகழ்வுகள் எத்தனை? நமது ஈழம் சுமந்த இன்னல்கள் எத்தனை? துன்பக் கேணி என்றாரே எழுத்தாளர் புதுமைப்பித்தன். நமது மக்கள் துன்பக்கேணியிலல்லவா கிடக்கிறார்கள். முள்ளுக்கேணியிலல்லவா கிடக்கிறார்கள். இதையெல்லாம் கேள்விப்பட்டுக் கொண்டு நாம் சிரிக்க முடியுமா? ஆயினும் சிரியுங்கள் என்கிறது மருதுவத்துறை. கனடாவில் பலகாரியாலயங்களில் சிரியுங்கள் என்று அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். நமது துன்பங்களை ஆற்றிக் கொள்ளவும் பிறர் துன்பங்களைப் போக்கவும் சிரிப்பு ஒரு கருவியாக இருக்கிறது. சிரியாத நாள் எல்லாம் பிறவாநாளே என்கிறது ஒரு மனோ தத்துவம். சிரிப்பதற்குச் சிலருக்குப்பயம். உண்மைதான். சிரித்து காரியத்தை கெடுப்பவர்கள் போல், சிரித்தைப் பார்த்து காரியத்தைக் கெடுப்பவர்களும் இருக்கிறார்கள். ஒரு அனுபவம் நினைவுக்கு வருகிறது. ஒரு ஊரிலே கல்யாண வீடு. சீதனப்பிரச்சினையால் கொஞ்சம் இழுபறிப்பட்டு ஒருவழியாக மாப்பிள்ளையை அழைத்து வந்து மணவறையில் உட்காரவைத்துவிட்டார்கள். வழக்கத்தில் நன்றாகச் சிரித்துவாழும் பெண்ணின் தந்தையார் அன்று ஒரு புன்முறுவலும் காட்டாமல் 'உம்' என்று முகத்தை வைத்துக்கொண்டு நின்றார். என்ன சிரிக்க வேண்டிய நேரத்தில் கவலைக்குறியோடு நிற்கிறீர்களே என்று கேட்டேன். கொஞ்சம் பொறுங்கள் பிள்ளையின் கழுத்தில் தாலி ஏறும் மட்டும் நான் சிரிக்கமாட்டேன். நான் சிரித்தால் தாலியை கட்டாமல் செய்வதற்கு ஒருவன் காத்துக் கொண்டிருக்கிறான் என்றார். என்ன உலகமடா என்று திணறிப்போனேன். இப்படியான வக்கரிப்பு. மனம் படைத்தவர்களாலும் நமது இனத்தின் உரிமைகளும், கோரிக்கைகளும் பின்தள்ளப்படுகின்றன. நமது தோல்விகளுக்கு ஒருசில மட்டும் காரணம் இல்லை. நமது மனிதர்களின் கீழ்த்தரமான மனோநிலைகளும் தான் காரணம். அரசியல் விஞ்ஞானங்களுக்கு அகப்படாத மனிதமனங்களும் நமது பின்னடைவுகளுக்கு காரணம். நிற்க 'நகை உள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும் பண்பு உள பாடு அறிவார் மாட்டு' என்கிறது திருக்குறள். பிறரை இகழ்வதன் மூலம் சிரிப்பை உண்டாக்குவது தவறு. பண்புள்ளவர்கள் பகைவருடன் கூட மரியாதையாகப் பேசுவார்கள் என்கிறார். சிரிக்க வேண்டிய சூழ்நிலைகளில் கூட சிரித்து வாழ முடியவில்லையே என்று ஏங்குவார்கள் பலர். இவர்களுக்கு ஆலோசனை சொல்லவே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

நண்பா! தனிமை மனிதனைக் கலைஞனாக்கும்! இல்லையேல் விசரனாக்கும். இனிது இனிது ஏகாந்தம் இனிது என்றார் ஒருவர். கொடிது! கொடிது! தனிமை கொடிது என்றார் இன்னொருவர். எல்லாமே மனத்தைக் கையாள்வதில் இருக்கிறது. நம்மை நமது கைக்குள் வைத்திருப்பதே ஒரு கலை. எல்லாம் என்கைக்குள் இருக்கிறது என்பவர்கள் சிலர், தம்மைக் கைவிட்டு விடுவார்கள். எல்லா இருந்தும் ஒன்றும் இல்லாதவர் போல் வாழும் பாவிகள் எத்தனைபேர்? இருப்பதை வைத்துக் கொண்டு 'போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்ற திருப்தியுடன் வாழ்பவர்கள் எத்தனைபேர்?

தனிமையில் சிரியுங்கள். தியானம் செய்வதுபோல் யோகா செய்வது போல், தனியாக இருக்கும் போது சிரிப்பை ஒரு யோகா ஆக்குங்கள். எப்படிச் சிரிப்பு வரும் என்று யோசிக்கிறீர்களா? நீங்கள் வாசித்த ஒரு நகைச்சுவை துணுக்கு அல்லது ஒரு வேடிக்கை நிகழ்வு சில மனிதர்களின் கோணங்கிக் கூத்து. இவற்றில் ஏதாவது ஒன்றையோ, இரண்டையோ மனத்தில் தேக்கி வைத்திருந்து, தனிமையாக இருக்கும் போது நன்றாக வாய்விட்டு, மனந்திறந்து சிரியுங்கள். இது ஒரு ஆரோக்கிய முயற்சி. காலையில் எழுந்ததும் உண்டாகும் சோம்பலை, வெறுப்பை, சஞ்சலத்தைப் போக்க ஒரு சிரிப்பை வைத்திருங்கள். கோப்பி குடிக்க இரண்டு டொலரை வைத்திருப்பது போல் காலையில் சிரிக்க என்று ஒரு துணுக்கை வைத்திருக்க முடியாதா? டொலர் இருப்பது மனதுக்கு திருப்திபோல் சிரிப்பு இருப்பது மனதுக்கு தெம்பு. தனிமைச்சிரிப்பு உசாரை உண்டாக்கும். தனிமையில் சிரிக்கும்போது யாராவது பார்த்துவிட்டால் என்று பயப்படாதீர்கள். அவர்கள் உனக்கு தலை சரியில்லையா? என்று கேட்டால் அதையே நகைச்சுவை துணுக்காக எடுத்துக்கொள்ளுங்கள். இதன் பிறகும் அவர் ஏதாவது சொன்னால் இது யோகா போன்று, தியானம் போன்று ஒரு பயிற்சிமுறை என்று சொல்லுங்கள். அவர் உங்களைப் பின்பற்றுவார். சிரிப்புத்துணைக்கு நண்பராகுவார். இப்படிச் சிரிப்பதால் நரம்புகள் நன்றாக வேலை செய்யும். நினைவாற்றல் பெருகும். வயிற்று நோய்கள் விடைபெற்றுக்கொள்ளும். நமது கடமைகளைச் செய்ய சக்தி உண்டாகும். களைப்பு நீங்கும். மன அழுத்தம் கழன்று போகும். அமைதி பிறக்கும். மனதுக்குள் ரசாயன மாற்றம் உண்டாகும்.



கிருஷ்ணா-மதுரதுக்குச் சிரித்தவர்கள், தங்கவேலுவுக்குச் சிரித்தவர்கள், சந்திரபாபுவுக்குச் சிரித்தவர்கள், பாலையாவுக்குச் சிரித்தவர்கள், நாகேஷ்சுக்கு சிரித்தவர்கள், குலதெய்வம் ராஜகோபாலுக்கு சிரித்தவர்கள், வடிவேலுக்கு சிரித்தவர்கள், விவேக்குக் சிரித்தவர்கள், செந்திலுக்குச் சிரித்தவர்கள், கவுண்டமணிக்கு சிரித்தவர்கள், சுருளிராஜனுக்கு சிரித்தவர்கள், ஜனகராஜுக்கு சிரித்தவர்கள், அங்கமுத்துவுக்கு சிரித்தவர்கள், மனோராமாவுக்கு சிரித்தவர்கள், கோவை சரளாவுக்கு சிரித்தவர்கள் தங்கள் வாழ்க்கை வழிகளில் காணும் நகைச்சுவை துணுக்குகளைச் சேகரித்து தன்னந்தனியாகச் சிரித்தால் என்ன?


நண்பா! இதை வாசித்ததும் சிரிப்பு வருகிறதா? சிரியுங்கள்? வேறு என்ன?

பிற பின்பு



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -

(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)


திவ்ய ஆற்றுக்கால் தேவி ஜோதிடம்

ஜாதகம் கணித்தல், திருமணப்பொருத்தம், கல்வி,
குழந்தைப்பேறு, திருமணத் தடை நிவர்த்தி.
அழையுங்கள்: மீனாட்சி சுந்தரம் R.
Phone - 416.439.2002
67 Milford Haven Drive,
Scarborough, ON. M1G 3C9 Canada.
Attukaljothidam@gmail.com



208

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



ஊரொடு ஒத்து வாழ் என்பார்கள்.
உலகர் குழாம் கியூவில் நின்றதைப் பார்த்து எல்லோரும் சிரித்தனர். பன்றிக்காச்சல் தடுப்பூசி எனக்கு வேண்டாம். 'நான் என்ரை வாழ்க்கையிலை ஒரு ஊசியும் போடுறேல்லை' என்றவர்களும் நாளுக்கு நாள் அதன் பாதிப்பையும் விளைவுகளையும் கண்டு தங்கள் மனதை மாற்றிக்கொண்டனர்.



'உலகண்ணை ஊசி போட்டால் உடம்பெல்லாம் வீங்குமாம் கை தடிக்குமாம்' என செக்கண்ட்புளோர் செல்லம்மா கேட்க 'வீங்கினா என்ன தடிச்சா என்ன ஊசி போடத்தான் வேணுமெண்டு' குழந்தைகளை அதட்டுவது போல அதட்டினா ஆட்டிலறி அன்னம்மா.

படிக்கும் காலத்தில் ஊசி போடவரும்பொழுது உலகர் தாமோதரம் பள்ளிக்கூட ஏரியாவை விட்டு ஓடியொளித்த காலங்கள் உலகருக்கு நினைவு வந்தது..

..அந்தநாள்.. ஞாபகம்.. நெஞ்சிலே வந்ததே..
நண்பனே.. நண்பனே.. நண்பனே..எத்தனை நினைக்கக்கூடிய நினைவுகள் எத்தனை மறக்கமுடியாத பள்ளி நினைவுகள். உலகருக்கு படித்தது ஞாபகம் இருக்கிறதோ இல்லையோ படித்தகால திருவிளையாடல்களை மறக்கவில்லை.



திடீரென்று பனிகொட்டியதில் உப்பெங்கே பனி வழிக்கும் மெசினெங்கே என்ற அமளிதுமளி..

ரூபனும் ரூபியும் வேலை சம்பந்தமாக பிறாம்ரனுக்கு மாறியதிலிருந்து உலகருக்கு வெளியே திரிவது பெரிய கஸ்டம். கார் வசதியில்லை..



ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் துணுக்காய் வவுனிக்குளம் மன்னார் திருக்கேதீஸ்வரம் மட்டக்களப்பு கொழும்பு கதிர்காமம் என தகப்பன் கந்தருடனும் தனித்து அல்லது அவரது கோஸ்டிகளுடனும் சி.ரி.பி. பஸ்சில் குலங்கக்குலங்கச்சென்ற உலகருக்கு இந்த பஸ்சில் செல்ல முடியவில்லை. நின்றால் காலுழைவு நடந்தால் மூச்சு வாங்கும் இடைக்கிடை ஆட்டிலறி அன்னம்மா உலகரில்லாத நேரங்களில் உலகண்ணை வெளியிலை நடந்தா மூச்சுவாங்குவர் வீட்டுக்குள்ளை வந்தா ராசம்மாக்காவிட்டை பேச்சு வாங்குவர் என சொல்லிச்சிரிப்பா.



இன்னும் 2 வாரத்தில் புதுவருடம். வானத்தில் எத்தனையோ லடசக்கணக்கில் செலவிட்டு வான வேடிக்கைகள். ஆனால் நம்மவர் இதுவரை நிகழ்ந்த போரில் எத்தனை குண்டு வேடிக்கைகளைப் பாத்திருப்பார்கள்.



ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக்கொண்டாட்டம் என்னபர்கள் இப்போ ஜனாதிபதித்தேர்தலுக்கு இரண்டுபட்டிருக்கும் அன்றைய ஜனாதிபதியும் அழிப்புத்தளபதியும் இல்லை ராணுவத்தளபதியும் மறைந்தபல உண்மைகளை மேடைகளில் பேசத்தொடங்கிவிட்டனர். மலிந்தால் சந்தைக்குவருமென்பார்கள். ஆனால் மலிய முதலே விடயங்கள் கசியத்தொடங்கிவிட்டன..



மார்கழி மாதம் மதிநிறைந்த நன்னாளில் நீராடப்போதுவீர் போதுவீரோ?

மழைவெள்ளத்திலேயே மக்கள் மூழ்கிக்கிடக்கிறார்கள். எங்கே நீராடப்போவது?

# "கொஞ்சம் நில்லுங்க, மெல்லக் கேளுங்க..."

"இந்த இசை மட்டும் இல்லை என்றால்..
நான் என்றோ, என்றோ இறந்திருப்பேன்...."
"அலை பாயுதே" திரைப்படத்தில் வரும் பாடல் ஒன்றின் நிற்க வைக்கும் வரி!

காலங்காலமாக நம்மை பின் தொடரும் தமிழ்த் திரைப்படப் பாடல்கள்.
எந்த சொந்தம் பிரிந்தாலும், எந்த நட்பு ஒதுக்கினாலும், என்றும் எம்முடன் ஒட்டிக்கொள்ளும் கீதங்கள்!

இந்தப் பாடல்கள் இல்லாமல் நம் வாழ்வு எப்படி இருக்கும்?
வாழ்க்கையில் அக்கம் பக்கம் பார்க்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருக்கும் நம்மை எந்தப் பாடல் "கொஞ்சம் நில்லுங்க, மெல்லக் கேளுங்க.. "
என்று சொன்னது?

அண்மையில் நான் கேட்டு சொக்கிய(!?) பாடல்:
"உன்னாலே உன்னாலே" படத்திலிருந்து : June போனால் July காற்றே....
(Yo, 2006இல் வந்த படம் /பாட்டு.. என்ன tube light, என்று நீங்கள் சொல்வது கேட்குது!)
Life பர பர என்று இருக்கும் போது, நிறைய விடயங்களை miss பண்ணி விடுகிறோம். அதில் இதுவும் ஒன்று என்று வைத்துக் கொள்ளுங்களேன்!

முதலாவது சரணம்:
அறைக்குளே மழை வருமா, வெளியே வா குதூகலமாய்...
இந்த பூமிப் பந்து, எங்கள் கூடைப் பந்து.....
அந்த வானம் வந்து, கூரை செய்ததின்று.....
கறை இருக்கும், நிலவினை சலவை செய்....
சிறை இருக்கும், மனங்களை பறவை செய்..
எந்த மலர்களும் கண்ணீர் சிந்திக் கண்டதில்லை...

அனுபவங்கள் உன்னைத் தேடி வராது..




**- கிறிஸ்ரி-**

அவற்றை நாம் தான் தேடிப் போக வேண்டும் என்கிறது பாடல். சில சமயங்களில், பலருக்கு வீட்டுக் கதவைத் திறந்து வெளியே வந்தாலே போதும் என்று இருக்கிறது. நான் படித்த "Seven Types of Ambiguity" (by Elliot Perlman) என்ற புத்தகத்தில், வீடு செல்ல விரும்பாத பிள்ளைகள் தான், பள்ளி முடிந்த பின்னும் schoolஐயே சுற்றிச் சுற்றிச் வருவார்கள் என்கிறார் ஆசிரியர். (உண்மையா?).

வாழ்க்கை நம்மில் பலருக்கு "சிம்மசொப்பனமாகத்தான்" இருக்கிறது. சில, பல வேளைகளிலே, எல்லோரும் ஏன் நமக்கு எதிரியாக செயல்படுகிறார்கள் என்று எண்ணத் தோன்றும்.

சில நாட்கள் மூச்சு முட்டும்!
அப்போதெல்லாம், "மௌனராகம்" படத்தின் ஒரு காட்சி நினைவுக்கு வரும்.
'கார்த்தி'க்கை police stationக்கு கூட்டிச்செல்ல Inspector வாருவார்.
"இண்ணைக்கு மட்டும் விட்டுரு, நாளைக்கு நானே Station வந்து Surrender ஆகிறேன்", என்பார் கார்த்திக்.

(ஏனென்றால் ரேவதியை Register Marriage செய்து கொள்ள வேண்டிய நாள் அது).
ஆனால் Inspector, "நீ மட்டும் இப்போ வரலை... நாயைப்போல தெருத்தெருவா இழுத்துட்டு போவேன்", என்பார். நம்மில் பலருக்கு வாழ்க்கை அப்படித்தான் இருக்கிறது. கையெடுத்துக் கும்பிட்டாலும், வாழ்க்கை நம்மை "வதம்" செய்துவிட்டுதான் நகருகிறது!

யாருமே ஆறுதல் சொல்ல இல்லையே என்ற எண்ணம் வரும் போதெல்லாம், சற்று வெளியே வாருங்கள், கதவைத் திறந்து!
இயற்கையை
ரசியுங்கள்! காற்று வாங்குங்கள்! இந்தப் பாடலை கேளுங்கள்!!

இரண்டாவது சரணம்:
இருப்போமா வெளிப்படையாய், சிரிப்போமா மனக்(மலர்க்!?) குடையாய்...
சிற்பி விரல்களும் சிலை செதுக்குமே,
பெண்ணின் விழிகளும் நம்மைச் செதுக்குமே...
ரொம்பக் காதலை இந்த பூமி கண்டிருக்கும்,
பல மாற்றங்கள் வந்து, வந்து போயிருக்கும்....
இந்த உலகத்தில், எவனுமே ராமனில்லை
(No comments!)

பாடல் வரிகள்: பா. விஜய்
இசை: ஹரிஸ் ஜெயராஜ்
பாடியவர்கள்: கிருஷ், அருண்

புரியாத புதிரான இந்த வாழ்வை இலகுவாக்குவது எப்படி?
....நேற்று என்பதும் கையில் இல்லை, நாளை என்பதும் பையில் இல்லை...
இன்று மட்டுமே நெஞ்சில் மிச்சம் உண்டு..,
என்று வாழ்ந்து பார்க்க முடியுமா நம்மால்?
முயன்று பார்ப்போம்!!
பாடல் உங்கள் நெஞ்சம் வரை வந்து, கதவு தட்டியதா ....சொல்லியனுப்புங்கள்!

■ IMPORTANT INFORMATION ■ RENSEIGNEMENTS IMPORTANTS ■

# "I encourage every Canadian to get the H1N1 flu vaccine."

Dr. David Butler-Jones
Chief Public Health Officer of Canada

- **Getting vaccinated is a safe and effective way to protect yourself and others against the H1N1 flu virus.**
- **Canada has enough vaccine for everyone.**



# « J'encourage tous les Canadiens à recevoir le vaccin contre la grippe H1N1. »

Dr David Butler-Jones
Administrateur en chef de la santé publique du Canada

- **La vaccination est un moyen sûr et efficace de vous protéger et de protéger vos proches contre le virus de la grippe H1N1.**
- **Le Canada a suffisamment de doses de vaccin pour tout le monde.**

**For information on flu clinics throughout your province go to www.ontario.ca/flu or call the ServiceOntario INFOline at 1-800-476-9708.**

**Pour des renseignements sur les cliniques de vaccination contre la grippe de votre province, allez au www.ontario.ca/grippe ou appelez la Ligne INFO de ServiceOntario au 1-800-476-9708.**

**For more information about the H1N1 flu vaccine**
visit
**www.fightflu.ca**
or call
**1 800 O-Canada (1-800-622-6232)**
**TTY 1-800-926-9105**

**Pour en savoir plus sur le vaccin contre la grippe H1N1**
visitez
**www.combattezlagrippe.ca**
ou composez le
**1 800 O-Canada (1-800-622-6232)**
**ATS 1-800-926-9105**

Public Health Agency of Canada
Agence de la santé publique du Canada

Canada

# உனது ஆன்மா தான் உனது வாழ்வின் சாரதி

**அன்பானவர்களே!**

பிரச்சனையற்ற வாழ்வு எவருக்குமே அமைவதில்லை. அடுத்து உனக்கு வரப்போகும் பிரச்சனையை எதிர்கொள்ளப் பயந்து கொண்டிருக்கும் போது நீ அதை வெற்றிகரமாகச் சமாளித்திட இதோ ஒரு சுவாரஸ்யமான தகவல்.

வாழ்வில் உனது மூலாதாரமான உனது ஆன்மா தான் சாரதி. உடலும் மனமும் சேர்ந்த உனது ஆளுமை - வெறும் பிரயாணி மட்டும்தான். ஆனால் ஆளுமைதான் மிகமிக முக்கியமானது எனப் பிழையாகப் பலர் தப்புக்கணக்கு போடுவதுண்டு. இதனால் ‘எனது ஆளுமைத் தகுதிக்கு இது சரிப்பட்டுவராது என்றபடியால் இதை என்னால் செய்ய முடியாது’ எனும் தவறான எண்ணத்தினால் பலர் தடுமாறித் தத்தளிப்பார்கள். ஐயோ பாவம்! வாழ்வின் சாரதியான ஆன்மாவின் ஆலோசனையையும் வழிகாட்டலையும் பின்பற்றாது பிரயாணியை மட்டும் பின்தொடர்வதால் அவர்கள் தம் பயணத்தில் வழி தவறி தொலைந்து போவது நிச்சயம். வாழ்வில் மாற்றங்கள் செய்ய வேண்டிய நேரம் வரும்போது கார்ச்சாரதியின் பின்பக்கமிருந்து தேவையில்லாமல் குறுக்கிடுபவரைப் போல் ஆளுமை, நாம் கோராவிடினும் தன் குரலை உயர்த்தி ‘இப்படித் திரும்பு, அப்படிப் போ’ என வழிகாட்ட முற்படும். எப்பொழுதும் கேள்வி கேட்டபடி, எப்பொழுதும் எச்சரித்த வண்ணம் தொல்லை கொடுத்துக் கொண்டேயிருக்கும். உனது குறிக்கோளின் மையத்தில் உனது மனதைக் குவித்து கவனமாயிருக்காவிட்டால் இந்த ஆளுமையின் குறுக்கீட்டு வளவளப்பினால் நீ பிழையான திருப்பங்களை எடுத்து தவறான பாதையில் செல்லலாம். ஜாக்கிரதை!

வாழ்வெனும் உனது யாத்திரையின் ஒரேயொரு வழிகாட்டி உனது ஆன்மா தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஆளுமை போல் உரத்த குரலில் உன் ஆன்மா பேசுவதில்லை. நீ விரும்பிக் கேட்டால் மட்டுமே உன் ஆன்மா உனக்கு வழிகாட்டும். எதை எதை எப்போ செய்திட வேண்டும், உன் செயல்களின் பெறுபேறுகள் என்ன எனும் சகலதும் உன் ஆன்மாவிற்கு நன்கு தெரிந்தபடியால் நீ வழிதவறித் தொலைந்து விடுவாய் என்ற கவலை அதற்கு இல்லை. நீ எப்போ பயணிக்க வேண்டும், எப்போ இளைப்பாற வேண்டும், காலநிலைக்கேற்ப எந்தப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும், எப்போது பயணத்தை முடிக்க வேண்டும் என்பதும் உன் ஆன்மாவிற்குத் தெரியும். சொகுசுப் பேர்வழியான உன் ஆளுமைக்கு சுலபமான பிரயாணம் மட்டுமே விருப்பம். ஆனால் ஆன்மாவோ உனது சொகுசைப்பற்றியோ சுகத்தைப் பற்றியோ அவ்வளவு கவலைப்படுவதில்லை. உனது சரிவிகித பூரண வளர்ச்சியின் போஷணையைத்தான் முக்கியமாக உன் ஆன்மா கண்காணிக்கிறது.

உனது ஆளுமை இதுவரை தவறான பாதையில் உன்னை வழிநடத்தியிருக்கலாம். ஆளுமை உன்னை எவ்வாறு வழிநடத்தியிருகிறது என்பதை அறிந்திட இன்று உன்னையும் உன் நடவடிக்கைகளையும் துல்லியமாக அலசி





ஆராய்ந்து பார். உனது தவறுகளை உணர்ந்து, இறைவன் விரும்பிடும் தார்மீகப் பாதையில் முன்னேறிட உனக்கு உதவி வழிகாட்டுமாறு உனது ஆன்மாவை இறைஞ்சி வேண்டிக்கொள்.

**வாழ்வின் சாரதியாம் எனது ஆன்மா சகலதும் அறிந்த சக்தியாய் எனக்குக் காட்டிடும் தார்மீகப் பாதையில் இன்றுமுதல் யாத்திரை செய்ய நான் தீர்மானித்துக்கொள்கிறேன்.**

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

160

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



**லலிதா புரூடி**



NuTeK COMPUTERS
www.nuTechComputer.com

- Virus Removal
- Internet Sharing
- Computer Tune Up
- Computer Repair

அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்

416.587.1619
techsupport@nutechcomputer.com

Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional

SALES - SERVICE - UPGRADES



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க

எந்தவித அடமானக் கடன்களும் பெற

Direct - 416.575.5055

Anton Jeeva
Real Estate / Principal Mortgage Broker

RE/MAX

FOR SALE
$358,000



- 27 Brimstone Cres
- Middlefiels & Finch
- 3+1 bedroom
- 3 washrooms
- 1 kitchen
- Detached house 2-Storey

For Sale
$284,900



- Markham/ Lawrence
- Semi-Detached Bungalow
- 4 bedrooms • 3 washrooms
- 2 Stoves, Fridge, All Window Coverings, All Electric Light Fixtures. Gas Burner ...

FOR SALE
$569,900



- 2411 Canal Rd E
- Simcoe Rd To Canal E
- 2 + 2 Bedrooms
- 2 Washrooms
- 2 Fridges, 2 Stoves, Washer, Dryer, All Elf, All Window Coverings. Farm Equipments Are Available At Reduced Cost.

Condo. for Sale
$334,900



- Midland & Lawrence
- Bedroom : 3+1
- Washroom : 3
- All Elfs, Fridge, Stove, Washer&Dryer, B/I Dishwasher, All Window Coverings.

FOR SALE
$6.5 Million




- HWY 401& Markham
- Height #189-16' To Joists , #195-14' To Joists , Truck Loading Docks And Grade Level Docks Available. Tons Of Parkings Available.

For Sale
$654,900



- Islington & Rutherford
- Detached, 2-Storey
- Bedroom : 4 + 1
- Washroom : 5 • All Window Coverings , Gas Stove, Fridge , Washer , Dryer , B/I Dishwasher

NEW TORONTO ICE CONDO. PHASE II




For Sale
$299,900



- 35,000 sq.ft
- Hwy 7 & Marmora
- Very Large Frontage On Hwy 7 , Price Includes All Fixtures & Furnishings. Rooms Are Rented On Weekly / Biweekly Basis.

Mortgages & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO

REMAX VISION REALTY INC.

Speciallized in Power of Sale Homes

MAX 2000

குளிர் கால சுற்றுலா Disny World வரை

மார்கழி 27இல் இருந்து 2010 தை 3 வரை 8 நாட்கள் 7 இரவுகள்

பசுமையான பழைய நினைவுகளை நினைவூட்டும் பழைய புதிய Karaoke பாடல்களுடன் சுவாரசியமான சொகுசு பயணம்.
பாடும் வல்லமை படைத்தவர்களை நிச்சயமாக அன்போடு வரவேற்கின்றோம்.
பயணத்தில் பயணிகளை மகிழ்ச்சிப்படுத்தி மகிழ்விப்பவருக்கு தகுந்த பரிசும் வழங்கப்படும்.
மலரும் புதிய ஆண்டினை அழகிய அலங்கார ஒளிக்கதிர்களை யும் வான வேடிக்கைகளையும் கண் குளிர கண்டு மகிழ ஒரு முறை வந்து பாருங்கள். எவ்வளவு மகிழ்ச்சியான பயணம் என்று.




1. **வேர்ஜினியா**வில் Luray Caverns (குகை), இயற்கைக் காட்சிகள்.
2. **யோஜியாவில்** உலகிலேயே மிகப் பெரிய மீன் தடாகம்
3. Orlando Disney World (மூன்று நாட்கள்)
4. Daytona Beach
5. South Carolina Sight Seeing
6. Pennsylvania - Grove city outlet mall. Shopping Center

பத்து வயதுக்கு குறைந்த குழந்தைகளுக்கு $250 மட்டுமே. சிறுவர்கள் கட்டாயமாக அவர்கள் பெற்றோருடன் தங்கவேண்டும்.

தை 03ஆம் திகதி இரவு பத்து மணிக்கு முன்பதாக Toronto வை வந்தடைவோம்
விலை விபரம் : தங்குமிடம், பேருந்து, காலை உணவு உட்பட நான்கு பேர் தங்குவதாயின் நபருக்கு : $490/ மூன்று பேர் தங்குவதாயின் நபருக்கு : $580 / இரண்டு பேர் தங்குவதாயின் நபருக்கு:$640 / ஒரு King கட்டில்.

இந்தியச் சுற்றுலா - 15 நாட்கள்

கனடிய குளிர்காலத்தை முன்னிட்டு AVM MAX 2000 நிறுவனத்தின் இந்திய சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா ஸ்தலங்கள் சென்னை, காஞ்சிபுரம், மகாபலிபுரம், பாண்டிச்சேரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, செட்டிநாடு, பெரியார், கொச்சின் மற்றும் படகுச் சவாரி, விமான கட்டணம் (போய்வர), தங்குமிடம், 3 வேளை உணவு, Shopping, உள்ளூர் Transit மற்றும் 24 மணிநேரமும் தமிழில் உரையாடக்கூடிய தமிழ் கனடியன் சுற்றுலா வழிகாட்டியுடன் (Tourist Guide) ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

Price $2999. Date - December 5 to December 20. 2009.

மேலதிக தொடர்புகளுக்கு AVM MAX 2000

விபரங்களுக்கு: 416-609-2542